கலாநிதி, பண்டிதர்

ம. செ. அலெக்சாந்தர்

அவர்களின்

பாராட்டு விழா மலர்

07-09-2003



# அலெக்சாந்திரம்

# கலாநிதி ம. செ. அலெக்சாந்தரின் பாராட்டு விழாவிற்கு நிதியுதவியோர்

திரு. S. ராதா, R& S Auto Sales Inc.
திரு. மனுவல் யேசுதாசன், சட்டத்தரணி
திரு. பி. கயிலாசநாதன், சட்டத்தரணி
திரு. ஆர். புஷ்பகாந்தன், Real Estate Sales Rep.
திரு. அன்ரன் பிறின்ஸ்லி, Jenny Auto Sales
திரு. சங்கர் மாணிக்கம், CDN Business Service Inc.
திரு. பொ. கனகசபாபதி
திரு. இ. வே. செல்வரத்தினம்
திரு. வ. திவ்யராஜன், Mega Financial Services
திரு. வி. கந்தவனம்
திரு. எஸ். திருச்செல்வம், 'தமிழர் தகவல்'
திரு. எஸ். பத்மநாதன்
திரு. M. C. S. சந்திரபோஸ்
திரு. P. N சூசைதாசன்
திரு. கதிர் துரைசிங்கம்
திரு. R. N. லோகேந்திரலிங்கம், 'உதயன்'
திரு. வீ. துரைராஜா
திரு. குரு. அரவிந்தன்
திரு. ரஞ்சன், Windstar Auto Collission
திருமதி அன்னலட்சுமி இராசையா
திரு. A. நடராசா
திரு. ஐ. சண்முகநாதன்
திரு. ச. அந்தோனிப்பிள்ளை
திரு. V.S. துரைராஜா, Mega Financial Services
திரு. இ. சங்கரப்பிள்ளை
திரு. லங்கா மகேந்திரராஜா
செல்வி எஸ். குழந்தைவேல்
திரு. T. P. சிவானந்தமூர்த்தி
திரு. தங்கராசா சிவபாலு
திரு. கனக மனோகரன்
திரு. கா. பூபாலசிங்கம்
திருமதி வதனி திருமுகம்

# அலெக்சாந்தம்

கலாநிதி, பண்டிதர் ம. செ. அலெக்சாந்தர்
அவர்களின்
பாராட்டு விழா மலர்

ரொறன்ரோ, கனடா
07-09-2003

# மலரிதழ்கள்


1. முன்னுரை 3
2. இறை வணக்கம் 4
3. அன்பே சிவம் + நன்றே வாழ்க 5
4. கலாநிதி அலெகசாந்தர் 6
5. விழாநாயகரின் சிறப்பியல்புகள் 8
6. கல்விச் சிகரம் 10
7. ஒரு மாணவியின் அன்புக் கடிதம் 13
8. அறுகு 14
9. நான் கண்ட ம. செ. அலெக்சாந்தர் 16
10. என்னைப் பாட்டெழுத வைத்தவர் 19
11. கம்பனும் புகழேந்தியும் கலந்த கலாநிதி 20
12. கலாநிதியின் உயர்ச்சிக்கான உந்து சக்தி 21
13. To Whom it May Concern 24
14. அனைவரையும் அரவணைக்கும் அலெக்ஸ் 24
15. தலையாய சான்றோன் 25
16. தமிழ் வீரர் 25
17. எப்பொருள் நோக்கினும் மெய்ப்பொருள் காண்பவர் 26
18. பணித்தளத்தில் கலாநிதி எம். எஸ். அலெக்சாந்தர் 30
19. கலாநிதியுடன் எனது பணியும் சிறந்த அனுபவமும் 32
20. எனது அன்பான பாராட்டுக்கள் 33
21. காலம் தந்த பரிசு 34
22. கலாநிதிக்கு என் சிறு கவித்துளிகள் 34
23. 'மகா' மனிதர் 35
24. அன்பின் உறைவிடம் 37
25. நல்லாசிரியர் இலக்கணம் 36
26. எங்கள் அலெக்ஸ் 39
27. தமிழால் உயர்ந்தோர் 40
28. Message and Blessing 41
29. குணநலம் மிக்க பெருந்தகை 42
30. உள்ளத்தால் உயர்ந்தவர் 43
31. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு 44
32. மாணவரின் வழிகாட்டி 46
33. புலம்பெயர்ந்த மண்ணிலும் தமிழ் வளர்க்கும் பாவலர் 47
34. இன்னுமொரு சித்தர் 49
35. கலாநிதி பற்றி அறிந்ததும் அறியாததும் 50
36. முத்துக்கிழவா முருகா 51
37. அன்புக் கடிதங்கள் 52
38. வாழ்க்கை வரலாற்றில் பண்டிதர் – கலாநிதி அலெக்ஸ் மாஸ்டர் 53

# முன்னுரை

'வாழ்க்கைக்காகக் கற்றல் - வாழ்க்கை முழுமையும் கற்றல்' என்று கல்வியால் உயர்ந்த ஒரு பெரியாரை வாழும்போதே கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மலர் விரிந்துள்ளது - வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து தன் விடாமுயற்சியினாலும், அயராத தேடலினாலும் தன்னை உயர்த்திக் கொண்டு சமூகசேவையிலும், கல்விச் சேவையிலும் தன்னைப் பிணைத்துக் கொண்டு வாழும் ஒரு கல்விமானின் வாழ்க்கையின் பக்கங்களில் சிலவற்றை உங்கள் கண்களின் முன் இந்த மலர் விரித்துள்ளது.

கல்வியைத் தனது தேடலாக்கிய திருவாளர் எம்.எஸ். அலெக்சாந்தர் அவர்களை அமெரிக்க உலகப் பல்கலைக்கழகம் கலாச்சார கலாநிதிப் பட்டத்தினை வழங்கி இன்று கௌரவித்துள்ளது. இதைப் பாராட்டும் முகமாகவே இந்த மலரினை நாம் வெளியிடுகின்றோம். இம்மலரில் அவரது மாணவர்களும், உறவினர்களும், நண்பர்களும் அவரைப்பற்றி பல்வேறு கோணங்களில் நின்று எழுதியுள்ளனர். அவரது எல்லா அம்சங்களைப் பற்றியும் எழுதுவதற்கு இந்தச்சிறிய மலர் இடங்கொடுக்காதவிடத்தும் அவர் பற்றிய முக்கியமான பல அம்சங்களை இம்மலர் மணம் வீசச் செய்கிறது.

திருவாளர் எம்.எஸ். அலெக்சாந்தர் அவர்களது நீண்டகால ஆசிரியப்பணியும், ஆசிரிய பயிற்சிப் பணியும் தமிழ்ப்பணியும், அவர் பெற்றுக்கொண்ட தகைமைகள், அறிவாற்றல், அனுபவம் இவையனைத்துமே அமெரிக்க உலகப் பல்கலைக்கழகம் தமிழ்க் கல்விக்கான கலாசார கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்க காரணங்களாயின. தகுதிகண்டு இவரைக் கௌரவித்து தொடர்ந்தும் தமிழ்ப்பணி சமூகப்பணி ஆற்றுவதற்கு உற்சாகமூட்டிய பல்கலைக்கழகத்திற்கு எமது நன்றிகளையும் பாராட்டுதல்கைளயும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்க்குழு

# இறை வணக்கம்

## நேரிசை வெண்பா



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதிநீ! எல்லாம் நீ! தானறிவோம் - மேதினியில்
எம்மதமும் எப்பொருளும் ஈசனுக்கு ஏற்பதுபோல்
சம்மதந்தான் தந்தாய் சரண்.

பிள்ளைக்குத் தந்தை அமைவதுபோல் எவ்வுயிரும்
கொள்கின்ற தந்தையே குணம் போற்றி - தெள்ளமுதின்
சொல்லே ஓம் சொற்றுணையே சோதி வடிவான
நல்நாதம் நாடுகிறோம் நாம்.

எங்கும் இருக்கும் இறைசித்தம் ஏதெதுவோ!
இங்கும் இடம்பெறுக என்றென்றும் - தங்குலகில்
அன்றன்று வேண்டும் அருவுணவு தந்திடுக
என்றும் பிறர்க்குதவ என்று.

எம்மட்டில் குற்றம் எவர்செயினும் மன்னிக்க
எம்மனத்தை ஆக்கி அருள்பொழிக - நம்குற்றம்
அவ்வாறே மன்னித் தருள்தந்து மீட்பளியும்
இவ்வாறு வீடுபேறு ஈந்து.

வாழ்வில் வருபாவச் சோதனையிற் காத்திடுக
தாழ்வுதரும் கேட்டிநின்றும் மீட்டிடுக - காழ்ப்பின்றி
சாதிக்கும் வெற்றிதரும் சக்திநூல்கள் நாமெழுத
நாதமே நல்லருளை நல்கு.

எங்கும் நிறைந்தவனே! எல்லாம் அறிந்தனே!
எங்கனும் வல்லவனே! எம் இறையே - பொங்கும்
வழிசத்யம் தந்த மறையெல்லாம் ஆன
ஒளிமுதலே உம்மில் சரண்.

– ம. செ. அலெக்ஸ்சாந்தர்

# அன்பே சிவம் + நன்றே வாழ்க

உலகப் பல்கலைக் கழகம் பல்லின மக்களையும் கவனித்துக் கணித்து கலாநிதிப் பட்டமும் வழங்கிக் கொண்டிருக்கும் இக்காலத்திலே பல்கலாச்சாரக் காவலராக இவ்வுலகத்திலேயே முதன்மை பெற்றுத் திகழும் கனடா நாட்டிலே தமிழ் மக்களிடையே சிறந்த கலைவளம் பொதிந்த சேவையாளராக மிளிரும் பண்டிதரும் ஆசிரியரும் ஆகிய மனுவல்பிள்ளை செல்வராசா

**திரு. அலெக்சாந்தர் அவர்களுக்கு**

கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்திருப்பதைக் கண்டு பேரானந்தம் பெற்றாராக அவர்களை மனமார வாழ்த்தி வழங்கிய

## ஆசி உரை

'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பதும் 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதும் தமிழ் மொழியில் எவரும் அறிந்த பழமொழிகள். அவை ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்களின் மூலவளங்களையும் தேட்டவளங்களையும் தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டி வருகின்ற முதுமொழிகள். தமிழ் மொழி இலக்கியங்களையும் இலக்கணங்களையும் நன்கு கற்றவர்கள் திருக்குறளையும் நன்னூலையும் ஐயந்திரிபுகளறக் கற்றவர்களாகவே திகழ்வார்கள். ஆதலால் மனித விழுமியங்கள் அனைத்தையுமே அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலாகச் சொரிந்துள்ள திருக்குறளில் அகரமுதல உயிர் எழுத்துக்களில் ஆரம்பித்துள்ள

அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு
ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையான் உழை
இன்சொலால் ஈரம் அளைஇப் படிறலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்
ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு
உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் ஊளன்
ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது ஞற்றுபவர்
எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியாந் திண்ணியராகப் பெறின்
ஐயப்பாடாது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோடொப்பக் கொளல்
ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்
ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்து செய்ய:.தே முறை

எனக் கடைப்பிடித்து வாழ்ந்தவரும்

ஔவையார் கண்ட அருங்குறள் ஆதாரச்செவ்வை முப்பாலின் சீர் என உள்ளுணர்ந்து சேவைபுரிந்தவரும் ஆகிய ஆசிரியரும் பண்டிதருமே **கலாநிதியாக** நிறைவுற்றார். நூலே நூலோர் நுவலும் திறனே கொள்வோன் கொள்வகை அறிந்து அவர் உளங்கொளக் கோட்டம் இல் மனத்தின் நூல் கொடுக்கும் ஆசிரியர் இலக்கணமும் ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும் காற்கூறல்லது பற்றலனாகும். அவ்வினையாளரொடு பயில் வகை ஒருகால், செவ்விதின் உரைப்ப மற்றிரு காலும் மையறுபுலமை மாண்புடைத்தாகும் என்னும் மாணாக்கர் இலக்கணமும் கற்பித்தல் விதிகள் செயல்முறைகள் இலக்கணமும் முற்றும் உணர்ந்து கற்றவர்கள், நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோ என்னும் துணிவே மன்னுவர். அதனால் குலன், அருள், தெய்வக்கொள்கை, மேன்மை, கலையில் தெளிவு, கட்டுரை வன்மை, நிலம், மலை, நிறைகோல் மலர் நிகர் மாட்சியும் உலகியல் அறிவோடு உயர்குணம் அனைத்தும் அமைந்த **கலாநிதி** பண்டிதர் ஆசிரியர் அலெக்சாந்தர் அவர்களே எனப் போற்றிப் பாராட்டுகிறோம். அதனோடு மேலும் மேலும்

பண்டித் அலெக்சாந்தர் பண்பாளர் ஆசிரியர்க்
கண்டார் கலாநிதியைக் கண்டாரே - வண்டாரும்
பூவை, நிறைகோல், மலை பூவைப் போற்போற்றி
நாவார வாழ்த்துகிறோம் நாம்.

அன்றும் இன்றும் உலகத்து என்றும் ஒன்றும்
அன்பிற் சிறந்த

அ. சி. நல்லையா, முனனாள் பிரதம கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்.
சொ. நல்லையா, முன்னாள் அதிபர், இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை, கோண்டாவில்

# கலாநிதி அலெக்சாந்தர்

பொ. கனகசபாபதி
அதிபர், நுண்கலைக் கூடம், ஒன்ராறியோ

அவர் அங்கே வாழ்ந்திருந்தாராயின் இந்தப் பட்டம் எப்போதோ அவரை வந்தடைந்திருக்கும், ஒரு சிறு வித்தியாசத்துடன். கௌரவப் பட்டமாயிருந்திருக்காது கற்று ஈட்டியதாக அமைந்திருக்கும். அலெக்சாந்தரின் திறமையை கண்கூடாகக் கண்டமையால்தான் நான் இப்படி அடித்துக் கூறுகிறேன். இளமை வாழ்க்கை வசதியின்மை காரணமாக, கற்கும் திறனிருந்தும், கற்பதற்கு ஆவலிருந்தும், கற்க வழியிருந்தும் கூட குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாக மிக்க இளம் வயதிலேயே பாடசாலைக் கல்வியை முடித்துத் தொழில் தேடிக் கொண்டார். 1955-56ல் தமிழ் ஆசிரியருக்கான பயிற்சி பெற்றபின் சாதாரண தமிழ் ஆசிரியராக பணியாற்றிய அவர் வாழ்வினில் என்றுமே சோம்பி நின்றதில்லை. தொடர்ந்து கற்றல் பதவி உயர்வு என இரண்டுமே அவர் வாழ்க்கையுடன் சங்கமித்தமையால் அவர் இந்நாட்டிற்கு வருவதற்காக ஓய்வு பெற்ற காலை அவர் வகித்த பதவி உதவிக் கல்விப் பணிப்பாளர்; பெற்றிருந்த தகமைகள் பலப்பல. இத்தகைய ஒரு தொழில் முறை முன்னேற்றம் ஈழத் தமிழர்களைப் பொறுத்த மட்டிலே அலெக்சாந்தர் ஒருவருக்கே கிடைத்துள்ளது என நான் எண்ணுகிறேன். வேறு எதற்கில்லாவிட்டாலும், இதற்காயினும் அலெக்சாந்தர் கலாநிதிப்பட்டம் பெறுவதற்கு அருகதையுடையவர்.

பதினெட்டு வயதிலே அலெக்சாந்தர் பாடசாலைக் கல்வியை விட்டாரெனினும் படிப்பதை நிறுத்தவில்லை. தொடர்ந்து கரையிலாக் கல்வியைக் கற்றார், கற்றார், இன்றும் கற்றுக்கொண்டேயிருக்கிறார். 1963லே பாலபண்டிதர் பரீட்சையிலே சித்தியடைகிறார். ஆங்கில ஆசிரியர் என்றால் சமூகத்தில் ஒரு கௌரவம்தானே. எனவே 1966-67லே பலாலி ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து ஆங்கிலச் சிறப்புப் பயிற்றப்பட்ட ஆசிரியராகிறார். பயற்சி என்பது அவருடைய முளைவகை (clone) போலும். 1971ல் பேராதனை பல்கலைக் கழகத்தின் வெளிவாரி மாணவனாக கலைப் பட்டதாரியாகிறார். மறுபுறத்தில் அவருக்குத் தமிழில் இருந்த பற்று தொடர்ந்து தமிழைக் கற்க வைத்தமையால் 1976ஆம் ஆண்டிலே பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைகிறார்.

ஆசிரியத் தொழிலில் இருப்பவர்கள் விசேட பயிற்றப்பட்ட ஆசிரியராயிருந்து அதன் பின்னர் பட்டதாரிகளானால் அவர்கள் ஊதிய உயர்வுக்கும், பதவி உயர்வுக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாகவே கணிக்கப்படுவார்கள். அவர்கள் கல்விமாணி எனும் Diploma in Education பயிற்சி பெறவேண்டிய அவசியமில்லை. இது மற்றையோருக்குப் பொருந்தலாம். ஆனால் அலெக்சாந்தருக்கு அல்ல. அவர் கல்வியை தேடலாக்கியவர். பதவியோ பணமோ தேடுதலுக்காகக் கற்றவர் அல்லர். பதவிகள்தான் அவரைத் தேடி வந்தன. அவரோ கல்வியை தேடிச் சென்றார். எனவே வெளிவாரி மாணவனாக 1978-1980லே Diploma in Education னையும் திறமைச் சித்தியுடன் செய்து முடித்தார். தேடல் தொடர்ந்தது. 1981ஆம் ஆண்டிலே M.A. பட்டப் படிப்புக்கும் முதல் ஆண்டுக் கல்வியை முடித்த நிலையிலேதான் கனடா வந்தார். இவை மாத்திரமல்ல. அலெக்சாந்தரின் சுயவிபரக் கோவையைப் பார்த்தால் மலைக்கும் அளவினுக்கு மேலும் பல குட்டித் குட்டித் தகைமைகள் எட்டிப் பார்ப்பதைக் காணமுடியும். பாடசாலையில் கற்பித்துப் புகழீட்டிய ஆசியராக இருந்து கொண்டு இத்தகைய கல்விச் சாதனை செய்தல் எவ்விதம் சாத்தியமாயிற்று என திகைக்க முடியும். அசுர சாதனைதான் என அங்கீகரிக்க முடியும். கலாநிதிப் பட்டம் காலம் கடந்து வந்தது எனக் கருத முடியும்.

பதினெண் கீழக் கணக்கு நூல்களில் ஒன்று பழமொழி நானூறு. அதிலே வருகின்ற பாடல் ஒன்று தத்துருபமாய் அலெக்சாந்தரின் மனப் பாங்கினை எடுத்துக் காட்டுவதாகவே நான் கருதுகிறேன்.

சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொறும் சிந்தித்து உழன்று ஒன்று அறியுமேல்
கற்றொறும்தான் கல்லாத வாறு.

ஒன்றைச் சொல்கின்ற பொழுது குற்றம் உண்டாகிறது. நான் கல்லாதவன் அதனால்தான் இவ்விதம் ஏற்பட்டது என எண்ணி மனமிரங்கி கற்காமல் கழிந்துபோன நாட்களுக்காக வருந்தி, உள்ளத்தில் தளர்ச்சியின்றி மனம் ஒருமைப்பாட்டுடன் மீண்டும் மீண்டும் தான் கல்லாதவன் என்ற எண்ணத்துடனேயே கற்றவன் எப்பொழுதும் கற்றுக் கொண்டேயிருப்பான்.

அலெக்சாந்தரின் கல்வித் தகைமைகள் பெருகப் பெருக பதவி உயர்வும் தானாகவே வந்தது என்று கூறுதல் மிகையான கூற்று. கையூட்டும் ஊழலும், நிறைந்த ஒரு நாட்டிலே சில சமயங்களில் திறமையும் மதிக்கப்படவே செய்கின்றது என்பதற்கு அலெக்சாந்தரின்

பதவி உயர்வுகளையும் ஒன்றாகக் கருதலாம். ஆரம்ப காலங்களிலே கற்பித்தல் தகைமைக் குறைவாலோ, கடமைத் தவறுதலுக்காகவோ, தலைமையை மதியாமைக்காகவோ அன்றி வேறு காரணங்களுக்காக பல பாடசாலைகளுக்குப் பந்தாடப்பட்டவர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரானவுடன் மாலை போடாத குறையாய் வரவேற்கப்பட்டார். முதலில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையிலும் (1973-1975) அதற்கு அடுத்து கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலும் (1975-1980) பின்னர் பலாலி ஆசிரிய கலாசாலையிலும் பணியாற்றியபோது மிக்க கௌரவத்துடன் மாணவரால் கணிக்கப்பட்ட நல்லாசானாய் விளங்கினார். அக்கலாசாலைகளில் வெறுமனே ஆசிரியர்களை உருவாக்குதற்குத் துணை நின்ற அலெக்சாந்தருக்கு ஆசிரியர்களை நல்லாசிரியராக்கும் தலையாய பணி வந்தடைந்தது பதவி உயர்வு ஒன்றின் காரணமாக.

ஸ்ரீலங்கா கல்விநிர்வாக சேவையின் இரண்டாம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்ற அலெக்சாந்தர் யாழ் மாவட்ட தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி நெறிக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். அதன் விளைவாக அலெக்சாந்தரின் தலையில் பல பொறுப்புக்கள் வந்து குவிந்தன. "இவை மட்டும்தானா இன்னும் உள்ளனவா" எனக் கேட்கும் மனப்பாங்குடைய அலெக்சாந்தர் சளைத்தாரில்லை. அவை அத்தனையையும் நிறைவாகவே செய்து முடித்தார். புதிய கல்வித் திட்டத்துக்கமைய பாடசாலைக்கு முன்னான கல்விக்கான கருத்தரங்குகள் UNESCO வினது அனுசரணையுடன் நாடெங்கிலும் வைத்து அதன் தேவையையும், மேன்மையையும் உணர்த்தும் பணி அவரைநாடி வந்தது. இப்பணியில் அவரின் ஈடுபாட்டுடன் உழைப்பு, நாவன்மையாலும், ஆழ்ந்த அறிவாற்றல், சாதுரியப் பேச்சாற்றல் பெரிதும் வரவேற்கப்பட்டன. சூழற் கல்வி எனும் புதிய பிரிவு கற்பித்தலில் துணைக்கருவிகளை சமயத்திற்கேற்ப உபயோகித்தல் (Improvisation of Teaching aids) என்பது கற்பித்தலில் மிக்க புதிய அணுகுமுறை. பொருளாதார வசதி குன்றிய மூன்றாம் உலகநாடுகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இதனை பாரம்பரியக் கல்வி முறையிலே ஊறித்திழைத்த ஆசிரியர்கள், அதிபர்களுக்கு விளக்கி அவர்கள் மனப்பாங்கினிலே மாற்றத்தை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தி ஊக்குவிப்பது என்பது சுலபமான கைங்கரியமல்ல. அலெக்சாந்தரிடம் இப்பொறுப்பு வழங்கப்பட்டது. அவர் கிறுங்கவில்லை. அவர் சுயமாகவே கடின உழைப்பாளி. எனவே பல இரவுகள் உறக்கமின்றி பல ஊசாத்துணை நூல்களை கற்றது மாத்திரமல்லாது தனது சுயசிந்தனையினாலும் பல புதிய உத்திகளைக் கண்டறிந்து ஆசிரியர்களுக்கு வழங்கி ஆசிரியர் அதிபர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

தேசிய கல்வி நிலையத்தில் (National Institute of Education) அவர் பணியாற்றிய பொழுது சொக்கன், முல்லைமணி போன்றோருடன் இணைந்து தமிழ் கற்றல், கற்பித்தல் சம்பந்தமான 23 வெளியீடுகளைப் (modules) பிரசுரித்துள்ளார். அங்கே ஒரே சமயத்தில் எழுத்தாளனாக, ஆசிரியனாக, மதிப்பீட்டாளனாக கடமையாற்றினார் என்று கூறுதல் மிகையான கூற்று அல்ல.

அலெக்சாந்தர் அரசியலிலும் சற்று எட்டிப் பார்த்துள்ளார். ஆனால் இவரிடம் அரசியல் வாதிக்கு வேண்டிய எந்த ஒரு இலக்கணமும் இல்லாமையாலே தான் அரசியலில் ஈடுபடுமுன்னர் இருந்ததிலும் பார்க்க அரசியலைவிட்டு விலகும்பொழுது ஏழையாய் அதே குடிசை வீட்டில் வாழ்ந்தார். என்றும் மற்றவருக்கு உதவவேண்டும் என்ற நல்ல பண்பு அவர் பனம் பொருள் உற்பத்தி கூட்டுத்தாபனத்திலும், இலங்கை போக்குவரத்துக் கூட்டுத்தாபனத்திலும் இயக்குநர் சபை அங்கத்தவராக இருந்த போது பலருக்குத் தன்னால் ஆன உதவிகளை மனம் கோணாது செய்தார். அவர் கைகள் என்றுமே கறை படிந்ததில்லை.

அலெக்சாந்தரை அவர் கனடா வந்த பின்னரே நான் அறிவேன். அவரின் தமிழ்ப் புலமையும், தமிழில் உள்ள ஈடுபாடும், கள்ளம் கபடமற்ற பேச்சும்தான் என்னை அவர் மாட்டுக் கவர்ந்தன. பாரம்பரியக் கவிதை எழுதுவதில் வல்லவர். வெண்பா அவரின் சிறப்பாற்றல். விழா ஒன்று நடந்து கொண்டிருக்கின்ற பொழுதே அங்கே நடப்பவை யாவற்றையும் வெண்பாக்களில் வடிப்பார். வெண்பாவைப் பொறுத்தமட்டிலே அவர் ஓர் காளமேகம், "இம் என்றால் இருநூறும் முன்னூறும், அம்மென்றால் ஆயிரம்தான்". எவராவது வெண்பா எழுதும்பொழுது பிழை விட்டார்கள் என்றால் இவர் சீழ்த்தலைச்சாத்தனார் ஆகிவிடுவார். இவரால் தாங்க முடியாது. மனதில் கனன்று கொண்டேயிருப்பார்.

இலக்கண அறிவு நிறையவே உடையவர். கற்பிப்பதிலும் வல்லவர். தமிழ்க் கலைக் கல்லூரியிலே கல்வி கற்கும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்து கற்போரின் அபரிமிதமான பாராட்டையும் பெற்றவர்.

அவரது தகுதி கண்டு உலகப் பல்கலைக்கழகம் தமிழ்க் கல்விக்கான கலாநிதிப்பட்டம் வழங்கி தனது கௌரவத்தை உயர்த்தி உள்ளது. அலெக்சாந்தரைப் பாராட்டுவோம். உலகப் பல்கலைக்கழகத்தைப் போற்றுவோம்.

# விழா நாயகரின் சிறப்பியல்புகள்

திருமதி எஸ். அந்தோனிப்பிள்ளை

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதின்றேல்
தோன்றலின் தோன்றாமை நன்று

எனும் வள்ளுவர் வாக்கிற்கொப்ப சாதாரண குடும்பத்திலே பிறந்து தன் விடாமுயற்சியாலும் இயல்பாகவே அமைந்த தனித் திறமைகளாலும் வீறுநடைபோட்டு, பல வெற்றிப் படிகளைத் தாண்டிச் சிறந்த கல்விமான்கள் வரிசையில், போற்றிப் புகழக்கூடிய தகைமைகள் பல பெற்று, தற்போது அதியுயர் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்படும் மதிப்பிற்குரிய திரு. ம.செ. அலக்சாந்தர் அவர்கள் போற்றுதற்குரியவரே. அவருக்குக் கிடைத்துள்ள கௌரவப்பட்டம் சாலவும் பொருத்தமானதே.

ஒருவர் வாழுங் காலத்திலேயே அவரது மகிமை வெளிக்கொணரப்பட வேண்டும். அவர்கள் ஆற்றிய சேவைகளை மதித்துக், கணித்துக் கௌரவிப்பது சிறந்த மனித நேயப்பண்பாகும். இந்த வகையில் எமது கனடிய தமிழ்ச் சமுதாயம் சிறந்த பணியாற்றி வருவது மெச்சத்தக்க தொன்றாகும்.

அலெக்சாந்தர் மாஸ்ரர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் மாஸ்ரர் அவர்கள் தனக்கேயுரித்தான சில கொள்கைகளை வகுத்து, தானும் நெறிதவறாது தன்பிள்ளைகளையும் அதேபாணியில் பயிற்றியுள்ளார். அன்பும், பண்பும், அறிவாற்றலும் மிக்கவர்களாக, கல்வித் தகைமைகள் பல பெற்று பலரின் மதிப்பிற்கும், கணிப்பிற்கும் உரியவர்களாக மிளிர்கின்றனர். 'மகன் தந்தைக்காற்றுமுதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்' என்னும் பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்து கொண்டிருப்பது போற்றுதற்குரியது.

'ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் நிச்சயம் ஒரு பெண் இருக்கிறாள்' என்னும் கூற்று மிகவும் உண்மையானது. காதலன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரிய யாவினும் கைகொடுத்த அவரது வாழ்க்கைத் துணவி திருமதி மேரி மெற்றில்டா அலெக்சாந்தர் அவர்கள்தான் அவரது புகழுக்கும், உயர்ச்சிக்கும் காரணமாக அமைந்தார் என்றால் மிகையாகாது. இன்பத்திலும் துன்பத்திலும் கணவனே கண்கண்ட தெய்வமென வாழ்ந்து, எதையும் தாங்கும் இதயத்துடன் செயற்பட்டவர். நன்மக்களையும் பெற்று உயர்ந்த பண்புகளுடன் கல்வியிலும் சிறப்புறச் செய்தவர். இன்றுவரை பக்கபலமாக இருந்து 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் அரிய நோக்குடன் குடும்பத்துக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்றார்.

திரு. அலெக்சாந்தர் மாஸ்ரர் அவர்கள் மிகவும் நேர்மைப் போக்குடையவர்; தன் மனதில் சரியெனப் பட்டவை எதுவாயினும் ஒளிவுமறைவின்றிப் பேசுவார்; பிறர்க்குதவி செய்வதில் முன்னணியில் நிற்பவர்; தன்னிடம் இல்லாவிடினும் எவ்வகையிலேனும் பெற்றுக் கொடுப்பவர்; பக்தியுள்ளவர்; எம்மதமும் சம்மதமென வாழ்பவர்; உறவுகளை மதித்துப் பேணுபவர். இன்முகத்துடன் அனைவரையும் உபசரித்து விருந்தோம்பல் செய்து மகிழ்பவர்.

அவர் தமிழ்ப்பற்று மிக்கவர்; கலைகலாச் சாரங்களை வழுவாது பின்பற்றுபவர்; தேசிய உடை அணிவதில் அலாதிப் பிரியமுடையவர். நம்பிக்கைக் குரியவர்; நன்றி மிக்கவர்; மன்னிக்கும் மனப்பான்மை யுடையவர்; இரக்க சுபாவம் கொண்டவர். மதுபானவகை, புகைபிடித்தல் என்பவற்றை அறவே வெறுப்பவர். (அவரது குடும்ப வைபவங்களில் அவற்றிற்கு இடமேயில்லை.)

மேலும் அவர் இயல்பான கவித்துவமுடையவர்; இலக்கிய இரசனையுள்ளவர்; கவிதைகள் - வெண்பாக்கள் இயற்றுவதில் வல்லவர்; ஏதும் பிழையெனக் கண்டு விட்டால் சுட்டிக்காட்டத் தயங்காதவர்; கடின உழைப்பாளி, இன்னமும் கற்றது கை மண்அளவு கல்லாதது உலகளவு என்பதற்கொப்ப படித்துக் கொண்டே இருப்பவர்; ஓய்வு நேரங்களை எல்லாம் வாசிப்பதிலேயே செலவிடுபவர்; தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்.

நல்லாசிரியனாக - விரிவுரையாளராக பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, தகைமைகள் பல பெற்றபோதும், தன்னைத் தாழ்த்தி, மிக எளிமையாக வாழ்பவர்; கர்வமில்லாதவர். இவர் ஓர் கலைக்களஞ்சியம்; நடமாடும் நூலகம் என்றும் சொல்லலாம். இவை அனைத்தும் இவரிடம் காணப்படும் சிறப்பம்சங்களாகும்.


இவரின் ஆக்கங்களான கல்விசார் நூல்கள், பாடப்புத்தகங்கள், குழந்தைப் பாடல்கள் மிகவும் பயனுள்ளவை. இவற்றுடன் கத்தோலிக்க மாதாந்த வெளியீடான 'அன்பு மக்களே' என்னும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணிபுரிகின்றார்.

இவரது குடும்பப் பாங்கே வித்தியாசமானது. புலம்பெயர்ந்து வாழும் இந்தக் கனடிய மண்ணில் உறவுகளைத் தேடுவது, விருந்தோம்பல் செய்து மகிழ்வது,

சுகதுக்கங்களில் பங்குகொள்வது என்பது கடினமான விடயம். அனால், இவர்களைப் பொறுத்த வரையில் விருப்புடன் கண்ணியமாக இவற்றைக் கடைப்பிடித்து வாழ்கின்றனர். கனடாவில் கால் பதித்துப் பத்து வருடங்களாகின்றன. தன் குடும்பத்தினர் சகிதம் மனநிறைவாகவும், ஆனந்தமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

இவரை அனைவரும் நன்கறிவர். தன்னோடியைந்த கல்விமான்கள் பலரின் நட்பு இவருக்குண்டு. இவருடன் நெருங்கிப் பழகியவர்கட்கு இவரது இயல்பான குணாதிசயங்கள் நன்கு புரியும். 'அரிது அரிது மானிடராயகப் பிறத்தல் அரிது' என்று மனித மாண்பை ஔவைப்பாட்டியார் அழகாக எடுத்தியம்பியுள்ளார். அதற்கொப்ப இவர் வாழ்ந்து அனைவரதும் நன்மதிப்பிற்கும் கணிப்பிற்குமுரியவராகத் திகழ்கின்றார்.

இவர் முதுமை அடைந்தாலும் மனதால் என்றும் இளமையுடன்தான் உள்ளார். இயல்பாகவே முதுமையடையும் காலங்களில் எட்டிப்பார்க்கும் நோய்நொடிகள் தடைக்கல்லாக இருந்தபோதும் சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருக்கும் மாஸ்ரர் அவர்கள் மேன்மேலும் பேரோடும் புகழோடும் சுகபலத்தோடும் வாழ்ந்து தமிழ்த் தாய்க்கும் தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்! நூறாண்டுகாலம் வாழ்க! நோய்நொடியில்லாது வளர்க!!



வட மாகாணப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் முதலிடம் வகித்த கொழும்புத்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் சாதனா கழக வீரர்களும் பயிற்சி ஆசிரியர்களும்



(1967–1968) பலாலி ஆசிரியர் கலாசாலை உதைபந்தாட்டக் குழுவில் விழா நாயகர் ஒரு வீரர்

# கல்விச் சிகரம்

எஸ். சந்திரபோஸ் (B.A. Dip. Ed.)

"ஒழுக்கம் இல்லாத கல்வி
சிரசற்ற உடல் போன்றது."

- கவிஞர் இரவீந்திரநாத் தாகூர்

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டு. அப்பொழுது யாழ். மத்திய கல்லூரியில் எனது மைத்துனர் மகாதேவாவும் நானும் கல்வி பயின்ற காலம். நாங்கள் இருவரும் கல்வியில் சராசரி மாணவர்களே. நான் விளையாட்டுத் துறையிலும், மைத்துனர் அழகியல் துறையிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர்களாக இருந்தோம். கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் எமது அடைவு ஓரிரு பத்துக்களையே தொட்டு நின்றது. இதனை அவதானித்த எம்மிருவரின் பெற்றோர்களும் அப்பாடங்களை எமக்குத் தனிப்பட்ட முறையில் கற்றுத் தருவதற்கு ஒரு ஆசிரியரின் உதவியை நாடியுள்ளதாகத் தெரிவித்தனர். அந்த ஆசிரியரின் பெயர் திரு. ம. செல்வராசா அலெக்ஸ்சாந்தர். அவர் ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள பத்தாம் இலக்க இல்லத்தில் வசிப்பதாகவும் கூறினர். நாங்கள் இருவரும் அவரிடம் பாடசாலை நாட்களில் மாலை நேரங்களிலும், சனி ஞாயிறு தினங்களில் காலை வேளையிலும் அவர் வீட்டுக்குச் சென்று பயில்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவுங் கூறினர்.

இந்த ஏற்பாட்டிற்கமைய ஒரு சனிக்கிழமை காலை நாங்கள் 'சைக்கிளில்' ஆசிரியர் அலெக்ஸ்சாந்தர் வீட்டைச் சென்றடைந்தோம். யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருந்த ஆசீர்வாதப்பர் தேவாலயத்தை அடுத்துச் செல்லும் ஆசீர்வாதப்பர் வீதியில் ஆசிரியர் வசித்த வீடு அமைந்திருந்தது.

ஆசிரியர் குடியிருந்த வீடு ஒரு சிறிய மண் வீடு. கூரை ஓலையால் வேயப்பட்டிருந்தது. அதில் ஒரு சிறு 'விறாந்தை'. அதில் ஒரு மேசையும் வாங்கும் ஒரு சிறு கரும்பலகையும் இருந்தன. சமையல் அறையாக ஒரு சிறு குடிலும் படுக்கை அறையாக இன்னுமோர் குடிலும் அவ்வளவில் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வீடு ஆசிரியரின் தாய்மாமனாரான ஆயுள்வேத வைத்தியர் ச. சின்னப்பு அவர்களின் வீடாகும். அவர் ஒரு பிரமச்சாரி. அன்னாரது வீட்டிலேதான் ஆசிரியர் அலெக்ஸ்சாந்தர் தமது மனைவி, தாயார், மூன்று சகோதரிகளுடன் வசித்து வந்தார். ஆசிரியரின் தந்தையும் சகோதரர் சிங்கராசாவும், யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஆசிரியரால் 'அக்கம்மா' என்றழைக்கப்படும் தந்தையின் பேர்த்தி வீட்டில் வசித்து வந்தனர். ஆயினும் தினசரி ஆசிரியர் வசித்த வீட்டிற்கு அவர்கள் வந்து செல்வார்கள்.

முதன்முதல் ஆசிரியர் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களை நாங்கள் அன்றுதான் சந்தித்தோம். நாங்கள் இருவரும் எதிர்பார்த்ததுபோல வயது முதிர்ந்த கண்டிப்பும் கடுகடுப்பும் உள்ள ஆசிரியர் ஒருவரை அங்கு காணமுடியவில்லை. சிரித்த முகத்துடனும், வாஞ்சையுடனும் 'வாருங்கள் தம்பிமார்' என்று அன்புடன் எம்மை அழைத்த ஒரு அழகிய வாலிபனையே அங்கு கண்டோம். முதலாவது சந்திப்பிலேயே அவர்பால் எங்களுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன. அன்று தொடங்கிய எங்கள் உறவு இன்றும் தொடர்கின்றது.

ஆசிரியர் அவர்கள் தனது கல்வியை யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில் பெற்றிருந்தார். ஆங்கில எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியெய்தி 1955-56ம் ஆண்டுகளில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றுப் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகத் தனது கல்வியுலக வாழ்வை ஆரம்பித்தார்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் ஆசிரியர் குடும்பம் இருந்தபொழுதிலும் ஆசிரியருக்குக் கல்விமேல் இருந்த ஆர்வம், உறவினர் சிலரின் உதவிகள், அவரது ஆசிரியர்கள் சிலர் அவருக்கு அளித்த ஊக்கம் என்பன அவரை ஒரு ஆசிரியர் என்ற நிலைக்கு முதலில் உயர்த்தியன.

கல்விப் பணியில் ஒரு ஆரம்ப நிலையில் இருந்த காலத்திலிருந்தே ஆசிரியரின் கல்விச் சிந்தனைகள் ஓர்

உயர்ந்த இலட்சியத்தை நோக்கியதாகவே இருந்தன. தன் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமன்றி சமூகத்திலுள்ள அனைவரும் நல்ல கல்வியறிவு பெற்று உயர்வடைய வேண்டும் என்ற நல்ல உள்ளமும் எண்ணமும் அவரிடம் இருந்தன. அக்காலத்தில் மிகக் குறைந்த ஆசிரியர் சம்பளம், பெரிய குடும்பச் சுமை, காதல் திருமணம், சமூகப் பிரச்சினைகள் இத்தனைக்கும் மத்தியிலும் ஆசிரியர் அவர்கள் பல மாணவர்களுக்கு இலவசமாகப் பாடம் நடத்திக் கொண்டிருந்த அதிசயம் எம்மை இன்றுவரை ஆச்சரியத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. அவரிடங் கல்வி கற்றவர்கள் இன்று தாயகத்திலும், பிற நாடுகளிலும் மிக உயர்ந்த நிலைகளில் இருக்கின்றனர் ; இன்றும் ஆசிரியரிடம் அன்பும், மதிப்பும், மரியாதையும் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

'கற்க மறந்தவன் கற்பிக்க மறுத்தவன் ஆவான்', 'எரியும் தீபத்தைக் கொண்டுதான் எரியாத விளக்குகளையும் ஏற்றி வைக்க முடியும்' என்ற கல்வித் தத்துவங்களை உள்வாங்கிக் கொண்ட எமது ஆசான் வாழ்நாள் முழுவதும் கல்விகற்க வேண்டும் என்ற கொள்கையில் திடசங்கற்பம் பூண்டு தமது தொடர்கல்வியைத் தொடர்ந்தார்.

தனது கல்விப் பணியுடன் தனது கல்வியினையும் தொடர்ந்து கொண்டிருந்த காலத்தில் குறைவான குடும்ப வருமானத்தில் கட்டுக்கடங்காச் செலவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. சகோதரிகளின் திருமணம், தமது குழந்தைச் செல்வங்களின் பிறப்புக்கள், தாய் தந்தையரின் சுகவீனங்கள், மரணங்கள் போன்ற நன்மை தீமைகள் அவரது தொடர்கல்விக்குப் பல தடங்கல்களை ஏற்படுத்தின. பிரச்சினைகள் பல அவரது கல்வி உயர்வினைத் தாமதிக்க வைத்தனவேதவிர முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை.

இத்தகைய தடைக்கற்களையெல்லாம் ஆசிரியர் இலகுவில் தாண்டி கல்வியில் உயர்நிலை அடைவதற்கு உறுதுணையாக அமைந்தவர் அவரது அன்பு மனைவியே ஆவார். குடும்ப வரவு செலவுத்திட்டத்தில் குறைநிலை, இத்தனை விடயங்களையும் மிகச் சிக்கனமாகவும், சிறப்புடனும் செய்து முடித்ததுடன் ஆசிரியர் கல்வியில் மேன்மேலும் உயர்நிலையடைய அன்றிலிருந்து இன்றுவரை சிறந்த மதியூகியாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருபவர் அவரது அன்புத் துணைவியாரே ஆவார். அதற்காக திருமதி. மேரி மெற்றில்டா அலெக்ஸ்சாந்தர் அவர்கள் என்றென்றும் கௌரவிக்கப்பட வேண்டியவராவார்.

1969ல் நான் இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனை வளாகத்தில் பட்டப்படிப்பை முடித்திருந்தேன். இந்த வேளையில் எனது ஆசிரியர் அலெக்ஸ்சாந்தர் அவர்கள் B.A. பொருளாதார பாடத்தைக் கற்றுக் கொள்ள எனது உதவியை நாடினார். அறிவு யாரிடம் இருந்தாலும் அதனைத் தேடிப் பெறல் வேண்டும் என்ற பெருந்தன்மையான மனப்போக்குக் கொண்ட எனது ஆசிரியரது அன்பிற்கும் பண்பிற்கும் அடிபணிந்து அவருக்கும், அவருடன் சேர்ந்து B.A. பரீட்சைக்கு பொருளாதார பாடத்தை கற்றுக்கொண்டிருந்த திரு. திருமதி நல்லையா தம்பதிகளுக்கும் பொருளாதாரப் பாடத்தில் எழுந்த சந்தேகங்களைப் போக்கினேன். திரு. நல்லையா அவர்கள் யாழ். பிராந்திய கல்வி அதிகாரியாகவும், திருமதி நல்லையா அவர்கள் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய (ஸ்ரான்லி கல்லூரி) ஆசிரியராகவும் விளங்கியவர்கள். இவர்கள் மூவரும் என்னை ஒரு இளையவன் என்றோ, தம் மாணவர் என்றோ எண்ணாது என்னிடம் பாடம் கேட்டுக்கொண்ட உயரிய பண்பு என்னைப் பிரமிக்கச் செய்தது. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்ற வாக்கு இங்கு மெய்யானது.

1971ல் B.A. பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர் 1974-76ல் பண்டிதர் பரீட்சையிலும் தேறி 'பண்டிதர்' பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். 1973ம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பதவி வழங்கப்பட்டது. மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பமான விரிவுரையாளர் சேவை உலா அழுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை எனப் பவனி வந்தது; பல நூற்றுக் கணக்கான நல்லாசிரியர்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தந்தது.

பல்வேறு பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராக சேவையாற்றிய காலகட்டங்களில் 'ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு அமையத்தால் (Unesco) நடத்தப்பெற்ற பல்வேறு கல்விசார் கருத்தரங்குகளில் ஆர்வமுடன் பங்குபற்றிப் பல அரிய கருத்துக்களைக் - கற்றல், கற்பித்தல், மாணவரின் ஆளுமை உருவாக்கம், தலைமைத்துவம், கல்வி முகாமைத்துவம் சம்பந்தமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன் பல பயன்தரும் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

1979-81ம் ஆண்டுகளில் தொலைக் கல்வித் திணைக்களம் நடத்திய பட்டப்பின் படிப்பு பாடநெறியை மேற்கொண்டு கல்வி டிப்ளோமா பட்டத்தை விசேட சித்தியில் பெற்றுக் கொண்டார். கற்பித்தல் பற்றிய பயிற்சியை ஆசிரியர்கள் பலரும் இரண்டு மூன்று ஆண்டுகள் மட்டும் பெற்று ஓய்வு பெறும்வரை திருப்தியாகப் பணியாற்றியோர் மத்தியில் இரண்டுமுறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும், தொலைக்கல்வி மூலம் இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆசிரியர் பயிற்சியும் பெற்ற பெருமை ஆசிரியர் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களையே சாரும்.

இத்தகைய கல்வித் திறமையும் தகுதியும் பெற்ற எமது ஆசான் தாயகத்தில் வெளியான பல்வேறு

சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் கல்வி சம்பந்தமாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை கல்வியியலில் அறியாமையை அகற்றும் ஔடதமாகும்.

1983ம் ஆண்டில் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சிரேஸ்ட விரிவுரையாளராக இருந்தமையினால் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டார். இக்காலப் பகுதியில் தொலைக் கல்விப் பணிமனை தொலைக் கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சிக்காக பல்வேறு நூல்களை (Modules) எழுதி வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டது. இந்த ஏற்பாட்டில் தமிழ்மொழி கற்பித்தல் நூல்களை எழுதும் குழுவின் தலைவராக 1984ம் ஆண்டில் ஆசிரியர் அலெக்ஸ்சாந்தர் நியமனம் பெற்றார். இக்குழுவில் இவரது தலைமையில் கலாநிதி சொக்கன், வித்துவான் சி. குமாரசுவாமி, முல்லைமணி, கலாநிதி துரைராசா, வை. கா. சிவப்பிரகாசம் (அதிபர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை), சி. நடேசன், எஸ். சோதிப்பெருமாள், முருகு இரத்தினம் போன்ற தமிழ் அறிஞர்கள் பலரும் பணிபுரிந்தனர். தமிழ்மொழி சம்பந்தமாக இந்த அறிஞர்கள் இருபத்தொரு நூல்களை ஆக்கித் தமிழ் கல்வி உலகிற்குத் தந்துள்ளனர்.

1983ல் இருந்தே முழுநேர ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக இருந்துகொண்டே, பகுதிநேர தொலைக் கல்வி பயிற்சி நெறி விரிவுரையாளராகப் பணியாற்றிய ஆசிரியர் 1987ல் முழுநேர தொலைக்கல்விப் பணிப்பாளராக யாழ். குடாநாடு எங்கும் கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் ஆசிரியர் பயிற்சி விரிவுரைகள் மட்டுமன்றி, ஆசிரிய ஆலோசகராக, பரீட்சையாளராக, பல்வேறு கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தி தமிழ் ஆசிரிய சமூகம் கற்றல் கற்பித்தலில் தமது அறிவினை அபிவிருத்தி செய்து தொழில்சார் திறன்களை விருத்தியடையச் செய்ய வழிகாட்டினார்.

ஆசிரியர் அவர்கள் கல்வி உளவியலிலும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த விரிவுரைகள் ஆற்றி வந்துள்ளார். 1973-75களில் ஸ்ரீலங்கா அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்பற்றிய பல்வேறு கருத்தரங்குகளை பாடசாலை அதிபர்களுக்காக, கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடத்திப் பாராட்டுக்கள் பெற்றுக் கொண்டார். அத்துடன் முன்பள்ளிக் கல்விபற்றிய பல்வேறு கருத்தரங்குகளை யாழ்ப்பாணம் 'பாலர் கல்விக் கழகத்தின்' ஏற்பாட்டினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் முன்பள்ளியின் முக்கியத்துவத்தையும், முன்பள்ளிச் சிறாரின் உளவியலையும், கற்பிக்கும் முறைகளையும் தெளிவுபடுத்தினார். எந்தவித வருமானக் கொடுப்பனவுகளையும் எதிர்பாராது, சேவை அடிப்படையில் யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும், தனது சொந்தச் செலவிலேயே பிரயாணம் செய்து, தமிழர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அளப்பரிய சேவைகள் ஆற்றிவந்தார்.

கல்வி கரையில, கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணி பல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து

என்ற நாலடியார் வாக்குக்கு அமையத் தன் வாழ்நாளிற் கற்க வேண்டியவற்றைத் தெரிந்து தொடர் கல்வியில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தார். 1982-1983ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுமாணி (M.A.) பட்டப் படிப்பை மேற்கொண்டு பல்கலைக் கழகம் நடத்திய பரீட்சையில் சித்தி எய்தினார். அன்றைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்க முடியாது போய்விட்டதனால் முதுமாணிப் பட்டம் பெறும் சந்தர்ப்பம் துர் அதிஷ்டவசமாகக் கைநழுவிவிட்டது. ஆசிரியர் தொடர்ந்தும் கற்றுக்கொண்டும், கல்வியியல் சம்பந்தமாக பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டும் கல்வியியல் பற்றிய பல்வேறு கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பயங்கர போர்ச் சூழலினால் தொடர்ந்தும் அங்கு வசிக்க முடியாத நிலமை தோன்றவே 1993ல் குடும்பத்தவருடன் கொழும்புக்கு இடம்பெயர்ந்தார். அழுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி 1993ல் கனடாவில் குடியேறினார்.

கனடா வந்த ஆசிரியர் இங்கும் வழமைபோலத் தனது கல்விப் பணியைத் தொடர்ந்தார். 1993 டிசெம்பரில் தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 1994 தொடக்கம் ரொறன்ரோ நோத்யோக் கத்தோலிக்க கல்விச் சபைகளில் நிரந்தர ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆறாந் தரத்திலிருந்து 13ந் தரம் (O.S.C.) வரை தமிழ் மொழி கற்பித்தார். 1995ல் ஒன்ராறிரோ ஆசிரியர் சான்றிதழ் பெற்றுக் கொண்டார்.

கனடாவில் கல்வி பயிற்றியதுடன் ஆசிரியரிடம் புதைந்து கிடந்த 'கவித்துவம்' வெளிவரத் தொடங்கியது. கனடாவில் வெளியாகும் பல்வேறு தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் அவரது கவிதைகள், வெண்பாக்கள் வெளிவரத் தொடங்கின. அத்துடன் கல்வியியல் சம்பந்தமான பல்வேறு கட்டுரைகளும் ஆழ்ந்த புலமையுடன் வெளிவந்தன இன்னும் வெளிவருகின்றன.

உடல்நலக் குறைவினால் 2002ல் அவர் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும் இன்னமும் கல்வி கற்றல், கற்பித்தல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இன்று உலகப் பல்கலைக் கழக அமைப்பு கலாநிதிப் பட்டத்தை அவருக்கு வழங்கிக்

கௌரவித்துள்ளது. இது வெறும் கௌரவப்பட்டமல்ல, ஆசிரியர் ஆற்றிய அரிய பல கல்விப் பணிகளின் அறுவடையாகும்.

மிகச் சாதாரண நிலையில் இருந்து தனது விடாமுயற்சியாலும், தொடர் கல்வியாலும் கல்விச் சிகரத்தைத் தொட்டு நிற்கும் எமது ஆசான் கலாநிதி ம. செல்வராசா அலெக்ஸ்சாந்தர் அவர்கள் ஒரு சாதனையாளர். சிறந்த கல்விச் சிந்தனையாளர்.

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாம்

என்ற பாரதியின் வார்த்தைக்கு அமைய அகத்தின் அழகு முகத்தில் தெரியும் வண்ணம் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் விளங்கும் ஆசான் அவர்கள் கல்வியழகால் அழகு பெற்றவர்.

'புண்ணியவானுக்குத்தான் பிள்ளைகள் வாய்க்கும்' என்ற பழமொழி எமது தாயதக்தில் பயிலப்பட்டு வருகின்றது. நிச்சயமாக கலாநிதி அலெக்ஸ்சாந்தர் அவர்கள் தனது தன்னலமற்ற சேவைகளினால் பல ஆயிரம் மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறந்துவைத்த காரணத்தால் புண்ணியவான் ஆவார். இன்று அவரது பிள்ளைகள் கல்வியிலும், உயர் பண்புகளிலும் உயர்ந்து விளங்குகின்றனர். கலாநிதி அலெக்ஸ்சாந்தர் அவர்கள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட தியாக சீலர் ஆவார். அன்னார் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு இனிதே வளமுடன் வாழ்ந்து கல்விப் பணியாற்ற வேண்டும் என்பதே எமது தணியாத தாகமாகும்.

# ஒரு மாணவியின் அன்புக் கடிதம்

கனம் மதிப்புக்கும் அன்பிற்குமுரிய எமது போதனாசிரியருக்கும், அன்ரிக்கும், எமிலி, யாழினி, தம்பியன் மற்றும் அனைவருக்கும் முதற்கண் எமது தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக. இங்கு நாங்கள் சுகமே உள்ளோம். அதுபோல் அங்கு நீங்கள் அனைவரும் சுகமாக இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொலைக்கல்வி இறுதிப்பரீட்சை 07-11-1993 அன்றுதான் முடிவடைந்தது. தொழில் சார் கல்வியில் நீங்கள் மிகவும் நன்றாக மீள வலியுறுத்தி, விளக்கமாகக் கற்பித்த பகுதிகளான ஆசிரியரின் பங்கு, கற்றல் கொள்கைகள், கற்றலுக்கு ஊக்குவித்தல், மதிப்பீடு, புள்ளி விபரவியல், தொழில்நுட்பமுறைகள், பாடசாலை அமைப்பு முறை, பாடவிதானம் என்பவற்றிலேயே முழு வினாக்களும் வந்தன. நாங்கள் நன்றாகச் செய்துள்ளோம்.

நீங்கள் எங்கள் யாழ் தொலைக்கல்வி நிலையத்தை விட்டுச் சென்றமை எங்களுக்கு மிகவும் பேரிழப்பாகும். எந்தப் பெரிய நூல்களைப் படித்தால் என்ன? உங்களிடம் ஒரு மணிநேரம் பயின்றாலே அது மிகவும் பயன்படும். இவ்வளவு அனுபவம் மிக்க ஆசானை நாங்கள் (இழந்தது) விட்டுப் பிரிந்தது எமது துரதிஷ்டமே. எனினும் இரு வருடங்களாவது உங்களிடம் கல்வி கற்க வாய்ப்பு தந்த இறைவனுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். நீங்கள் போன பின்னரும் இங்கு கற்பிப்பவர்களின் முகத்தில் உங்களையே கண்டோம். நீங்கள் கற்பிப்பது மட்டுமல்ல உங்கள் செயல்கள் மூலமே நாங்கள் பலவிடயங்களைக் கற்றுக் கொண்டோம். இரக்கம், பணிவு, சாந்தம், பிறர்க்கு எப்போதும் உதவி செய்யும் மனப்பாங்கு, நேரம் தவறாமை, முகமலர்ச்சி, சேவை செய்யும் மனம், மற்றையோரையும் கணித்தல், அன்பு காட்டுதல், போன்ற பல்வேறு குணாம்சங்களை செயல் மூலம் காட்டி எங்கள் மனதில் பதிய வைத்த ஆசானை நாம் என்றும் மறவோம்.

நீங்கள் எங்கிருந்தாலும் நற்சுகத்துடனும் சந்தோசத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
என்றும் அன்புள்ள மாணவி
ப. சீவரெட்னம்
9-11-1993

# அறுகு

- திவ்யராஜன் -

**1946**ஆம் ஆண்டு.
ஓர் இராப் பொழுது.

எங்கும் அமைதி. சில வண்டுகளின் ரீங்காரம் அந்த இரவுக்கு சுருதி சேர்ப்பதுபோல் இருந்தது. யாழ்ப்பாணத்துப் பாணன் குளத்து ஒழுங்கையின் அந்தச் சிறு குடிசைக்குள் கள்ளிப் பெட்டியின்மேல் பித்தளை விளக்கு ஒன்று சிணுங்கிக் கொண்டிருக்கிறது. அம்மா றோசம்மா அப்பொழுதுதான் எதையோ சமைத்துக் கொண்டிருக்கிறா. 'எப்ப அம்மா சாப்பிடக் கூப்பிடுவா' என்ற எண்ணத்துடனே அந்தப் பித்தளை விளக்கின் முன்னிருந்து அவன் எதையோ மனனம் பண்ணிக் கொண்டிருக்கின்றான். அவனுக்கு இப்போது பதினொரு வயது. தம்பியும் தங்கைமாரும் பாயில் படுத்திருக்கிறார்கள். அவர்கள் நித்திரை ஆகிவிட்டார்கள்.

"செல்வராசா... சாப்பிடவா...."

அம்மாவின் குரல் கேட்டதும்தான் அவள் அருகே போய் 'சம்மாளனம்' போட்டபடி இவன் அமர்ந்தான். குத்தரிசிச் சோற்றோடு நெத்தலி மீன் பால் சொதியும் கீரைக் குழையலும். அம்மா வெகு ஆதரவாய் குழைச்சுத் தருகின்றா. பொச்சடிச்சு பொச்சடிச்சு செல்வராசா சுவைத்துச் சாப்பிடுகிறான். அம்மாவின் கைப்பட்ட குழையல்.... அந்தச் சுவைக்கு எது ஈடாகும்?....

ட்டியே ர...றோசி....."

குரல் கேட்டதும் குழையல் செல்வராசுவின் தொண்டைக்குள் நின்றுவிடுகிறது. பிரக்கடிக்கின்றது. பயந்துபோன அம்மா அவனின் தலையில் மெதுவாக அடித்துவிட்டு "ஆய்ம்..." என்று தானே செருமிக் கொண்டு தண்ணீரைக் கொடுக்கின்றா.... செல்வராசா பயத்துடன் போதும் என்று எழும்பி விடுகின்றான்.

ஆறடி உயரக் கம்பீரமான உடல்வாகு. அவரை ஏறெடுத்துப் பார்க்கவே பயம். அவருக்கு நல்ல வெறி - ஐயாமீது இவனுக்கு வெறுப்பாக இருக்கிறது.

"ஏன்ரி மீன் பொரிக்கேல்லை... சொதியும் கீரையும் ஒரு சாப்பாடு..."

அம்மாவுடன் சண்டை ஆரம்பமாகிறது. அம்மா பாவம். எல்லா அம்மாக்களும் பாவம்தான். ஆனால் காலைப் பொழுதுகளில் ஐயா அடங்கிப் போவார். காலையில் அம்மா அப்புக்காத்து மாதிரிக் கேட்கிற கேள்விகளுக்கு ஐயா மூச்சும் காட்டமாட்டார். ஐயா வெளியில் எவருடனும் சண்டை பிடித்ததாய் இவன் அறியவில்லை. அம்மாவுடன்தான் வெறிபோட்டால் இந்த வெருட்டல் எல்லாம். தன்ரை மகன் இங்கிலீசுப் பள்ளிக்கூடத்திலை படிக்கிறான் என்றும், படிப்பிலை சரியான விண்ணன் என்றும் ஊரெல்லாம் இவர் சொல்லித் திரிவதில் செல்வராசுவுக்கும் சந்தோசம்தான். பொய், களவு இருக்கக்கூடாது. எப்பவும் உண்மை சொல்ல வேணும். இப்படி ஐயா அடிக்கடி சொல்லிக் கொள்வார்.

பாயில் அம்மாவின் சீலையை இழுத்துப் போர்த்து மூடிப் படுத்திருக்கும் செல்வராசுவுக்கு அம்மாவைப்போலவே அந்தச் சீலையும் ஆதரவாய் இருக்கிறது.

சென் பற்றிக்ஸ் ஆங்கிலப் பள்ளிக்கு இவன் போய் பத்துப் பதினைந்து நாட்கள்தான். அங்கு போவதை நினைத்தாலே வயிற்றுக்குள் ஒரு காந்த அலை ஓடுகிறது. வேப்பமர ஊஞ்சலில் உயர ஆடி கீழே வரும்போது வருகின்றது போன்ற ஓர் உணர்வு.

"வண்ஸ் அப்போன் ஏ ரைம் தெயா வேர்" என்று தமிழில் எழுதி எழுதிப் பாடமாக்கினாலும் இந்தத் தறிகெட்ட இங்கிலீசு சரியாய் வருகுதில்லை. புட்றூள் மட்டையால் வாங்கினாலும் வாங்கலாம், இந்த லோறன்ஸ் ரீச்சரின் நுள்ளு இன்னும் வலிக்கிறது. கையால் நுள்ளினாலும் பரவாயில்லை. இவ பென்சிலையும் தசையையும் சேர்த்துப் பிடிச்சு நுள்ளுற நுள்ளு ... என்ரை அம்மா...... சந்தியாப்பிள்ளை மாஸ்டரோ கன்னங் கன்னமாய்ப் பதம்பார்க்கிறார். இவருக்குக் கைவலிக் காதோ.... ரீச்சருக்கெண்டு படிக்கேக்கை இதுகளையும் பழக்கிறவங்களோ தெரியேல்லை.... அமிர்தநாயகம் மாஸ்டர் நல்லவர். அடிக்கிறேல்லை."

செல்வராசுவுக்கு அபார ஞாபகசக்தி. அதனால் ஆங்கிலத்தையும் பாடமாக்கி அசத்திவிடலாம் என்ற நம்பிக்கை இவனுக்கு இருந்தது.

"கசங்கின காற்சட்டையும் சேட்டும்... நீயெல்லாம் ஆங்கிலப் பள்ளிக்குப் படிக்க வந்திட்டாய்"

வெறுப்போடு ஓர் ஆசிரியர் உமிழ்ந்த அந்த வார்த்தைகளை ஜீரணிப்பது சிறுவன் செல்வராசுவுக்கு இயலாதிருந்தது. எல்லோரையும் போல் மடிப்புக் குலையாமல் உடுத்துவதற்கு இவன் என்ன செல்வந்தன் வீட்டுப் பிள்ளையா?....

ஐயா கூலித்தொழில். அவர் உழைப்பில் அரைவாசி எப்படியோ கரைந்து விடும். அம்மாவின் வியாபாரத்தால் இவ்வளவாவது நடக்கிறது. கல்வியங்காட்டுச் சந்தையில் வாங்கிய மரக்கறிகளை தலைச்சுமையாய்ச் சுமந்து தெருத்தெருவாய், வீடுவீடாய் விற்பது அம்மாவின் வியாபாரம்.

'வாசிப்பு' செல்வராசாவுக்கு மிகவும் பிடித்தமான விசயம். ஒருநாள் கடையில் சாமான் வாங்கினபோது

கிடைத்த கல்கியின் பாப்பா மலர்ப்பக்கம் இவனுக்கு வாசிப்பைத் தூண்டியது. அம்புலிமாமா, கட்டெறும்பு, இராசாவின் கதை, மன்மதராசன் கதை, பஞ்சதந்திரக் கதை எல்லாம் இவனுக்கு இப்போது அத்துபடி!

"சண்முகத்தாற்றை பெடியனும் படிக்கிறான்
ஏன் தெரியுமே.... மாடு பிடிக்க"

ஊரவர் சிலரின் நையாண்டி செல்வராசுவின் மனதில் உயர உயரப் படிக்க வேண்டும் என்ற உறுதியைத் தந்தது. படித்து நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற வைராக்கியத்தைத் தந்தது. அந்த மனவுறுதியுடன் ஆங்கில எஸ்.எஸ்.சி. முடித்த கையோடு முனிசிப் பாலிற்றியில் பில் எழுதும் வேலை கிடைத்தது. முதல் மாதச் சம்பளம் 20 ரூபா. அதில் முதல் வேலையாக அம்மாவுக்கு நல்லதொரு சீலையை வாங்கிக் கொடுத்தான். பெற்ற வயிறு குளிர்ந்து போனது. எத்தனையோ நெருப்பாறுகளைக் கடந்து, எத்தனையோ துன்பங்களைச் சுமந்த தாயின் சந்தோசத்தைக் கண்டு செல்வராசாவும் குளிர்ந்து போனான்.

பில் கிளாக் வேலை சலிப்பாயிருந்தது. தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை புகுமுகத் தேர்வில் சித்தியடைந்து கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் செல்வராசுவுக்கு அனுமதியும் கிடைக்கிறது. அனுமதிக் கட்டணம் 225 ரூபா. எங்கே போவது?...

'நான் தந்ததாய் ஆருக்கும் சொல்ல வேண்டாம்' - சூசைப் பிள்ளைச் சுவாமியார் தானே முன்வந்து தருகின்றார். பிரெஞ்சுச் சாமியார் சாவே அவர்களும் இதர செலவுகளுக்கு உதவுகின்றார்.

வறுமையிற் செம்மையாய் வாழ்க்கை நகர்கிறது. பாடசாலையிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் செல்வராசா அவரின் கிறிஸ்தவப் பெயரான அலெக்ஸ்சாந்தர் என்று அறியப்படுகின்றார். படிக்கும்போதே அலெக்ஸ் பல ஏழை மாணவர்களுக்கு கணிதம், தமிழ், ஆங்கிலம் இவற்றை இலவசமாகச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினார். கலாசாலை நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தி தனது அறிவை அலெக்ஸ் வளர்த்துக் கொண்டார்.

1957ல் முதன்முதலாய் தன் ஆசிரியப் பணியை மலையகத்தில் இவர் தொடங்கினார். ஆசிரியப் பணியும் சமூகப் பணியும் தொடர்ந்தன. சாதீய ஆதிக்கம் மிகுந்திருந்த அன்றைய யாழ்ப்பாணத்துச் சமூகச் சூழலில் மேரி-மெற்றில்டாவை 1960ல் கைப்பிடித்து கலப்புமணம் செய்தார். வாழ்க்கைத் துணையான மேரி-மெற்றில்டா அமைதியாய், அடக்கமாய், ஆற்றல் மிகுந்த குடும்பப் பெண்ணாய் அலெக்சின் எல்லா உயர்வுகளுக்கும் பின்னால் இருந்தார். வாரிசுகளாக ஐந்து ஆண்பிள்ளைகளையும், இரண்டு பெண்பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டனர். பிள்ளைகள் எல்லோரும் தந்தைதாயின் வழிகாட்டலில் கல்வியிலும் வாழ்க்கைப் பண்புகளிலும் உயர்ந்தார்கள்.

அலெக்ஸ் அவர்கள் பல்வேறு சமூக நிறுவனங்களுடனும் அரச நிறுவனங்களுடனும் தன்னைப் பிணைத்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு - பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் எந்தவித எதிர்பார்ப்புகளும் இன்றிச் செய்து வந்தார். அன்று கையூட்டு வாங்கிக் கொண்டு உத்தியோகங்களை எடுத்துக் கொடுத்த பலரின் முன்னாலும் அலெக்ஸ் அவர்கள் கறைபடியாக் கரங்களுடன் உயர்ந்து நின்றார். உண்மை பேசுபவர் மட்டுமல்ல, உண்மையாய் நடப்பவர்.

புலம்பெயர்ந்து வாழும் கனடாவிலும் தன்சேவையைத் தொடர்ந்தார்.

**2003** ஒரு கோடைகாலத்து மாலை வேளை ... நோர்த்யோக்கில் உள்ள தொடர்மாடி வீட்டில் இதய நோய்வாய்ப்பட்டிருக்கும் அலெக்ஸ் அவர்கள் ஓய்வாக இருந்து எதையோ வாசித்துக் கொண்டிருக்கிறார். அவரின் பேரப்பிள்ளை வந்து புத்தகத்தை இழுக்கிறது. கல்வி கரையில கற்பவர் நாட்சில... என்றுசொல்லிக் கொண்டு பேரப்பிள்ளையை அணைத்து முத்தமிடுகிறார். பின் "நல்லாய்ப் படிக்க வேணும்" என்று செல்லமாய் முதுகில் தட்டி விடுகின்றார்.

அலெக்ஸ் அவர்கள் கற்றலை என்றும் நிறுத்த வில்லை. படிப்பித்தலும் படித்தலும் இவர் வாழ்வுடன் ஒன்றாகிப் போயின.

பொறுமை, சிரிப்பு, சாந்தம், மாற்றுக் கருத்துக்களையும் மற்றையோர் புண்படாமல் சொல்லும் பாங்கு. "யேசுவே இரக்கமாயிரும்" என்று அடிக்கடி உச்சரித்து எல்லோரையும் அன்பாயும் இரக்கமாயும் நடத்தும் உயர்பண்பு, மனிதநேயம்.... அலெக்ஸ் எனும் பெரியோனை எங்கள் கண்முன் கொணர்கின்றன.

பண்டிதராய், பட்டதாரியாய், நல்லாசிரியராய், ஆசிரியருக்கு ஆசிரியராய், கல்விப்பணியில் பணிப்பாளராய், பல்வேறு நூல்களின் படைப்பாளராய், அறிவுத் தேடலில் என்றும் சலிக்காது தன் வாழ்க்கைப் பயணம் முழுவதும் ஒரு மாணவராய் விளங்கும் அலெக்ஸ் அவர்கள்...

அறுகுபோல் சிறிது சிறிதாய்ப் படர்ந்து சமூகத்தில் வேரூன்றி இன்று கலாநிதி அலெக்ஸ்சாந்தராக சமூகத்தால் கௌரவிக்கப்படுகின்றார்.

சிணுங்கிக் கொண்டிருந்த குப்பிவிளக்கு
சூரியச் சுடராகிப் பிரகாசிக்கிறது!

# நான் கண்ட ம. செ. அலெக்சாந்தர்

தங்கராசா சிவபாலு எம்.ஏ

பிறந்தவர் இங்கு நிறைந்தவராக வாழத் தலைப்படுதல் விருப்பும் சிறப்புமாகும். இவ் உலகில் மாமனிதர்கள் எனப் போற்றப்பட வாழ்ந்தவர்கள் மிகச் சிலரே. மனித வாழ்வினைக் கருத்துமிக்கதாக, உபயோக மானதாக ஆக்கி வாழ்ந்துள்ளனர் பல பெரியார்கள். அவர்களை வரலாறு மறந்துவிடாது போற்றத்தான் செய்கிறது. தீதிழைத்தோர், கொடுமைகள் புரிந்தோரையும் வரலாறு விட்டுவைக்கவில்லை என்பதற்கும் பல சான்றுகள் எம்முன்னே உள்ளன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் எல்லாச் சிறப்பையும் பெற்றுக்கொள்கின்றான். தனக்கென வாழாப் பிறர்க்குரியராக வாழத் தலைப்பட்டு வாழ்ந்து முடித்தவர்களை உலகம் போற்றி நிற்கின்றது. தான் பிறந்து வாழ்ந்த சமுதாயத்திற்கு என்ன செய்தோம் என்னும் மனிதப்பண்பின் வழியது வாழ்வு. நன்றும் தீதும் பிறர்தர வாரா என்பது நண்பர் அலெக்சாந்தர் அவர்களின் தாரக மந்திரம். தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும் என்பது திருக்குறள். ஒருவர் செய்த செயல்கள்தான் அவரை இனம் காணவைக் கின்றன. எமது செயல்களுக்கு நாமேதான் காரணம் மற்றையோரைக் குறைசொல்லிப் பயனில்லை என்னும் கருத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்து வந்தவர் - வாழ்ந்தும் வருபவர் நண்பர் அலெக்சாந்தர் எனின் மிகையாகாது.

## நட்புக்கு இலக்கணம் எம்எஸ்ஏ

திரு. அலெக்சாந்தர் அவர்களுடன் நான் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது கனடாவில்தான். அதுவும் உலகத் தமிழர் அமைப்பின் கல்வி நிறுவனத்தில் அவர் பணிபுரியும் காலத்தில்தான் அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. ஒன்ராறியோ மாகாணத்தில் தமிழ் மொழியை பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பிற்கு கற்கை நெறியாக தராதரப் பாட நெறியாகக் கற்பிப்பதற்கான பாடத் திட்டத்தை மேற்கொள்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டத்தில்தான் நான் திரு. மா.செ. அலெக்சாந்தர் அவர்களுடன் பழகநேர்ந்தது. இவ்வாய்ப்பை ஏற்படுத்தக் காரணமாக இருந்தவர்கள் இருவர். ஒருவர் கல்விக் கூடத்தின் பொறுப்பாளர் திரு. இராசரத்தினம், மற்றவர் கல்விச் சபையில் கடமையாற்றிய பல்கலாச்சார ஆலோசகர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள். 1997ஆம் ஆண்டு அங்கு இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தினை ஏற்பாடுசெய்ய பொறுப்பேற்று உழைத்தவர் திரு. அலெக்சாந்தர் அவர்கள்.

அலெக்சாந்தர் அவர்கள் பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகவும், யாழ்பாணக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும், தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி நெறிக்கு வட பிராந்தியத்திற்குப் பொறுப்பாளராகவும் கடமையாற்றியவர். இவைதவிர அவர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பனம் பொருள் அபிவிருத்திச் சபை ஆகியவற்றில் பணிப்பாளராகக் சேவைசெய்தவர். போக்குவரத்துச் சபையில் அவர் இருந்தகாலத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 75 புதிய பஸ்களைப் பெற்றுத்தருவதற்காக அரும்பாடுபட்டு உழைத்தவர். அவற்றில் சில முல்லைத்தீவு போக்கு வரத்துச் சாலைக்கும் கிடைத்தமையை நான் நன்கு அறிவேன். இதனால் அவர் கல்வி நிறுவனத்திற்கு வெளியேயும் தனது சேவைகளை விஸ்தரித்துக் கொண்டவர். இந்த அநுபவங்களை, திறன்களை முன்வைத்து மிக விநயமாக தனது கருத்துக்களை ஏனையோரும் ஏற்றுக்கொள்ள, அவர் கைக்கொண்ட கருத்துரைகள், செயல் திட்டங்களை எல்லோரும் பெரிதும் பாராட்டியுள்ளனர். அவரிடம் குடிகொண்டுள்ள இயல்பான நற் பண்பும், அவரது கல்வித்திறனும் அவருடன் ஒரு பிணைப்பை ஏற்படுத்தியன. அவருடனான அறிவார்ந்த கலந்துரையாடல்கள் மேலும் எம்மிடையே நட்பு மிக நெருக்கமாக வளரக் காரணமாக அமைந்தது எமது நட்பு.

நிறைநீர் நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு (குறள் 782)

எனும் வள்ளுவர் வாய்மொழி போன்று தேயாது வளர்ந்தது. தவறுகள் செய்வோரை மிக அன்பாக அணுகித் தனது சாதுரியத்தினால் அவற்றை உணர்ந்து பரிகாரம் தேடுவதிலும் ஆலோசனைகள் வழங்குவதிலும் அவரது பாணி தனியானது. தவறைச் சுட்டிக்காட்டி திருந்திக் கொள்ள அல்லது திருத்திக்கொள்ள ஆசிரியருக்குரிய பாணியில் அவர் நடந்துகொள்வதும் சிறப்பம்சம். சில சந்தர்ப்பங்களில் அவர் இடித்துரைத்த கருத்துக்கள் மிகத் துல்லியமானவையாகவும், சரியானவையாகவும் காணப்படுகின்றன. கல்விச் சபையின் ஆசிரியப் பயிற்சிகளின் போது அவர் தனது கருத்துக்களை தெளிவாக முன்வைத்து வாதாடிய சந்தர்ப்பங்களை நான் அறிவேன். கல்வி உளவியல், கற்கை நெறி

போன்றவற்றில் அவர் கொண்டுள்ள பட்டறிவு அவ்விதம் அவரது தெளிவான கருத்துக்களைத் தருவதற்கு உளத்துணிவைத் தருகின்றன என்பது வெளிப்படை. தான் சரி என்று உணர்ந்ததை எந்தச்சந்தர்ப்பத்திலும் கூறுவதற்கு அவர் பின்நின்றதில்லை. பெரியவர் சிறியவர் என்ற பேதமின்றி அனைவரையும் ஒருசேர நோக்கும் தன்மை அவரின் இயல்பு.

நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு (குறள் 284)

என்பதற்கு ஏற்ப நட்பொழுகப் பழகும் பான்மை நண்பர் அலெக்சாந்தரிடம் குடிகொண்டுள்ளது. இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதி என்பதனை அவர் நன்கு உணர்ந்தவர். துன்பத்தைக் களைந்து இன்பமாகத் தலைப்படலே மனித மேம்பாட்டுக்கு சிறப்பானது என்பதனை அவர் நன்கு அறிந்திருக்கின்றார். அவர்களது செயல்களையும் எண்ணப் பாங்கையும் நினைதொறும் அவர் அடிக்கடி சொல்லும் புறநானூற்று செய்யுள் நினைவில் வருகின்றது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலும் மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர் வழிப் படூஉம் புணை போலாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்தல் அதனினு மிலமே!

இந்தச் செய்யுளில் கூறப்பட்டுள்ள தத்துவத்தைத் தனது தலையாகக் கொண்டு ஒழுகுபவர் திரு. மா. செ. அலெக்சாந்தர் அவர்கள். அறிவுலக மேதை டால்ஸ்டாய் அவர்கள் "உலகை அழிக்காதீர்கள்" என உலகோரை வேண்டிக்கொண்டது இன்றும் பொருந்துவதாகவே அமைந்துள்ளது. அத்தகைய கருத்துக்களை முன்வைத்துச் செயற்படுகின்ற, உலகின் ஒற்றுமைக்கும், சுதந்திரம், தன்னாதிக்கத்திற்கும் ஆதரவாகக் குரல் கொடுக்கும் மனப்பாங்கு அவரிடம் குடிகொண்டுள்ள மேலான தகுதியாகும்.

'ஒப்புரவொழுகு' என்னும் மந்திரம் அவர் தனது பிள்ளைகளுக்கு மட்டுமல்ல தனது மாணாக்கர்களுக்கும் அடிக்கடி வழங்கும் நன்மொழியாகும். ஒழுக்கத்தில் அவர் சிறந்து விளங்குகின்றார். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தமிழியற் பண்பைப் பேணி தன் துணையாளுடன் அன்பொழுக வாழ்க்கை ஓட்டும் அவர் எமெக்கெல்லாம் ஒரு முன்மாதிரி. ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் நிற்கின்றான் என்பதிலும், ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் நிற்கின்றாள் என்னும் தெளிவு அலெக்சாந்தர் அவர்களிடம் குடிகொண்டுள்ளமை நன்கு அவதானிக்கலாம். தான் எழுதும் கட்டுரைகள் கவிதைகளைத் தனது மனைவியிடம் காட்டி அவரின் கருத்துக்களைக் கேட்க அவர் ஒருபோதும் தவறுவதில்லை. அவரது எழுத்துக்களை வரிபிசகாது வாசித்துப் பார்க்கும் நல் இயல்பு அவரின் மனையாளிடம் உண்டு. அவர் செய்யும் சேவைகளுக்கெல்லாம் உற்சாகமாக ஒத்துழைப்பு நல்குபவர் அவரது துணையாள். தலைவன் எவ்வழியோ அவ்வழியே பிள்ளைகளும் அவரது அன்புக்கட்டளைக்கு அடிபணிந்தவர்களாகவே பண்புமிக்கப் பிள்ளைகளாக ஒழுகுவதனை அவதானிக்கும் தோறும் அவரின் சீரிய பண்பாற்றல் முறைமை மேலோங்கி நிற்கின்றது.

## புலமை நிறைந்தவர்

செய்யுள் மரபு நெறிகளை நன்கு கற்றுணர்ந்தவர். நினைத்த மாத்திரத்தே கவிதைகளை ஆக்கும் திறன் கைவரப் பெற்றவர். பல மேடைகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே அவற்றைச் செய்யுளாய் வடித்துத் தரும் தனியியல்பு அவரிடம் குடிகொண்டுள்ள சிறப்பம்சம். நூல் வெளியீடுகள் போன்ற பல மேடை நிகழ்வுகளைப் பார்க்கும் போது அவர் ஏதோ எழுதிக் கொண்டே இருப்பார். அவர் குறிப்பெடுக்கின்றார் என நான் பல சந்தர்ப்பங்களில் எண்ணியது உண்டு. ஆனால் அவரின் அருகமர்ந்த சந்தர்ப்பத்தில் அவர் அந்நிகழ்வை செய்யுள் உருவிலே படைத்து விடுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இலக்கண வழுவோ, பொருள் வழுவோ இன்றி இலகு நடையில் அமைவன அவரது செய்யுள்கள். நேர், நிரை, அசை எல்லாமே சரிவர அமைந்திருக்கும். அவர் அவ்விதம் யாக்கும் பாக்களிலும் கவிதைகளிலும். தமிழ்ப் பண்டிதரல்லவா அவர். இலக்கணம் பற்றிக் கூறவும் வேண்டுமா? யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் நன்கு தெரிந்திருக்கும் அவர் தமிழ் தொழில் நுட்பக்கல்லூரியில் இடம்பெறும் பட்டப்படிப்பு நெறி மாணவர்களுக்கு இவற்றைக் கற்பித்தும் வந்துள்ளார். நான் எழுதும் கவிதைகளை மிக நயத்தோடு கேட்கும் அவர் பாராட்டுவதோடு மட்டும் நின்றுவிடாது அதில் உள்ள பொருள் நயம், ஓசை நயம் என்பனவற்றை சீர்செய்ய ஆலோசனைகள் வழங்கிய சந்தர்ப்பங்கள் அனேகம். நினைந்த மாத்திரத்தே கவிசெய்யும் ஆற்றல் படைத்த ஆசுகவியாக அவர் திகழ்கின்றார் எனினும் அவர் அவ்வப்போது எழுதிய கவிதைகளையோ, செய்யுள் களையோ பாதுகாத்து வைக்காது தவறவிட்டுவிடுகின்ற ஒரு குறைபாடும் அவரிடம் உண்டு. தன் மாணாக்கருக்குக்

கற்பிக்கவோ அன்றி யாராவது கேட்டபோதோ எழுதிக் கொடுக்கும் கட்டுரைகளையோ அன்றி கவிதைகளையோ அந்த மாத்திரத்தே கைவிட்டுவிடுகின்ற நிலை அவரிடம் நான் கண்டுகொண்ட ஒரு பெரும் குறைபாடு. இது தமிழ் இனத்தின் துர்ப்பாக்கியம். பல அறிஞர்களின் தமிழ் அறிவை ஆற்றலை நாம் பெற்றுக்கொள்ள முடியாது இருப்பது அறிந்ததே. பண்டைத் தமிழ் நூல்கள்தான் அழிந்து போயின என்றால் இன்றும் எம்முடன் வாழ்ந்த கொண்டிருக்கும் பல தமிழறிஞர்களின் ஆக்கங்களையும் பெற்றுக்கொள்ளமுடியாமை துர்ப்பாக்கியமே. இவ்விதமே நண்பர் அலெக்சாந்தர் அவர்களின் அரிய பல படைப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியாது உள்ளமையை நான் நன்கு அறிவேன்.

## ஆங்கிலப்புலமை

தமிழில் பாண்டித்தியம் பெற்றதுபோலவே ஆங்கிலத்திலும் அவர் பாண்டித்தியம் பெற்றுள்ளார். ஆங்கிலப் பாட விரிவுரையாளராக அவர் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பணியாற்றியுள்ளார். அவரது ஆங்கில அறிவு அவரது கட்டுரைகளில் மிளிர்வதனைக் காணலாம். கத்தோலிக்க பாடசாலைகளினால் வெளியிடப்படும் பல சஞ்சிகைகளில் அவரது ஆக்கங்கள் வெளி வந்துள்ளன. 'இளைஞர்' என்னும் ஆங்கில சஞ்சிகையில் அவர் பல கட்டுரைகளை எழுதியதோடு மட்டுமன்றி அதற்குப் பொறுப்பாக ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். சமயம் சார்ந்த விடயங்களையும், கல்வி சார்ந்த விடயங்களையும் அவர் தழுவி எழுதியமை கவினிக்கப்பாலது. சுவாமி விபுலாநந்தரின் கல்விக் கொள்கை பற்றி ஆங்கிலத்தில் அண்மையில் அவர் எழுதிய கட்டுரையை வாசித்தபோது ஆங்கில அறிவாற்றலோடு பல்துறைசார்ந்த அறிவும் அவரிடம் காணப்படுவது அவதானிக்கத்தக்கதாக இருந்தது. ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய ஆற்றலும், கவிதை எழுதும் ஆற்றலும் அவரிடம் உண்டு. இவ்வாற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு எம்மவர் பயனடைதல் வேண்டும்.

## தமிழ்ப் பணி

ம. செ. அலெக்சாந்தர் அவர்கள் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றபோதிலும் அவர் தமிழின் மீது தீராத காதல் கொண்டவர். தமிழ் இலக்கண நூல்களாம் தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமி நாதம் என்பவற்றை நன்கு கற்று அறிந்தவர். தமிழ் மொழி இலக்கணத்தில் சந்தேகம் என்று ஏதாவது கேட்டால் உடனே தொல்காப்பியச் சூத்திரத்தையும், நன்னூல் சூத்திரத்தையும் எடுத்து ஒதியே விடுவார். அவ்விதமான அபார ஞாபக சக்தியும், அறிவாற்றலும் மிக்கவர். தமிழ் அன்னைக்கு பணிசெய்து கிடப்பதே தன் உயிர்மூச்சு என்னும் உளப்பாங்கோடு பாடுபடுபவர். தமிழைத் தமிழ் மாணாக்கர்கள் கற்கவேண்டும் என்னும் வேணவாக் கொண்டவர். கத்தோலிக்கப் பாடசாலைகளின் தமிழ் புத்தக ஆக்கத்தில் தீவிரமாக உழைத்தவர். வடயோக் கல்விச் சபையில் தமிழ் பாடநூல் ஆக்கக் குழுவில் முக்கியமானவராகப் பணிபுரிந்தவர். தமிழ் தொழில் நுட்பக்கல்லூரியில் பட்டப் படிப்பு மாணாக்கருக்குத் தமிழ் பாடத்தை மிக வாஞ்சையோடு கற்பித்தவர். அங்கு பணியாற்றிய காலத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையைப் பொறுப்பாக ஒழுங்கு செய்து ஆண்டு தோறும் இடம்பெற உழைத்தவர். அங்கு மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் கவிதை, கட்டுரைப், பேச்சுப் போட்டிகளில் மதிப்பீட்டாளராகக் கடமையாற்றியவர். சுகவீனமுற்றிருந்த போதும் தமிழ் மீது கொண்ட அக்கறையால் தனது பணியைத் தொடர்ந்தவர். நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலையில் அநுமதிக்கப்படும் வரை அவரது கற்பித்தல் பணி தொடர்ந்தது. ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையிலும், கத்தோலிக்கக் கல்விச் சபையிலும், தமிழ்த் தொழில் நுட்பக் கல்லூரியிலும், பீல் மாவட்டக் கல்விச் சபையிலும் அவரது சேவை தொடர்ந்தது. இன்றும் வீட்டில் இருந்தபோதிலும் அவரது தமிழ்ப்பணி தொடரவே செய்கின்றது. தமிழ் மக்கள் பயனுறும் வகையில் பல ஆக்கங்களை அவர் படைத்துக்கொண்டே இருக்கின்றார். பிறந்த மண்ணில் மேற்கொண்ட பணிகள் சிறப்புடையன எனினும் கனடிய மண்ணில் குறுகிய காலத்தில் ஆற்றிய சேவை மாணப்பெரியது.

நண்பர் மா. செ. அலெக்சாந்தரின் பன்முகப்பட்ட சேவை எமது சமூகத்திற்கு எப்பொழுதும் வேண்டப்படுவது. அவரது தமிழியற் சேவை தொடரவேண்டும் என்பதே என் வேணவா. உடல் நலமற்ற போதிலும் தன்னாலான சேவையை, தன்னிடம் பொதிந்துள்ள அறிவாற்றலின் விழுமியங்களை ஏனையோருக்குப் பயன்தர வைப்பதில் அவர் உளம் துடித்து நிற்பதனை அவருடன் நெருங்கிப் பழகியோருக்கு நன்கு தெரியும். உடல் நலம் தேறி உலகுக்கு பயன் தரவல்ல மேன்மை மிகு சேவையினை அவர் நல்கவேண்டும் என்பது அவரது நண்பர்களின் வேணவா. அவரிடம் பொதிந்துள்ள அறிவாற்றல் ஏனையோருக்குப் பயன் பெறும் வகை செய்யப்படுதல் வேண்டும். வீணே அவரோடு மறைந்துவிடாது எமது சமூகத்திற்குப் பயனுடைத்தாதல் அவசியமானதும், முக்கியமாக வேண்டப்படுவதும் ஆகும். இவை நிறைவேற அவரைப் பாராட்டுவது பொருத்தமானதே. பாராட்டுக்கள் ஒருவனது உளத்தை வளப்படுத்தி குணப்படுத்த வழிவகுக்கும். நண்பர் அலெக்சாந்தர் அவர்களின் சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

# என்னைப் பாட்டு எழுத வைத்தவர்!

குரு அரவிந்தன்

தமிழ்ச் சிறுவர் இலக்கியத்தில் எனக்கு இருந்த ஈடுபாடு காரணமாக புலம்பெயர்ந்த நாடுகளில் தாய்மொழியாம் தமிழ் மொழியைக் கற்பதில் எமது குழந்தைகள் படும் கஷ்டங்களைப் பற்றிப் பல தமிழ்ப் பெற்றோர்களிடம் இருந்து அவர்களின் எண்ண வெளிப்பாட்டை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அதே சமயம் நான் சந்தித்த தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களும் தங்களுக்குக் கனடிய சூழலில் தமிழ் கற்பிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை என்றும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். எனவேதான் ரொறன்ரோ கல்விச் சபையில் பல்கலாச்சார ஆலோசகராக இருந்த மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.பொ. கனகசபாபதி அவர்களின் ஆலோசனையின் பேரில் 'தமிழ் ஆரம்' என்ற ஒளி நாடா ஒன்றைத் தயாரிக்க முற்பட்டேன்.

கல்விச் சபையின் பாடத் திட்டத்திற்கமைய ஒளி நாடாவை தயாரிப்பதாக முடிவெடுத்தோம். கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களும், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களும் எங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை நல்கினார்கள். உறவுமுறைகளைப் பற்றி ஒரு பாடல் தேவைப்பட்டது. கலாநிதி. வி. கந்தவனம் அவர்களிடம் கேட்டேன். எந்தவித தயக்கமும் இன்றி இரண்டே நாட்களில் 'எந்தன் பிறந்த நாள்' என்ற அருமையான பாடலை எழுதிக் கொடுத்தார். உடல் உறுப்புக்களைப் பற்றி ஒரு பாடல் தேவைப்பட்டது. அலெக்சாந்தரைக் கேட்டுப்பாரும் என்று சொல்லி அவரது தொலைபேசி எண்ணையும் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் என்னிடம் கொடுத்தார். எனக்கு 'அலெக்ஸாந்தர் த கிறேட்டின்' ஞாபகம்தான் சட்டென்று வந்தது. தமிழ்ப் பாட்டிற்கு ஏன் வேற்று மொழி பேசும் ஒருவரைக் கேட்கச் சொல்கிறார் என்று நினைத்தேன். எனது முகமாற்றம் அவருக்குப் புரிந்திருக்க வேண்டும். உடனே "அவர் எங்கடை ஆள்தான், தமிழ் பண்டிதர்" என்றார். "தமிழ்ப் பண்டிதரா? பெயரைப் பார்த்ததும் வேற்றுமொழி பேசுபவரோ என்று நான் நினைத்தேன்" என்று சொன்னேன்.

அவரோடு தொடர்பு கொண்ட போது மறுநாள் வீட்டிற்கு வரச் சொன்னார். போனேன்! வரவேற்றார். அவரது அன்பான வார்த்தைகளும், சிரித்த முகமும் அப்படியே என் மனதில் பதிந்து விட்டன. மனைவியார் தேநீர் தந்து உபசரித்தார். மாஸ்டர் சொல்லச் சொல்ல நான் பாடலை எழுதினேன். இரண்டு மூன்று பாடல்களை வெவ்வேறு மெட்டுக்களில் பாடிக்காட்டினார். ஒரு நெறியாளன் என்ற முறையில் அந்தப் பாடல் காட்சிகளை எப்படி அமைக்க வேண்டும் என்று நான் நினைத்தேனோ அதற்கேற்ப சில சொற்களை மாற்றி இப்படிப் போடலாமா என்று கேட்டேன். தயங்காமல் ஏற்றுக் கொண்டார். 'நாங்கள் ஆடுவோம்... பாடுவோம்' என்ற பாடல் இப்படித்தான் உருவானது. இலக்கணப் பிழை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் கவனமாக இருந்தார்.

விடை பெற்று வரும்போது "குரு உங்களிடமும் திறமை இருக்கிறது, சிறுவர் பாடல்களை நீங்களும் எழுதிப் பாருங்களேன்" என்று உட்சாகப் படுத்திவிட்டார். குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப் படவேண்டும் என்பார்களே அதே போல அவர் கொடுத்த உட்சாகத்தில் வீட்டிலே வந்திருந்து ஒரு பாடலை எழுதி மெட்டமைத்துப் பார்த்தேன். 'குவா குவா வாத்து' என்ற எனது அந்தப் பாடல் இப்படித்தான் உருவானது. இன்று சிறுவர் மத்தியிலே அந்தப் பாடல் இவ்வளவு பிரபலயமாகும் என்று நான் அன்று எதிர்பாத்திருக்கவில்லை. பிரபல எழுத்தாளரான அ. முத்துலிங்கம் அவர்கள்கூட 'திண்ணை' என்ற இணையத்தளத்திலே தனது நண்பரின் குழந்தை அந்தப் பாடலை நூறு தடவைகளுக்கு மேலாகப் போட்டுக் கேட்டுவிட்டது என்றும், 'தமிழ் ஆரம்' பாடல்களின் கருத்தாழம் பற்றியும், அதைத் தயாரித்தவரையும், இசை அமைத்தவரையும், பாடியவர்களையும் மழலை உலகம் என்றும் நினைவில் வைத்திருக்கும் என்றும் எழுதியிருந்ததை வாசித்த போது என்னை அறியாமலே என்னை ஊக்குவித்த கலாநிதி அலெக்ஸாந்தர்தான் என் கண் முன்னால் வந்து நின்றார். இந்தப் பாராட்டல்களுக்கு அவரும் ஒரு வகையில் உரித்தானவர்.

எனது புத்தக வெளியீட்டு விழாவின்போது அவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவ மனையில் படுக்கையில் இருந்தாலும், மறக்காமல் வாழ்த்துப்பா ஒன்றை எழுதி விழாவில் அதைப் படிக்கும்படி அனுப்பியிருந்த அவரது நல்ல பண்பை என்னால் இன்றும் மறக்க முடியாமல் இருக்கின்றது.

தமிழ்க் கல்விக்கான கலாநிதிப் பட்டம் உலகப் பல்கலைக் கழகத்தால் இவருக்குக் கொடுக்கப்பட்டு, கனடியத் தமிழர்கள் அதன் மூலம் கௌரவிக்கப்பட்டதை இட்டு தமிழ் சமுதாயமே இன்று பெருமைப்படுகின்றது. பிறருக்கு உதவவேண்டும் என்ற நல்ல மனம் படைத்த இவர் சிறந்த பண்பாளர். பழகுவதற்கு இனிமையானவர். இவரும் இவரது குடும்பமும் நீடூழி வாழவேண்டும் என்று எனது குடும்பத்தின் சார்பில் மனதார வாழ்த்துகின்றேன்!

# கம்பனும் புகழேந்தியும் கலந்த கலாநிதி

கல்வியிற் சிறந்தான் கம்பனென்னும் கல்விக் கணிப்பு பொய்த்ததில்லை
செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் செல்லா தென்றும் நிலைத்திடுமே
நல்லதோர் கல்விசேர் தத்துவத்து நடத்தை ஆத்மாவை உருவாக்கும்
கல்லார் மனஞ்சூழ் காரிருளைக் கரையும் அறிவால் அறிவாயே.

கம்பன் வழிவழி வாழ்கின்ற கல்வியில் தேர்ந்தார் வழங்கமுதம்
தம்முள் கொண்டார் எந்நாளும் தளர்ந்து சோர்ந்து போகார்கள்
நம்மிடை உள்ள கல்விமான்கள் நட்டநல் தளிர்கள் நாடெங்கும்
செம்மைச் சிறாரைச் சீராக்கும் சிறப்பு மிக்கோன் அலெக்சாந்தர்.

கம்பன் போலே வாழ்ந்துகல்வி கவினார் தத்துவம் ஈழநாட்டுத்
செம்புலந் தன்னில் ஆசிரியர் செறிதரு பயிற்சிக் கலாசாலை
நம்பியர் நங்கை நயந்துணர நயமுற ஊட்டி எதிர்கால
தம்பியர் தங்கை கற்கவழி தந்த மனுவேல் மாமணியே.

கல்வித் தத்துவக் கட்டுரைகள் தந்தனை பலப்பல புதுக்கருத்து
சொல்லும் கல்விக் கொள்கைகொள் சொத்தாய் விளங்கும் செல்வராச
வல்லாய் உமக்குக் கலாநிதியென் வழங்கும் பட்டம் வாய்ப்புடைத்தே
நல்லாய் உலகில் நீடுவாழ்க நன்சொற் சான்றோய் நானிலத்தே.

வெண்பா வேந்தன் புகழேந்தி விதைத்த விதையில் வளர்விருட்சம்
மண்ணில் வேரை ஊன்றியபோல் மலர்ந்த புலவன் அலக்சாந்தர்
பண்ணில் வடிந்த வெண்பாத்தேன் பழுதில் எவரும் நுகர்ந்தினிப்பர்
உண்மையில் இவரோர் புகழேந்தி என்னும் இவர்செய் வெண்பாவே.

பெற்ற நாடு மறந்தாலும் பெருமை அறிந்து கௌரவிக்கும்
கற்றோர் உள்ள அரிசோனா கலைமிகு உலகப் பல்கலைக்கழகம்
முற்றுந் தேர்ந்து முனைவராக முடியைச் சூட்டிய அலக்சாந்தர்
கற்றுத் தேர்ந்த கலாநிதி காசினி புகழைச் சூட்டிடுதே.

ஈழத்துப்பூராடனார்

# கலாநிதியின் உயர்ச்சிக்கான உந்துசக்தி

### இலங்கையன்

ஒருவரின் வாழ்க்கைப் போக்கும், வாழ்க்கை முறையும், உடல் உள நிலைமையும் அவருக்கமைந்த அகச்சூழல், அவருக்கேற்படும் புறச்சூழல் ஆகியவற்றில் தங்கியுள்ளனவும் அல்லாமல், அவற்றால்தான் விதிக்கப்படுகின்றன என்று கருதுபவன் நான். இதைத்தான் நாம் வானுறையும் எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த வாலறிவன் எமது தலையில் எழுதிய எழுத்து, அதாவது விதிப்படியே எதுவும் நடக்கும் என்று சொல்லி எங்கள் மேல் குற்றங்களைப் போட்டு மனத்தை வருத்தி நோய்வாய்ப்படாது தப்பித்து வாழ்கின்றோம்.

### கல்வித் தகைமைகளும் வகித்த பதவிகளும்

கலாநிதி எம்.எஸ். அலெக்சாந்தரின் வாழ்க்கை வரலாற்றை நோக்கும்பொழுது, அவரது அகச்சூழலிலும் பார்க்க புறச்சூழல்தான் அவரது உயர்ச்சிக்கு கால் கோளாக அமைந்ததென்று கூறவேண்டும். இவர் சிறுவயதிலிருந்து வாழ்ந்த வீட்டுச்சூழல், அயற்சூழல் ஆகியவை இவர்மேல் ஏற்படுத்திய தாக்கங்கள்தான் இவரது கல்வி உயர்ச்சிக்கு வழிவகுத்தனவும் அல்லாமல், அவரது அயராத சமூகப்பணிக்கும் தூண்டினவென்றே கூறவேண்டும்.

இவர் யாழ் நகரில் கஸ்தூரியார் வீதியில் நாவலர் வீதிக்கு அண்மித்தாயுள்ள 'அஞ்சனந்தாழ்வு' எனும் இடத்தில் 1934ம் ஆண்டு தாழ்த்தப்பட்ட என்று கூறப்படும் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார். 'அஞ்சனந்தாழ்வு" எனும்பொழுது அப்பகுதி மக்கள் ஒருகாலத்தில் மிகத் துணிந்தவர்கள், பொல்லாதவர்கள் என்ற நோக்கு யாழ்ப்பாணப் பகுதியில் இருந்ததை நான் அறிவேன். சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வின் காரணமாகவும், கல்வி அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமையின் காரணமாகவுந்தான் இப்பகுதி இம்மக்கள் இந்நிலைமைக்கு ஆக்கப்பட்டார்கள் என அறியக் கிடக்கின்றது. நாவலர் சைவ வித்தியாசாலை, இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இப்பகுதி மக்களின் அயலில் இருந்தும், இப்பகுதிப் பிள்ளைகள் இப்பாடசாலைகளில் சேர்ந்து படிக்க முடியாத நிலைமையிருந்தது. ஆரம்ப காலங்களில் யாழ் குடாநாட்டுப் பகுதியில் சிறுபான்மைத் தமிழர்கள், கல்வி கற்பதற்கு வசதியளித்தவர்கள் அமெரிக்க, மெதடிஸ்த, கத்தோலிக்க சபையினரே. அந்த வகையில் சிறுபான்மைத் தமிழர்கள் இச்சபைகளின் தலைமைப் பீடங்களுக்கு நன்றிக்கடப்பாடுடையவர்களாவர்.

கலாநிதி அலெக்சாந்தரைப் பொறுத்தவரையில் அவர் இரண்டாந் தலைமுறைக் கத்தோலிக்கர் என்றுதான் கூறவேண்டும். அஞ்சனந்தாழ்வில், அலெக்சாந்திரின் தந்தையாரின் தந்தையாரே முதல் முதல் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினார். இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், மறையையும் அறிய வந்த அருள்திரு ஞானப்பிரகாசசுவாமிகளின் பார்வை இப்பகுதி மக்கள் மேல் விழுந்தது. அதன் பலாபலனாக அம்மக்களிடையே போதனைகளையும் பிரார்த்தனைகளையும் செய்து வந்தார். அவரது போதனைகளிலும் பிரார்த்தனைகளிலும் நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு அலெக்சாந்தரின் பேரன் கத்தோலிக்கரானார். அத்துடன் அருள்திரு ஞானப்பிரகாச் சுவாமிகளின் முயற்சியால் அப்பகுதியில் கத்தோலிக்க ஆலயமும் கட்டப்பட்டது. இன்று அவ்வாலயம் அப்பகுதி மக்களின் சகல ஈடேற்றங்களுக்கும் சேவை புரிந்து வருகின்றது.

கலாநிதி அலெக்சாந்தர் தனது ஆரம்பக் கல்வியை அப்பகுதியில் அமெரிக்கன் மிஷனரிமாரால் தாபிக்கப்பட்ட அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் கற்றார். ஆரம்பக்கல்வி முடிந்ததும் இவர் மேலும் தொடர்ந்து கற்பதற்கான சூழல்திருப்பம் ஒன்று ஏற்பட்டது என்றே கூறவேண்டும். இதுகாலவரையும் தகப்பனாரின் பகுதியாகிய அஞ்சனந்தாழ்வில் வாழ்ந்து வந்த குடும்பம், தாயாரின் இடப்பகுதியாகிய பாணாங்குளத்திற்கு இடம்மாறியது. அப்பகுதியிலும் கத்தோலிக்க ஆலயம் ஒன்றிருந்தது. அதற்குப் பொறுப்பாயிருந்த சுவாமிகள் அலெக்சாந்தரின் கல்வித் திறமையை அறிந்து அவரை மூன்று மைல் களுக்கப்பாலுள்ள சம்பத்தரிசியார் கல்லூரியில் சேர்ந்து படிக்கவைத்தார். அக்கல்லூரியில் 1952இல் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் முதலாந்தரத்தில் சித்தியடைந்தார். மேலும் தொடர்ந்து அக்கல்லூரியில் படிக்க ஆர்வம் இருந்தும் குடும்பத்தில் மூத்தவர் என்றமையாலும் வீட்டு பணநிலைமை மோசமாயிருந்தமையாலும் தொடர்ந்து படிக்க முடியாமலிருந்தது. எனவே சில மாதங்கள் யாழ்நகர சபையில் பற்றுச்சீட்டு எழுதும் கிளாக்காக வேலை பார்த்தார். அதேநேரத்தில் பொது எழுதுவினைஞர் பரீட்சைக்கும், தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரவேசப் பரீட்சைக்கும் தோற்றினார். ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் சித்தியெய்தி, ஆசிரிய பயிற்சியை முடித்து 1956இல் பயிற்றப்பட்ட தமிழாசிரியரானார். தமிழ் ஆசிரியராகியும், உயர்கல்வி பெறும் ஆர்வம் அவரைவிட்டுப் போகவில்லை. உயர்கல்வி பெறுவதாயின் ஆங்கில ஊடகத்தில்தான் அது முடியும் என்பதை உணர்ந்த அலெக்சாந்தர் பிரத்தியேகமாகக்

கற்று இலண்டன் கல்விப்பொதுத் தராதரப் பரீட்சையில் 1962ல் சித்தியெய்தினார். தமிழில் பண்டிதர் பரீசையிலும் சித்தியெய்தினார். இத்தராதரங்கள் தமிழில் பயிற்றப்பட்ட ஆசிரியருக்கான அவரது சம்பளத்தில் அவ்வளவு அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. இதன்காரணமாக ஆங்கில ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு 1968ல் ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராகி சம்பளத்தில் கூடிய அதிகரிப்பைப் பெற்றார். இருந்தும் கல்வியில் மேலும் உயர வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் அவரைவிட்டபாடில்லை. அதுமட்டுமல்ல கல்வித் தராதரத்தில் உயர வேண்டுமென்பதற்கான தேவையும் அவருக்கு இருந்தது. அதுதான் அவரது குடும்ப வறுமை நிலை. கல்வித் தராதரம் உயரும்பொழுது அவரது சம்பளத்தரமும் உயரும் நிலை இருந்தது.

இரட்டை பயிற்றப்பட்ட ஆசிரியத் தராதரம் இருந்தும், அவற்றுடன் திருப்தியடையா அலெக்சாந்தர் இலங்கைப் பல்கலைக்கழகம் வெளிவாரி மாணவனாகப் பதிவுசெய்து 1970ல் தமிழ், வரலாறுபொருளியல் அகிய பாடங்களில் இளங்கலைமாணிப் பட்டதாரியானார். இவரது கல்வித் தகைமைகள் 1973ல் ஆசிரிய கலாசாலை விரிவுரை யாளராக பதவி உயர்வு பெறுவதற்கு வழிவகுத்தன. இலங்கையில் ஆசிரியப்பயிற்சி ஏதுமின்றி பட்டதாரிகள், ஆசிரியராக பதவி நியமனம் பெறலாம். இவ்வகை ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுவற்கும் சம்பள உயர்வுக்கும் கல்வி டிப்புளோமா கற்றுச் சித்தி பெற வேண்டும். ஆனால் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து பட்டதாரித் தராதரம் பெறுபவர்கள் பதவி உயர்வுக்கும் சம்பள உயர்வுக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாகவே கணிக்கப்படும் நிலையிருந்தும் அலெக்சாந்தரோ 'காலந்தோறும் கல்வி' எனும் கல்வித் தத்துவத்திற்கமைய, கல்வி டிப்புளோமா நெறியை வெளிவாரி மாணவனாகக் கற்று 1980ல் பரீட்சையில் திறமைச்சித்தியெய்தினார். இத்துடன் கல்விகற்பதை விட்டாரா? இல்லை. அவர் கல்வியை வாழ்நாள் தேடலாகிக் கொண்டாரென்றே கூறவேண்டும். வழமையாக எவரும் பரீட்சையைப் பற்றி அச்சந்தான் தெரிவிப்பார்கள். ஆனால் அலெக்சாந்தரோ எதையும் முறைப்படி கற்றால் பரீட்சைக்கு அஞ்சத் தேவயில்லையென்றே கூறுவார். அவரது கல்வி வாழ்க்கையை எடுத்துக்கொண்டால் அது உண்மை போலவே தெரிகின்றது. என்னைப் பொறுத்தவரையில் கலை நெறிப்பாடங்களை எப்படித்தான் முறைப்படி கற்பதென்பது விளங்கா நிலைதான். ஆனால் அவரது காலந்தோறும் கல்வித்தேடல் தொடர்ந்தது. 1981இல் யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வியில் முதுமாணி நெறியைப் பகுதிநேர மாணவனாகக் கற்பதற்குப் பதிவுசெய்து 1982இல் அதன் பகுதி I ஆகிய எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றினார். 1983இல் தாயகத்தில் ஆரம்பித்த இன வன்செயல்களைத் தொடர்ந்து நிலவிய போர்ச்சூழல் காரணமாக பகுதிII ஆகிய ஆய்வுக் கட்டுரையைத் தயாரித்து சமர்ப்பிப்பதைப் பிற்போட்டு வந்தார்.

கற்றலும் இயல்பூக்கங்களில் ஒன்று. அலெக்சாந்தரில் இவ்வியல்பூக்கம் அதிகளவுக்குத் தொழிற்பட்டதென்றே கூறவேண்டும். அதுவுமல்லாமல் இவ்வியல்பூக்கம் அவரின் சுயநிறைவு கண்டுள்ளதென்றே கூறவேண்டும். அதேபோன்று, இவற்றிற்கெல்லாம் இடையில் பாலியல்பூக்கம் இவரில் தொழிற்படவில்லையென்று கூறமுடியாது. இவர் காதல்புரிந்தே தனது துணையைத் தேடி கல்யாணஞ் செய்து வாரிசுகளாக ஏழு பிள்ளை களுக்குத் தகப்பனானார். அவர்கள் எல்லோரும் கல்வியில் மேலோங்கித் தானிருக்கிறார்கள். இவர்களின் கல்வி மேம்பாட்டை உத்தேசித்துத்தான் தனது கல்வி மேம்பாட்டை இடைநிறுத்திய நிலையில் எண்பதுகளின் பிற்பகுதியில் கனடாவிற்கு புலம்பெயர்ந்த மூத்தமகனின் பொறுப்பேற்பிற்றான் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் தன் முழுக்குடும்பத்துடன் கனடாவிற்குப் புலம்பெயர்வானார். பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டுதான் முதுமாணிக் கல்வி நெறியைக் கற்று முடிக்காமல் கனடா வந்தார்.

இங்கேயும் ஒன்றாறியோ ஆசிரியத் தகைமைப்பத்திரம் பெற்றுத்தமிழை ஆரம்பநிலையிலும் இரண்டாம் நிலையிலும் கற்பிக்கும் ஆசிரியராகவும், E.S.L. ஐ உயர் பாடசாலைகளில் கற்பிக்கும் பதில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அத்துடன் ஆரம்பநிலை மாணவர்கள் தமிழ் கற்றற்கான பாடநூல்களைத் தயாரிப்பதில் முக்கிய பங்கை வகித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி நடத்தும் இளங்கலைமாணி மாணவர்களுக்கு தமிழ் இலக்கணமும் கற்பித்து வந்தார்.

இவரது கல்வித்தகைமைகளையும் வகித்த பதவிகளையும் நோக்குமிடத்து, இவர் கல்வியைத் தேடி தகைமைகளைப் பெற்றார். ஆனால் பதவிகளோ அவரைத் தேடிவந்தன போலத் தெரிகின்றது.

## சமூகப்பணியும் அவர் கொண்ட லட்சியமும்

இவரது வீட்டுச் சூழலும், அவர் கொண்ட சமயச் சூழலும் அவரது கற்றற் தூண்டிகளாகவும் வடபகுதியில் நிலவிய சமூகக் குறைபாடுகள் அவரது சமூகப்பணிக்கான தூண்டியாகவும் அமைந்தனவென்றே கூறவேண்டும்.

நான் ஒரு கிராமத்தவன். அக்கிராமத்திலுள்ள பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் பெற்றேன். அந்தவகையில் அந்தக் காலத்தில், அதாவது நாற்பதுகளில் பாடசாலையில் நிலவிய சமூக சமத்துவமற்ற அநீதிகளைக் கண்ணுற்றேன்; அனுபவித்தேன். இவற்றின் தாக்கத்தினால் சமூகப்பணியில் ஈடுபட்டேன். ஆனால் அலெக்சாந்தரோ பட்டினத்திலுள்ள பாடசாலைகளில், அதுவும் கிறீஸ்தவ பாடசாலைகளிற்றான் படித்தார். அதனால் நான் பாடசாலையில் அனுபவித்த

சமூக சமத்துவமற்ற அநீதிகளுக்கு அவர் உள்ளாகவில்லை. ஆனால் வடபகுதி சமூகச் சூழலில் இடம்பெற்ற சாதிச் சண்டைகள், தீண்டாமை போன்றவற்றை கண்ணுற்றதுமல்லாமல், அவற்றால் பாதிக்கப்பட்டதுமுண்டு. இவர் உத்தியோகம் வகித்த காலப் பகுதியில் ஒருசில வருடங்களைத் தவிர்ந்த மற்றைய காலப்பகுதியில் வடபகுதியிற்றான் உத்தியோகம் பார்த்தார். அந்த வகையில் அவர் பெற்ற கல்வியின் காரணமாகச் சமூகத்தில் பின்தங்கிய மக்களின் சமூக முன்னேற்றப் பணியில் ஈடுபடத் தூண்டப்பட்டார். ஆரம்பத்தில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் அதன் பொது நிர்வாகசபையின் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்து உழைத்தவர். இச்சபையின் அங்கத்தவரிடையே அரசியல் வேறுபாடுகள் தலைதூக்கியதன் காரணமாக மகாசபை உடைந்து பல்வேறு குழுக்களாக இயங்கியதைக் கண்ட அலெக்சாந்தர், இக்குழு மக்களை அரசியலுக்கப்பால் நின்று சமூகத்தின் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முயற்சி பயனளிக்காமையால், சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணியென்ற இயக்கத்தை உருவாக்கி சமூகப்பணித் தொண்டில் ஈடுபட்டார். சிறுபான்மைத் தமிழரின் கல்வி பொருளாதார சமூக முன்னேற்றத்தை அரசின் உதவியின்றி அடைய முடியாதென்ற கருத்தை இவர் கொண்டிருந்தார். அந்த வகையிலேயே தனது சமூகப்பணியில் தாயகத்தில் ஈடுபட்டார். இதன்காரணமாக பல எதிர்ப்புக்களை அவர் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அரசியல் கட்சிகள் எதையும் சேராது அரச கட்சி அமைப்பாளர்கள் செய்வது போன்று சிறுபான்மைத் தமிழர்களுக்கு உத்தியோக நியமனங்கள், இடமாற்றங்கள் போன்ற கைங்கரியங்களை சலுகை அடிப்படையில், எவ்வித பேரமுமின்றி அப்பழுக்கற்ற முறையில் செய்துள்ளாரென்றே கூறவேண்டும்.

இவரது அப்பழுக்கற்ற சமூகப் பணியையும் கல்வித்தகைமையையும் அறிய வந்த அரசு இவரை வடபகுதி போக்குவரத்துச் சபையின் ஓர் இயக்குநராகவும், பனம்பொருள் அபிவிருத்தி சபையின் ஓர் இயக்குநராகவும் நியமித்திருந்தது. இப்பதவிகள் மூலம் பொதுவாக வடபகுதி மக்களின் பொருளாதார போக்குவரத்து மேம்பாடு களுக்காகவும், குறிப்பாக சிறுபான்மைத்தமிழரின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடக்கூடியதாயிருந்தது.

இவர் ஒரு உண்மையான கிறிஸ்தவர். இவரது சம்பாஷணையில் இடைக்கிடை 'இயேசுவே இரக்கமாயிரும்' என்ற வசனப்பிரயோகம் குறுக்கிடுவதை நாம் அவதானிக்கலாம். இவர் மிகவுந் தேவபக்தியுடையவர். கடவுளுக்குப் பயந்தவர். சொல்வதொன்று செய்வ தொன்றாக நடப்பதில்லை. கடவுளுக்குப் பயந்து தன்னை நடத்திக்கொள்கின்றார். என்னைப் போன்றவர்கள் சமூகத்திற்கும் சட்டத்திற்கும் பயந்து தங்களை நடத்திக் கொள்கின்றார்கள். இவர் எவருக்கும் உதவும், இரங்கும் சுபாவமுள்ளவர். எவரையும் புண்படுத்தத் தெரியாதவர், மாணவர்களில் மிகப் பற்றுள்ளவர். மாணவர்களின் தேவை அறிந்து உதவுபவர். மாணவர்கள் கீழ்ப்படிவும் இவர் மேல் மிகமதிப்புமுடையவர்கள்.

இவரது மனைவியார் கணவருக்கேற்ற மனைவிதான். எவரையும் அனுசரித்து விருந்தோம்பும் பக்குவமுடையவர். கணவரின் கல்வித் தேடலில் இவருக்கும் பெரும்பங்குண்டு என்றே கூறவேண்டும். இவருடைய ஒத்துழைப்பின்றி, அலெக்சாந்தர் கல்வியில் இவ்வளவுக்கு உயர்ந்திருக்க முடியாது.

பிள்ளைகள், அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஏற்றவர்களாகவே அமைந்துள்ளார்கள். அப்பா அம்மா போன்று சாந்த குணமுடையவர்களாகவே காணப்படு கின்றார்கள். பெரியோரை மிக மதிக்கும் பெருங் குணத்தையுடையவர்கள்.

தமிழுக்கும் குறிப்பாக தமிழ் கல்விக்கும், தமிழ் சமூகத்திற்கும் ஆற்றிய பணியையும் சேவையையும் கருத்திற்கொண்டு, அமெரிக்க உலகப்பல்கலைக் கழகம் பண்டிதர் எம்.எஸ். அலெக்சாந்தரை தனது மாணவனாக ஏற்று அவருக்கு தமிழ்க்கல்விக்கான கலாச்சார கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததன் மூலம் தனக்கும் ஒரு கௌரவத்தைத் தேடிக் கொண்டதென நான் கருதுகின்றேன். இப்பட்டம், கலாநிதி எம்.எஸ். அலெக்சாந்தர் இதுகாலவரையும் ஆற்றிவந்த தமிழ்க் கல்விப் பணியையும், சமூகப் பணியையும் மேலுந் தொடர்ந்து ஆற்றுவதற்கான உந்துவிசையாக அமைய வேண்டுமென்று ஆசிகூறுகின்றேன்.



யாழ். அரச அதிபர் திரு. லோகேஸ்வரன், பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் க. நடராசா ஆகியோருடன் பணிப்பாளர் அலெக்ஸ்

**To Whom it May Concern:**

Mr. M.S. Alexander, a pre-eminent educator from Sri Lanka, participated in an orientation programme sponsored by the Peel Board of Education in the fall of 1994. The course was designed for non-Canadian trained teachers who intended to continue their professional work within the Ontario Public and Secondary school systems.

From the outset of his involvement in the programme, Mr. Alexander's profound knowledge of teaching and its supporting methodologies became immediately recognizable and clearly identified him as someone who, given the opportunity, would make a considerable contribution to teaching in Peel, Canada.

Mr. Alexander enjoyed the highest regard of the leader of the orientation programme, who, upon the completion of the course, endorsed Mr. Alexander's application for inclusion into the teaching establishment of the Peel Board of Education.

Hughes Gibson, Leader,
Orientation Programme,
Peel Board of Education, 1994

# அனைவரையும் அரவணைக்கும் அலெக்ஸ்!

திரு. அலெக்சாந்தர் அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட செய்தி அவரைத் தெரிந்த உலகின் பல பகுதியிலும் வாழும் தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

அரை நூற்றாண்டுக்கு மேல் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்து - மாணவ வாழ்க்கை, மணவாழ்க்கை தொட்டு கலாநிதியாகும் காலத்துக்குச் சிறிது முன்வரை என்னுடன் நன்கு பழகிய அலெக்சை வாழ்த்துவதற்கு வார்த்தைகள் இல்லை.

திரு. அலெக்ஸ் வலுவிழந்த மக்களுடன் வார்த்தைகளால் விபரிக்க முடியாத அளவிற்கு இணைந்து வாழ்ந்தவர். வாடிய மக்களுக்கு வலிந்து சென்று உதவிடும் கருணை உள்ளம் படைத்தவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர். தெய்வ நம்பிக்கை கொண்ட செம்மல். அவர் வாழ்வும், வாழும் காலமும் ஒரு சகாப்தம். அனைத்து மக்களையும் அணைத்துச் செல்லும் விசால உள்ளம் கொண்ட அலெக்ஸ் சமூகத்தில் அனைவரையும் அரவணைக்கும் பேறு பெற்றவர்.

மேலும் பல்லாண்டு காலம் சிறப்புடன் பணியாற்ற கலாநிதி அலெக்சை இதயம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

க. நடராஜா
பனை அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவர்
Director, UNDP/ Government of Sri Lanka
அவுஸ்திரேலியா மூத்த பிரசைகள் சங்கச் செயலாளர்

# தலையாய சான்றோன்

அலெக்சாந்தர்ப் பண்டிதரின் ஆன்ற தகுதியெலாம்
உலகப்பல் கலைக்கழகம் ஓர்ந்து – பலர்புகழும்
சூழ்கலா நிதிப்பட்டம் சூட்டிச் சிறப்பித்தார்
வாழ்கசூ ரியன்போல் வழங்கி.

தேங்குபுகழ் செந்தமிழும் ஆரியமும் சிங்களமும்
ஆங்கிலமும் கற்றறிந்த ஆசிரியன் – ஏங்கிமிக
மன்னுபவர் தாகம் மாற்றும் இளநீர்கொள்
தென்னையென நிற்பான் தினம்.

கற்பிக்க வேபிறந்த கலையாசான் தன்னிடத்தில்
கற்கின்ற மாணவரைக் கருணையுடன் – விற்பனராய்
ஆக்க உழைக்கின்ற ஆர்வத்தாற் காண்பான்
தூக்க மில்லாத சுகம்.

பைந்தமிழ்ப்பா வல்லான் பகுத்தறிவார் தங்கள்
சிந்தனைக்குக் கட்டுரைகள் செயவல்லான் – எந்த
மந்திரிக்கும் மந்திரியாய் மன்னனுக்கும் மன்னனுமாய்
தந்திரங்கள் சொல்வான் தக.

அழுத்தநற் கொள்கை அகங்காரம் இன்மை
விழுத்தகை யான விடாமுயற்சி – பழுத்த
மன்றுமர மாண்பு மனிதாபி மானம்
என்றிவைகள் கொண்டான் இவன்.

பட்டங்கள் மற்றும் பரிசென்ன பெற்றாலும்
கொட்டிப் பறைசாற்றுங் குணமில்லான் – மட்டில்
ஆழ்கடலைப் போன்ற அடக்கம் மிகவுடையான்
வாழ்கவிவன் பண்பு வளம்.

பண்பே இவன்சீலம் பண்பே கவின்கோலம்
பண்பே மனைமக்கள் படர்சுற்றம் – கண்போல்
தமிழர்பண் பாட்டைத் தாங்கி வளர்த்திடுமித்
தமிழன்போர் வாழ்க தழைத்து.

பொறுமைக்கும் பட்டம் பொன்போன்ற நெஞ்சின்
நிறைவுக்கும் பட்டம் நிகரில்லா – இறைவன்
நெறியிலே நிற்கும் நீதிக்கும் பட்டம்
அறிவுக்கும் பட்டம் அதே.

என்னதான் பட்டம் இவர்க்குக் கிடைத்தாலும்
மன்னரே தாமும் மயக்கமுறும் – மின்னல்
விரிப்புக்கள் போல வீசியிவர் ஈர்க்குஞ்
சிரிப்பொன்றுக் கீடாகா தே.

தலையாய சான்றோன் அலெக்சாந்தர் சார்ந்த
கலைமேவு தேர்ச்சி கண்டுற்ற – உலகப்பல்
கலைக்கழகம் வாழ்க கௌரவத்தைப் பெற்ற
கலாநிதியும் வாழ்க கமழ்ந்து.

வி. கந்தவனம்

# ‘தமிழ் வீரர்’

அக்காலத்து அலெக்சாந்தர்
அகிலமாள முயன்றாலும்
இக்கால அலெக்சாந்தர்
தமிழாட்சி செய்கின்றார்
தக்க வொரு பெரும் அறிஞர்
தமிழை வளஞ் செய்து
எக்காலமும் வாழ
இன்றமிழால் வாழ்த்துகின்றேன்.

காட்சிக்கு எளியனாய்க்
கனிவான சிரிப்புடனே
மாட்சியாய் எந்நாளும்
மதிப்புடனே தொரொன்ரோவில் - சொல்
ஆட்சியுடன் தமிழாசானாய்
வாழ்கின்றார் வளமுடனே
சாட்சிக்குப் பலருண்டு - நான்
சாட்டுக்குச் சொல்லவில்லை!

ஈழத்தில் படிப்பித்த
பள்ளிகள் பலவுண்டு
வாழ்க்கையில் அவர் பார்த்த
பணிகளும் பலவுண்டு
தாளத்துக்கேற்ற தளர்வும்
தனித்துவமும் கொண்ட
வாழத் தெரிந்த வல்லவராம்
வாழ்கவே பல்லாண்டு!

தமிழுக்காய் அவர் செய்யும்
தவப் பணிகளுக்காய்
அமிழ்தமாய் அவர் பேசும்
அறிவுரைகளுக்காய்
இமியளவும் பிசகாத அவர்தம்
இலக்கண அறிவுக்காய்
அமெரிக்கப் பல்கலைக்கழகம் அவருக்குப்
பட்டமளித்துக் களிக்கிறது!

பண்டிதர் அலெக்சாந்தர்
பண்பான நல்மனிதர்
மண்ணுக்குப் புகழ் சேர்த்த
மாண்பான ஆசிரியர்
எண்திசையும் அவர் புகழும்
ஏற்றமிகு நற்பெயரும்
விண்வரைக்கும் நிலைத்திருக்க
வேண்டுகின்றேன் இறைபாதம்!

- துறையூரான்

# எப்பொருள் நோக்கினும் மெய்ப்பொருள் காண்பவர்

திரு எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர், 'தமிழர் தகவல்' – கனடா

நான் இடைநிலைக் கல்வி கற்கையில் சரித்திரப் பாடம் இரண்டு அம்சமாகவிருந்தது. அதில் உலக அரசியல் எனக்கு நன்கு பிடித்தமானது. கொலம்பஸ், வாஸ்கொடிகாம, அலெக்சாந்தர் போன்ற நிலப் பற்றாளர்கள் பற்றிப் பலவற்றையும்அறிய முடிந்தது. இருப்பினும் இவர்களுள் நான் விரும்பும் பெரும் கதாநாயகனாக மகா அலெக்ஸாந்தரே இருந்தார்.

பதினாறு வயதில் தனது நாட்டினது போர்ப்படையின் தலைவனாகி, உலகின் மூன்றிலொரு பகுதியைத் தனது கட்டுப்பாட்டுள் கொண்டு வந்த இந்த மாவீரன். இந்தியாவின் விளிம்பு நோக்கி நகருகையில் சுகவீனத்தால் மரணமடைய நேர்ந்தது. அப்போது மகா அலெக்சாந் தருக்கு வயது 33 மட்டுமே. இளமையின் மரணம் வறுமையிலும் கொடியது. ஆனாலும் என்ன? அந்த அலெக்சாந்தரே 'மகா' என்ற கௌரவப் பெயருடன் அழைக்கப்பட்டானென்றால், அவனின் சிறப்பைச் சித்திரிக்க வேண்டியதில்லை.

'Alexander the Great' என்று ஆங்கிலத்தில் வர்ணிக்கப்படும் இந்த மகா அலக்சாந்தர் இளவயதில் என்மனதில் ஏற்படுத்திய தாக்கம் சற்றே வித்தியாசமானது. வியப்பானதுங்கூட.

என்மனதுள் மனப்பாடமாகிச் சித்திரபீடமான இந்த பெருமனிதனின் பெயருடைய இரண்டு அலெக்சாந்தர்களை இதுவரை நான் சந்தித்திருக்கிறேன்; உரையாடி யிருக்கிறேன்; பழகியிருக்கிறேன்.

இருவருமே வித்தியாசமானவர்கள். தங்கள் வாழ்க்கையில் பல சோதனைகளைச் சந்தித்தவர்கள். அவைகளையே சாதனையாக்கி இலட்சிய புருஷர்களாகத் தங்கள் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

இருவரும் கல்வித் தேடலில் மலர்ந்து, வாழ்க்கை அனுபவத்தில் கனிந்து, சமூகப் போராட்டத்தில் முதிர்ந்து, மனிதத்தில் முகிழ்ந்து நிற்பவர்கள். ஒருவர் கனடியர். மற்றவர் ஈழத்தமிழர்.

ஒன்ராறியோ மாகாணத்தின் முன்னாள் லெப்டினனட் கவர்னரும், கனடாவின் முதலாவது கறுப்பின அமைச்சருமான லிங்கன் அலெக்சாந்தர் ஒருவர். வீடுகளுக்குச் சென்று துப்புரவு செய்யும் தொழில் புரிந்து வந்த ஓர் ஏழைத்தாயின் மகன் இவர். 'கறுப்புத் தோல்' என்பதற்காகத் தனது தாயார் இம்சிக்கப்படுவதைக் கண்டு பொறுக்க முடியாது, கல்வி மூலமே இந்த இழிநிலைக்கு முடிவு காண முடியுமென்று முடிவு செய்து, வழக்கறிஞராகி, நாடாளுமன்ற உறுப்பினராகி, அமைச்சராகி, மாகாண லெப்டினனட் கவர்னராகி தற்போது முதிய வயதிலும் தனது இன மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் இவரைப் பல்வேறு இனத்தவர்களும் முன்னுதாரணமாகக் கொண்டுள்ளனர். கனடியக் கறுப்பின மக்களின் காவலராகத் திகழும் லிங்கன் அலெகசாந்தர், 'முதல்'வராகத் திகழும் புகழுக்குப் பெரும் பட்டியலுண்டு.

எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவரும், உன்னத கல்வியியலாளரும், எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண்பவருமான பண்டிதர், கலாநிதி மனுவேற்பிள்ளை செல்வராஜா அலெக்சாந்தர் (எம்.எஸ். அலெக்சாந்தர்) அடுத்தவர். இலங்கைத் தமிழர் மரபில் பிறப்பால், சாதி பார்க்கும் அநாகரிகப் பண்பினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த இவர், கல்வி மூலமே அநியாய அடக்கு முறைகளை உடைத்தெறிய முடியுமென்ற முடிவுடன் அதன் தேடலில் தம்மை இறக்கி, அதன் ஊடாகக் கற்பித்தல் உலகிலும் அரசியல் வாழ்விலும் 'என்னால் முடியும்' என்பதைச் சாதித்தவர். 'கற்றலுக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை' என்ற கொள்கையில் வாழ்ந்துவரும் எம்.எஸ். அலெக்சாந்தரின் ஆற்றலுக்கும் வெற்றிப் போற்றலுக்கும் நீண்ட வரலாறு உண்டு.

லிங்கன் அலெக்சாந்தர் (Lincoln M. Alexander) அவர்களைக் கனடா வந்த பின்னரே அறிந்தேன். இந்தப் பெரிய மனிதர் பற்றித் தெரியவந்தவை பிரமிக்க வைத்தன. அவரது வெற்றியின் பின்புலத்தையும், ரகசியங்களையும் அவர் வாயால் கனடியத் தமிழர்கள் கேட்க வேண்டுமென்ற விருப்பம் எனக்குள் ஏற்பட்டது. 1997ம் ஆண்டினது தமிழர் தகவலின் வருடாந்த விருது வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் வழங்கிய உரை, எம்மவர் மத்தியில் "உங்களால் முடியும் தொடருங்கள், செய்யுங்கள்" என்ற மனவைராக்கிய

உந்துதலை உருவாக்க உதவியதெனலாம்.

அடுத்தவர் 'எங்கள்' அலெக்சாந்தர். இவரை 1977களிலிருந்து அறிய முடிந்ததாயினும், 1983ன் பின்னரே கூடுதலாகப் புரியவும் பழகவும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆடிக் கலவரத்தினால் நான் மீண்டும் யாழ்ப்பாணவாசி ஆகியதையடுத்து இவரை நன்கறிய முடிந்தது.

அவர்தம் கல்விச் சாதனைகள் பற்றிய விரிவான கட்டுரைகள் இந்த மலரில் தாராளமாக இடம்பெறுமென்ற நம்பிக்கையில் அவற்றுள் நுழைவதை நான் தவிர்த்துக் கொள்கின்றேன். வேறு திசைகளால் அவரைப் பார்ப்பது படிப்பவர்களுக்கு அலுப்பை ஏற்படுத்தாததாகலாம்.

1970களின் பிற்பகுதியில் இவர் தென்னிலங்கை அரசியற் கட்சியொன்றின் பிரதான அமைப்பாளர்களில் ஒருவராக வடபகுதியில் செயற்பட்டார். முற்போக்குச் சிந்தனையுடனான இடதுசாரிக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவரால் எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து இயங்கக் கூடியதாகவிருந்தது என்பது எனக்குள் ஏற்பட்ட பெருவியப்பு.

முதலில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் இயக்குநர் குழாமில் ஒருவராகவும், பின்னர் வடபகுதி போக்குவரத்துச் சபையின் இயக்குநர்களில் ஒருவராகவும் செயற்பட்டார். இவைகள் அவரது கல்வித் தகைமைகளாலும், ஆளுமைத் திறனாலும் கிடைத்த பதவிகள். தமிழர்தம் பிரதேச அபிவிருத்திகளில் தமிழர் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டுமென்ற நிலையில் திரு. அலெக்சாந்தர் தெரிவானார் என்பதுவே சரி என்பதை அவரது வாழ்க்கை முறை நிரூபித்தது.

சமூக அமைப்பால் பாதிக்கப்பட்டிருந்தவர்களின் நியமனங்கள் சம்பந்தமாகவும், இடமாற்ற நிறுத்தங் களுக்காகவும், பதவி உயர்வுகளுக்காகவும் மட்டும் இவர் கொழும்புக்குச் செல்லவில்லை. அரசியல் பழிவாங்கல் களால் நிர்க்கதிக்குள்ளான வசதியற்றவர்களின் குரலாக அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் சென்று வருவார்.

இவ்வாறான 'வேலை'களில் ஈடுபடுவதால் நவீன வசதிகளைக் கொண்ட வீடு, புதிய வாகனம், உல்லாசபுரி வாழ்க்கை, ஆடம்பரமான உணவு வகைகள், விதவிதமான ஆடைகள் கொண்ட குடும்ப அமைப்பில் ஆசிரியர் அலெக்ஸ்சாந்தர் இருந்திருப்பார் என்று எவராவது நினைத்தால்... ஏமாற்றந்தான் அவர்களுக்குக் கிடைக்கும்.

யாழ்ப்பாணத்தின் ஏழ்மையைக் காட்டும் அதே வீடு, எந்த இடத்துக்கும் இலகுவாகப் பிரயாணிக்கக் கூடிய அதே சைக்கிள், ஒருவருடைய உழைப்பில் பெரிய குடும்பத்தைக் கவனிப்பதிலுள்ள குறைபாடுகள் என்று யாழ்ப்பாணத்தின் சராசரிக் குடும்பத்தினது வாழ்க்கையை இறுதிவரை கடைப்பிடிக்க நேர்ந்துள்ளதென்றால், இவர் தனது பட்டம் பதவிகளையும் செல்வாக்கினையும் துஷ்பிரயோகம் செய்யாதிருந்த நேர்மையைப் புரிந்து கொள்ளலாம்.


1983 ஜுலைக்குப் பின்னர் நான் எனது மனைவி மகனுடன் மீண்டும் யாழ்ப்பாணவாசியாகி, புதிய தினசரிப் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்த காலத்தில் இவருக்கும் எனக்குமிடையில் நிலவிய உறவு மிகவும் சுவாரஸ்யமானது. இதற்குக் காரணமாக அமைந்தது ஆசிரியத் தொழில் புரிந்த எனது மனைவி அலெக்சாந்தர் அவர்களின் மாணவியாக மாறியது. ஆசிரிய சேவைக்காலப் பயிற்சியில் அவர் விரிவுரைப் பொறுப்பாளரானதால், எனதுமனைவி அவரது மாணவியாக நேர்ந்தது.

"எனது மனைவியை மிகச்சிறந்த மாணவி" என்று அடிக்கொரு தடவை போற்றிக் கொள்ளும் ஆசிரியர், அதனை அவரிடம் அதிகூடிய வேலை வாங்குவதற்குப் பயன்படுத்துவதாக நான் கருதினேன். காரணம், எப்போதும் வீட்டின் மேசைகளில் பாடவிதான விடயதானங்களுடன் படங்கள் வரைவது, விளக்கம் எழுதுவது போன்ற கடதாசிகளும் வர்ண மட்டைகளும் குவிந்திருக்கும். தனது பாடசாலை நேரத்தின் மற்றைய நேரம் முழுவதையும் அலெக்சாந்தர் மாஸ்டர் கொடுக்கும் வேலைகளில் மனைவி செலவழிப்பதால், வீட்டின் வேலைகள் கவனிக்கப் படாதிருப்பது போன்ற உணர்வு எனக்கு.

ஒருநாள் அதிர்ஷ்டசவசமாக ஆசிரியர் என்னிடம் அகப்பட்டார். ஏதோ செய்தி போடுவதற்காக வழக்கமான சிரிப்புடன் பத்திரிகை அலுவலகத்துக்கு வந்தவரைக் கதிரையில் இருத்தி, ஒரு 'லெக்சர்' அடித்ததாக ஞாபகம்.

"எனது மனைவி ஆசிரிய வேலை பார்ப்பது சம்பளத்துக்காக அல்ல. எனது சம்பளம் எல்லாவற்றுக்கும் போதும். கல்வித்திணைக்கள பாடவிதானங்களைத் (syllabus) தெரிந்து கொண்டால் மகனுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு உதவியாகவிருக்கும் என்பதால்தான் ஆசிரிய வேலைக்குப் போகின்றா" என்று சொல்லிவிட்டு, சேவைக்காலப் பயிற்சி தொடர்பான அதிக வீட்டு வேலைகள் கொடுப்பதை நான் விரும்பவில்லை என்றும் சொல்லி வைத்தேன்.

நான் ஏன் இதனைச் சொல்ல நேர்ந்தது என்பதை அவர் புரிந்திருக்க வேண்டும். முழுநாளும் பத்திரிகை அலுவலகமே தஞ்சமென்று இருக்கும் நான், வீட்டில் நிற்கும் சில மணி நேரமாவது மனைவி பிள்ளையோடு



2001ம் ஆண்டு நடைபெற்ற 'தமிழர் தகவல்' பத்தாவதாண்டு விழாவில் கல்விப் பணிக்கான விருதினை திரு. எம். எஸ். அலெக்சாந்தர் அவர்கள் அப்போது கனடிய மத்திய அமைச்சராகவிருந்த மரியா மினா அவர்களிடமிருந்து பெறுகின்றார்.
(படம்: அகிலன் அசோஷியேற்ஸ்)



'தமிழர் தகவல்' நடத்திய கனடா தினவிழா – 2003ல் எம். எஸ். அலெக்சாந்தர் அவர்களுக்கு ஆலய அறங்காவலரும் தமிழர் தகவல் நிலையத் தலைவருமான திரு. நா. சிவலிங்கம் அவர்கள் திருவள்ளுவர் சிலை வழங்கிக் கௌரவம் செய்கிறார்.
(படம்: அகிலன் அசோஷியேற்ஸ்)

இருப்பதற்கு அவர் கொடுக்கும் அளவுக்கதிகமான வேலை தடையாக இருப்பதை நேரடியாகச் சொல்ல நேர்ந்தது தவிர்க்க முடியாதது.

"இல்லைப் பாருங்கோ, அவ ஒரு கெட்டிக்கார மாணவி" என்ற தனது பக்கத்தை அலெக்சாந்தர் மாஸ்டர் விடுவதாக இல்லை. நானும் எனது முடிவை மாற்றுவதாக இல்லை. இதன் பின்னர் அவரை ஒரு வில்லனாகவே நான் பார்ததேன். இருப்பினும் அவரது சிரிப்பு, பேச்சு ஆகியவைகளில் எந்த மாற்றமுமில்லை. ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் மிகக் கவனமாக இருந்தார். நான் அலுவலகத்தில் இல்லாத நேரம் பார்த்து, தமது செய்திகளை எனது உதவி ஆசிரியர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்று விடுவார்.

என்னைப் பற்றிய அபிப்பிராயம் அதன் பிறகு மாறியிருக்க வேண்டும். "திரு ஒரு terror (பயங்கரவாதி) என்று சிலரிடம் அவர் சொல்லியது எனது காதுக்கு வந்தது. இப்பவும்தான் என்ன? அதிபர் கனகசபாபதி அவர்களிடம் என்னைப் பற்றிப் பலமுறை சொல்லியது எனக்குத் தெரியும். எனக்கு முன்னாலும் சொல்லியுள்ளார் பலதடவை. இப்போ நீங்கள் பார்க்கும் திரு வேறு. இப்போது சாந்தசொரூபியாகிவிட்டார். என்று சொல்லும்போது அவர் வதனத்தில் உண்மையொளி பளிச்சிடும்.

கனடா வந்த பின்னர் எங்களுக்கிடையேயான உறவின் நெருக்கம் அதிகமாகியுள்ளது. தமிழர் தகவலின் ஆர்வ வாசகர் அவர். தவறாது ஆண்டு மலர்களில்

எழுதி வருகின்றார். "உன்னால் முடியும், உன்னை நம்பு" என்பதே இவரது எழுத்தின் அடிநாதம். செல்லுமிடமெங்கும் தமிழர் தகவலின் அவசியத்தை வலியுறுத்திச் சொல்லி வருபவர். அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு நல்ல கருத்துக்களை முன்வைப்பவர். "தமிழர் தகவல் மட்டும் போதாது" என்று சொல்லி எந்தெந்தத் துறைகளில் நான் புத்தகம் போடவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறுவார். எல்லாவற்றுககும் "ஓம், ஓம்" போடுவது எனது பாணியாயிற்று.

இத்துணை வயதிலும் கல்வித் தேடலில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தி வரும் இவரது ஆற்றலும் ஆளுமையும் ஆய்வுக்குரியவை. இதனால் கல்விப் பணிகளுக்கான 'தமிழர் தகவல்' விருதினைக் கனடாவில் பெற்றவர். இப்பொழுது அதற்காகவே அமெரிக்காவிலுள்ள உலகப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

என்னதான் சொன்னாலும் இந்த விடயத்தில் எனக்கு முழுமனதான ஒப்புதல் இல்லை. கல்வியியலில் தொடர் நாட்டமுற்றுச் செயற்பட்டு, அதற்கான தேடலில் வெற்றி கண்டு வரும் பண்டிதர் எம். எஸ். அலெக்சாந்தர் படிப்படியாக கல்வித் தகைமைகளையும் பல்கலைக் கழகப் பட்டங்களையும் பெற்றவர். அந்த வழிமுறையில் படித்தே கலாநிதிப் பட்டம் பெறக்கூடியவர். அவ்வாறான ஒருவர், கௌரவ கலாநிதிப் பட்டதை ஏற்றதன் காரணம் என்ன என்பது எனக்குள் எழுந்திருக்கும் விடை தெரியாத கேள்வி.

அவரைப் பாராட்டி விழா எடுப்பது அவரது கலாநிதிப் பட்டத்துக்காகவன்றி, கல்வித் தேடலுக்கானதாகவும் இருக்கையில் அதன் மதிப்பும் பெருமையும் உயர்வு பெறுகின்றன.

இச் சந்தர்ப்பத்தில் அவரது கட்டுரைகளின் தொகுப்பு நூலொன்றை வெளியிடுவது சாலப் பொருத்தமானது என்ற எண்ணத்தை அவரிடம் தெரிவித்த போது மகிழ்ந்தார். அவரது மூன்று கட்டுரைகள் ஏற்கனவே என்னிடமிருந்ததால், மேலும் சில கட்டுரைகளை எழுதித் தந்தால் போதுமென்று சொன்னபோது உற்சாகமடைந்தார். அதனை 'அகிலன் அசோஷியேற்றஸ்' வெளியீடாக்க விரும்புவதையும் கூறியபோது தமது சம்மதத்தைக் கண்களால் தெரிவித்தார்.

பாராட்டு மலருடன் இணைந்ததாக, 'வெற்றி பெற' என்னும் தலைப்பில் அவரது கட்டுரைத் தொகுதியும் வெளிவருவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருகிறது. ஒரு காலத்தில் என்னால் வில்லனாகப் பார்க்கப்பட்ட ஒருவரை இப்போது உயர்ந்த மனிதனாகப் பார்க்கின்றேன். நல்லதொரு சமூக முன்னோடியாகப் பார்க்கின்றேன். உன்னதமான கல்வியியலாளராகப் பார்க்கின்றேன். ஆசிரியப் பெருந்தகையாக பார்க்கின்றேன். அவரை அணுகுகையில் மதிப்பும் மரியாதையும் இணைந்தே வருகின்றன.

சும்மாவா சொன்னார்கள் -
'Alexander the Great' (மகா அலெக்சாந்தர்) என்று!



தமிழ்க் கலைக்கல்லூரி – இலக்கியக் கண்காட்சியில் விழா நாயகர் – வகுப்பு பரிசு பெற்ற அகப்பொருள் காட்சி. ஜிம் கரியானிஸ், M.P க்கு விளக்கமளிக்கும்போது – 1999

# பணித்தளத்தில் கலாநிதி எம்.எஸ். அலெக்சாந்தர்

எஸ். பத்மநாதன் (B.A Hons. Dip. Ed.)

வாழ்க்கையே கல்வி. கல்வியே வாழ்க்கை (Life is education, education is life) என்ற கல்விச் சிந்தனையை அறிந்து கொண்ட ஒவ்வொருவரும் இதற்கு உதாரணமாக ஒருவரை நினைவு கூர்ந்தால் மனக்கண்ணில் தோன்றுவார்கள். எம்.எஸ் அலெக்சாந்தரும் முக்கிய ஒருவராக இருப்பார். அந்த அளவுக்கு வாழ்நாள் முழுவதும் கல்வி தவிர்ந்த சிந்தனை வேறொன்றில்லாதவர் இவர். இவரது இரத்தத்தில் இது ஊறிவிட்டதோ என்னவோ! எவரைச் சந்தித்தாலும் ஏதாவது கல்விச்சிந்தனை பற்றியே உரையாட ஆரம்பிப்பார். இலங்கையில் தோன்றிய கல்வியாளர்களுள் பல்வேறு கஷ்டங்களுக்கூடாக தொடர்ந்து படித்து மேதாவியான ஒருவராக இவரைக் கருத முடியும். இவரது பல்வேறு திறன்கள் ஆற்றல்கள் முகிழ்த்து வந்த வேளையில் தான் இவருக்கு அமெரிக்காவில் உள்ள உலக பல்கலைக் கழகம் தமிழ்க் கல்விக்கான 'கலாநிதி' பட்டத்தினை வழங்கி கௌர வித்துள்ளது. ஒரு நடமாடும் பல்கலைக் கழகத்தினை நிறுவன ரீதியான பல்கலைக் கழகம் கௌரவிப்பது போன்றுள்ளது இந்நிகழ்வு. தன் வாழ்நாள் முழுவதினையும் கல்விக்காக அர்ப்பணித்த இவருக்கு இப்பட்டம் பொருத்தமானதே. ஒருவகையில் கல்வித் தத்துவமாகவும் மகிழ்ச்சித் தத்துவமாகவும் கூட நம்முள் வலம் வந்து கொண்டிருப்பவர் இவர்.

சிறுவயது முதல் தொடர்கல்வியில் ஈடுபட்டு வந்த இவர் 1987 தொடக்கம் 1993 வரையும் தேசியகல்வி நிலையத்தில் துணைப் பணிப்பாளராக கடமை புரிந்து பெருமதிப்பு பெற்றார். அங்கிருந்து 22 வெளியீடுகளை அறிஞர்களுடன் இணைந்து வெளியிட்டார். 1993ல் கனடாவுக்குப் புலம்பெயாந்த இவர் ஒன்றாறியோ கல்விச்சபையில் ஆசிரிய நியமனம் பெற்று கடமை புரிந்துள்ளார். அதேவேளையில் தமிழ்க் கலை தொழில்நுட்பக் கல்லூரியில் இணைந்து ஆசிரியராக பணிபுரிந்ததுடன் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் கனடிய இணைப்பு விரிவுரையாளராகவம் பணிபுரிந்துள்ளார். தமிழ் இலக்கணம், இலக்கியம் போன்ற துறைகளில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் கல்வியியலிலும் ஆற்றல் கொண்டிருந்ததால் நிறையவே மாணவர்களின் அன்பினை பெற்றுக்கொண்டார்.

இவரது எழுத்துப் பணிகூட பல்வேறு சஞ்சிகை களிலும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக கனடாவில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு மலர், திருவள்ளுவர்விழா மலர் போன்றவற்றில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழர் தகவல் அண்டுமலரிலும் இவர் கட்டுரைகளை எழுதிவருகிறார். அத்துடன் தமிழ்க் கலை தொழில்நுட்பக் கல்லூரியில் மொழித்திட்டப் பணியில் இணைந்து அதிபர் பொ. கனகசபாபதி அவர்களது மேற்பார்வையில் முதல்தரம் தொடக்கம் 7ம் தரம் வரையிலான மாணவர்களது தமிழ் மொழிநூல் வெளியிடுவதில் முயன்றுள்ளார். அதனால் குழந்தைகள் உலகம் அவருக்கு என்றும் தம் நன்றியறிதலைக் கூறிவரும்.

இவரது கல்விப்பணி எழுத்துப்பணி காரணமாக தமிழர் தகவல் நிறுவனம் இவருக்கு கல்விப்பணிக்கான விருதினையும், தங்கப் பதக்கத்தினையும் வழங்கிக் கௌரவித்துள்ளது. பல்வேறு மன்றங்களும் அவரை பாராட்டத் தவறவில்லை. பல்துறை ஆற்றல் திறமை கொண்ட இவரை எனது பணியூடாகச் சந்தித்தமை ஒரு மறக்கமுடியாத நிகழ்வாகும். 1983ம் ஆண்டில் இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

அலெக்சாந்தரின் பணித்தளம் மிகவும் பயன்பாடுடன் அனைவராலும் அறியப்பட்டுள்ளதொன்று. மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரி (1973-1975), கொழும்புத்துறை ஆசிரியர் கல்லூரி (1975-1980), பின்னர் பலாலி ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றில் விரிவுரையாளராக அவர் கடமையாற்றிய காலம் அவரது வாழ்வில் பொற்காலமாகும். இந்தக் காலத்தில்தான் இவரது சிறப்புக்களை நான் அறிந்து கொண்டிருந்தேன். எனக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூாயில் விரிவுரையாளர் நியமனம் கிடைத்ததும் பதவியேற்பதற்கு முன்பாக அலெக்சை எப்படியும் சந்தித்து சில விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் இருந்தேன். அவரைச் சந்திக்க சென்ற எனக்குள் ஒரு குதூகலம் பிறந்தது. அவரைச் சந்தித்த வேளை அவரிடம் உள்ள கள்ளம் கபடமற்ற தன்மை என்னை வெகுவாக கவர்ந்துவிட்டது. மகிழ்ச்சி ததும்பிய முகத்துடன் அவர் என்னை வரவேற்று உரையாடினார். என்னை 'பத்ஸ்' என்றுதான் அழைப்பார். மணிக்கணக்கில்

நேரம் போவது தெரியாமல் உரையாடினோம். படிப்பு, கல்வி, மாணவ உலகம் தவிர்ந்த வேறொன்றினையும் அவர் பேசவில்லை. இறுதியில் என்னைத் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு வந்துவிட்டார். அங்கு அப்போது அதிபராக இருந்த திருமதி ஆனந்தகுமாரசாமியிடம் என்னை அறிமுகம் செய்து பின் அனைவரும் உரையாடினோம். அதிபர் அலெக்சிடம் பழகிய விதத்தினைப் பார்த்தபோது இவரது சிறப்புக்களை நான் அறிந்து கொள்ள முடிந்தது. யாழ்.குடாநாட்டில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் பல ஆசிரியர்கள் இவரிடம் கல்வி பெற்றவர்களாக இருந்தனர். அவர்களது கணிப்பின்படி இவர் விரிவுரைக் காகவே பிறந்தவர் என்பதுதான். அவர் உண்மையில் தன்வாழ்வின் பெரும்பகுதியை கற்பித்தலில் செலவிட்டுள்ளார் என்பது தெரிந்ததொரு விடயமாகும்.

அலெக்சுக்கும் எனக்கும் பணியூடாகப் பின்பு பல தொடர்புகள் ஏற்படலாகின. அவர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் நான் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் கடமை புரிந்தாலும் கல்வித் திணைக்களத்தின் பரீட்சைகள், மேற்பார்வைகள், கருத்தரங்குகள் இடம்பெறும் வேளையில் சந்திப்போம். இதனால் இருவருக்கும் இடையில் பல தொடர்புகள் ஏற்பட்டன. குறிப்பாக, ஆசிரியர்களுக்கான தங்குமிட விரிவுரைகள் கருத்தரங்குகள் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும்போது இணைந்து செயல்படுவோம். ஒரு தடவை கிழக்கு மாகாணத்தில் உள்ள அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூயில் இருவரும் இணைந்து நடத்திய கருத்தரங்கு பெருவரவேற்பைப் பெற்றது. மாணவர்கள் இதில் பெருநன்மை பெற்றிருந்தார்கள். இருவரையும் அவர்கள் வாழ்த்தி நின்றது இன்னும் மனக்கண் முன்வருகிறது. அவருக்கென்ற ஒரு தனிப்பாணி இருக்கும். அது என்னுடன் ஒத்துப்போவதால் எமது விரிவுரைகள் சிறப்பாக அமைந்து விடும்.

1985ல் இருவருக்கும் இடையில் இருந்த நட்பு எனது கனடிய புலம்பெயர்ந்த மண்ணில் சற்று மாறுதலடைந்து விட்டது. இந்தக் காலத்தில்தான் அவர் இலங்கையில் முதலில் குறிப்பிட்டது போன்று பல உயர் பதவிகள் வகித்துப் புகழ் பெற்றுக் கொண்டார். அவரின் விடாமுயற்சியும், பொறுமையும், சேவை மனப்பான்மையும் அவரை உயர்த்தின. 1995இல் மீண்டும் அவரை காண நேர்ந்த வேளை மீளவும் இருவரும் மகிழ்ந்து கொண்டோம். இங்கு வந்த இவர் பல கற்பித்தல் அனுபவங்களைப் பெற்று நூல் எழுதும் குழுவில் இணைந்து செயற்பட்டு கவிதை, பாடல்கள் இயற்றும் துறைகளில் பலருக்கு உதவிநின்றார். இதனால் மாணவர் உலகம் இன்றும் நன்றி பாராட்டி நிற்கின்றது. இவர் இலக்கியத்தை சிறப்பாக கற்பித்து பெருமதிப்பு பெற்றார்.

ஆசிரியராக, விரிவுரையாளராக, கல்விப் பணிப்பாளராக, பாடநெறி தயாரிப்பாளராக பல்றே துறைகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த இவருக்கு கனடிய மண்ணின் புதிய மாணவர்கள் புதுவரவேற்பு காட்டினார்கள். புதிய உற்சாகத்துடன் ஓய்வின்றி தொழிற்பட்டார். இதனால்தான் இவர் செல்லுமிடமெங்கும் தமிழ்மொழி உயர்ந்து; கவிபிறந்தது. இவர் மனம்விட்டு உரத்துப் பேசுவார். மகிழ்ச்சி ததும்பத் தன் கருத்துக்களை வெளிவிடுவார். இறுதியில் தன் கல்வி பற்றிய இதயச் சுமையை எப்படியும் இறக்கி வைப்பார்.

தமிழீழத்தில் உருவான பல்வேறு கல்வியாளர்களில் எம்.எஸ். அலெக்சாந்தரின் சிறப்புக்கள் பலவாகும். மிகுந்த போராட்டங்கள், சிரமங்களுக்கு மத்தியில் கல்வியைத் தேடிய இவர், இதனை மற்றவர்களுக்கு வழங்குவதில் முன்னின்று உழைத்தவர். மொழி ஆய்வு, கல்வி ஆய்வு, உளவியல் ஆய்வு என்பவற்றில் ஆற்றல் இவரிடம் இருந்தது. ஆங்கில அறிவும் கூடவே இருந்தது. எனவே பரந்தஞானம் நிரம்பிய கற்பித்தல் முறைகளை இவர் உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். இவரது பணித்தளத்தில் இணைந்து கொண்ட எனக்குப் பல்வேறு விதங்களில் இவரது முன்மாதிரி உதவியுள்ளது. நினைவுப் பேச்சு, எழுத்து எல்லாவற்றிலும் தமிழ் மொழி வளர்ச்சியை இணைத்துக் கொண்டுள்ள அலெக்சாந்தர் உதவிக் கொண்டேயிருப்பார்; தமிழ்ப்பணியைச் செய்து கொண்டேயிருப்பார். தமிழர் நலம்பற்றிச் சிந்தித்துப் பேணும் வழிகளைச் செயற்படுத்திக் கொண்டேயிருப்பார்; தமிழர் நலமே பேணுவார்.

# கலாநிதியுடன் எனது பணியும் சிறந்த அனுபவமும்

P. பெனடிக்ற்
முன்னாள் அதிபர், பேசாலை றோ. க. வித்தியாலயம், மன்னார்

அமெரிக்க உலகப் பல்கலைக் கழகத்தினால் தமிழ் கலாச்சாரக் கல்விக்கான கலாநிதிப்பட்டம் வழங்கி, கௌரவிக்கப்பட்ட பண்டிதர் எம்.எஸ். அலெக்சாந்தர் அவர்களை நன்கு அறிந்தவர் என்ற முறையிலும், எனது சிறந்த ஆசான் என மனதார வாழ்த்தி, புகழ்வதோடு நான் அவரோடு பெற்ற அனுபவங்களைப் பகிர்வதில் பெரும் பாக்கியமும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

## தமிழ் அவரது உயிர்

இவருக்கு வழங்கப்பட்ட கௌரவம் உண்மையில் பொருத்தமானது. இது அவரின் திறமைக்கு வழங்கப்பட்ட பரிசு. தமிழ் அவர் மூச்சு. தமிழை மிகவும் நேசிப்பவர். தமிழ் அவரில் அமுதமாகச் சுரக்கும். தமிழ்க் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, இலக்கண இலக்கியத்தில் மிகவும் பாண்டித்தியம் உடையவர். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத் தமிழ் பண்டிதர் ஆகிய இவர் தமிழில் மட்டுமல்ல சரிசமனாக ஆங்கிலத்திலும் திறமை உடையவர்.

## தாய்நாட்டில் அவர் பணி

இவர் தாய் நாட்டில் பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகவும், ஆசிரிய ஆலோசகருக்கு கல்வி அதிகாரியாகவும், கடமையாற்றிப் பலரின் பாராட்டையும் மதிப்பையும் பெற்றவர். அத்தோடு தொலைநிலைக் கல்வி ஆசிரியர் பாடவிதான சபையிலும் பணியாற்றிய மிகுந்த அனுபவசாலி. இவர் கல்விப் பணியோடு சமய சமூகப் பணியிலும் சேவையாற்றியதை நான் நன்கு அறிவேன்.

## இவரின் குணாதிசயங்கள்

பழகுவதற்கு மிகவும் இனியவர். நல்லவர். மனித நேயம் உடையவர். பொதுநல நோக்குக் கொண்டவர். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். சகலரையும் மதிக்கும் மாண்புடையவர். எவரைக் கண்டாலும் புன்னகை யோடு உடம்பையும் அசைத்து சுகம் நலம் விசாரிப்பார். மற்றவர்களுக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ, அவ்வளவுக்கு தனது அன்புக் கரத்தைக் கொடுத்து சந்தோசப்படுவார். அவரோடு நான் பழகியதில் இருந்து, பல அனுபவங்களைப் பெற்று நானும் அப்படி வாழப் பழகிக் கொண்டேன்.

## புலம்பெயர்ந்த நாட்டில் பணி

1995ம் ஆண்டு நான் தமிழ் தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்பிக்கும்போது இவரைக் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவர்தான் தமிழ் தொழில்நுட்பக் கல்லூரி தமிழ் பிரிவுக்குத் தலைவராகக் கடமையாற்றினார். அப்போது நான் லான்ஸ்டவன் வளாகத்தில் படிப்பித்துக் கொண்டிருந்தேன். அங்கே எங்கள் குறைநிறைகளைப் பார்க்க வந்தபோது என்னை முதல் கண்டு 'தம்பி' என்று சுகம் விசாரித்து அறிமுகம் செய்யப்பட்டேன். நானும் ஆசிரிய ஆலோசகர் என்று சொன்னதும் மிகவும் சந்தோசப்பட்டார். அந்த ஆண்டில்தானே என்னையும் சேர்த்து, புலம்பெயர்ந்த தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்பு முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து காலத்துக்குக் காலம், பயிற்சி வகுப்புகள் இங்குமட்டுமல்ல மொன்றியல் நகரங்களுக்கும் சென்று, கற்பித்தல் உத்திகளைச் சொல்லிக் கொடுத்ததோடு கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் பிரச்சினைகளுக்கு சிறந்த வழிகளைக் காட்டி வழிசெய்தவர். அத்தோடு, ஆசிரியர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை அணுகி பொறுப்பான இடத்தில் பொறுப்பாளர்களோடு பேசி, பரிகாரம் காணும் பரோபகாரி. இப்படிப்பட்டவரோடு நானும் ஒருவனாகச் சென்றதில் பல அனுபவம் பெற்றதோடு, பெரும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

## புத்தகம் வெளியீடு 1-3 ஆண்டு

கத்தோலிக்க கல்விசபையால் சர்வதேச மொழி தமிழில் பாடப் புத்தகம் வகுப்பு 1 தொடக்கம் 3 வரை எழுதுவதற்கு ஒரு குழு 1997ல் தெரிவு செய்யப்பட்டது.

அக்குழுவின் தலைவராக இவர்தான் நியமனம் செய்யப்பட்டார். அக்குழுவில் நானும் ஒருவராக இருந்தேன். அவரின் வழிகாட்டல், ஆலோசனையில், நெறிப்படுத்தலிற் பல அலகுகளில் திட்டமிட்டு, புலம்பெயர்ந்த மாணவர் இலகுவான முறையில் கற்பதற்கு கனடா பாடத்திட்டத்திற்கு அமைய மிகவும் சிறந்த புத்தகங்களாக வெளியிடப்பட்டன. இப்புத்தகங்களைப் பற்றி ரொறன்ரோ கல்விச்சபை மட்டுமல்ல, பல ஆசிரியர்கள், கல்விமான்கள், பெற்றோர் பாராட்டிப் புகழ்வதற்கு அவரின் அழுத்தமும் கைவரிசையுமே காரணங்களாகும். இதனால் நான் மட்டுமல்ல, அக்குழுவின் யாவரும் பற்பல அனுபவங்களையும் அவரின் அன்பையும் ஆதரவையும் பெற்றுப் பயன் அடைந்தோம்.

### எனது நன்றி

இவர் எனது குரு. சிறந்த வழிகாட்டி. பலகாலம் அவரோடு பழகவும், படிப்பிக்கவும், பயிற்சி வகுப்புகள் நடத்தவும் சந்தர்ப்பம் கிடைத்தது. எங்கு சென்றாலும் என்னையும் அழைப்பார். இவர் வழிநின்று என் அறிவைப் பலவழிகளிலும் உயர்த்தியதோடு, கற்றல் கற்பித்தலில் பல உத்திகளை அவர் மூலம் அறியும் வாய்ப்புக்களும் ஏற்பட்டன. கற்றலோடு, வாழ்க்கைக்குரிய பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன் என்று சொல்வதில் பெரும் மகிழ்ச்சி.

அவர் நற்சுகம் பெற்று பல்லாண்டு வாழ்ந்து மேலும் மேலும் பட்டங்கள் பெற்று, அவரும் அவர் குடும்பமும் சிறக்க வாழ்த்துகிறேன்.

## எனது அன்பான பாராட்டுக்கள்

கலாநிதி அலெக்ஸ்சாந்தரும் யானும் பலாலி ஆசிரிய கலாசாலை நண்பர்கள். இருவரும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் செல்லு முன்னர் தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசலைகளிலும் பயிற்சி பெற்று தமிழ் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். 1968ஆம் ஆண்டில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அவர் ஆங்கில ஆசிரியராகவும் யான் வர்த்தக ஆசிரியராகவும் விசேட பயிற்சி பெற்றோம். அக்காலத்திலேயே அலெக்ஸ் அவர்கள் தமிழ் மொழியில் கட்டுரைகள் கவிதைகள் எழுதுவதில் சிறந்து விளங்கினார். பின்னர் யான் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நல்லூர் கல்வி வட்டாரத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய காலங்களில் இவர் பலாலி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவர் ஒரு தமிழ்ப் பண்டிதராகவிருந்ததனால் தமிழில் சிறந்த புலமையும், கவிதை எழுதுவதில் சிறந்த வித்துவமும் உடையவராக விளங்கினார். இவர் இலங்கையில் மட்டுமல்லாது கனடாவிலும் மேல் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்பித்து வந்துள்ளார். இவரை யான் தமிழ் கற்பித்த பாடசாலை மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்ததோடு இலக்கியப் பாடமொன்றையும் நடத்த ஆவன செய்தேன். இவரின் தமிழ் கற்பித்தல் திறமையை இலங்கையிலும் கனடாவிலும் மாணவர் வியந்து பாராட்டியுள்ளனர். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளரும் நல்ல பண்பாளருமாவார். இவருக்குக் கலாநிதிப் பட்டம் கிடைத்தமை சாலவும் பொருத்தமானதே. ஒவ்வொரு ஆணின் உயர்வுக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பார் என்று சொல்வார்கள். அந்த வகையில் இவரின் முன்னேற்றங்களுக்கெல்லாம் இவரின் துணைவியார் மேரி மெற்றில்டா பின்னிருந்தமையை யான் நன்கு அறிவேன். இவர் மேலும் தனது துணைவியாரோடும் பிள்ளைகளோடும் நீடு வாழ்ந்து தமிழ் அன்னைக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டுமென இறைவனை வேண்டி எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சு. சிவநாயகமூர்த்தி
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
இலங்கை

# காலம் தந்த பரிசு

கனிவான ஓர் ஆசான்
அலெக்சாந்தர் எனும் பெயர் தாங்கி
அன்புருவாய் பலர் மனதில்
ஆணிவேராய்ப் பதிந்துள்ளார்.
நீருற்றுப் போன்ற அவர் தம்
அறிவூற்றை நான் பருக
என்ன தவம் செய்தேனென
எந்நாளும் எண்ணுகிறேன்.

பன்மொழி அறிந்த பண்டிதரவர்
இன்தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணம்
வன்மையாய் இருப்பினும் மென்மையாய்க் கூறி
மாணவர் மனதில் பசுமரத்தாணி போல்
பதிய வைப்பார்.

கவிதை என்பதும் கண்முன் நிற்பார்
எதுகை மோனை எழுத வைத்தார்
தளை சீர் அடி தொடை கண்டு
தமிழைச் சுவைக்கச் செய்தார்
'நிலைக்குமா கனடாவில் தமிழ்' என
தலைப்பும் தந்து பேச வைத்தார்.

ஆங்கிலத்திலும் கவியெழுதும் ஆற்றல் கொண்டார்
அரவணைத்த தம் மாணவர்க்கும் அவ்வறிவு
அமைய வேண்டும் என ஆசை கொண்டார்
அயராத தன் முயற்சியதனாலே
அறிவாளிகள் பலரை உருவாக்கிவிட்டார்.

வெண்பாவால் மாணவரைத் தன்பால் ஈர்ப்பவர்
நண்பா எனப் பழகும் தகுதி உடையவர்
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைபவனே என
நயமுடனே குறளமுதைக் கூறி
நல்லொழுக்க மாணவரைச் சமுதாயத்தில்
தோற்றுவிக்கும் பேராசான்.

பன்மொழிப் பண்பாட்டுச் சூழலிலே
தாய்மொழியாம் தமிழ்மொழியைக்
கற்கும் முறையும் கற்பிக்கும் முறையும்
கற்பித்த ஆசான் காலம் தந்த பரிசு.

அன்பால் பிறர் மனத்திருந்து
அறிவால் சுடர் பரப்பி
தன்பால் உள்ள அறிவைத்
தமிழுலகிற்கு அளிக்கும் வள்ளல்
கலாநிதி அலெக்சாந்தர் ஐயா வாழ்க நீடூழி!
வளர்க அவர் தம் புகழ் இவ்வுலகில்!

- இராஜ்மீரா இராசையா

# கலாநிதிக்கு என் சிறு கவித்துளிகள்!

நல்லூர்ப் பதியின் நனி சிறந்த வித்தகராம்
பல்லோர் புகழும் பண்பான பண்டிதராம்
கல்வியிலே கரைகாணா சமுத்திரமாய்
கலைகளிலே தனக்கேயுரித்தான தனித்துவம் கொண்டு
நெஞ்சிலே வஞ்சகமற்ற செம்மலாய்
நேரிய வழிதனை அமைத்து
மனிதநேயம் மிக்கவராய் மாண்புடன் மதிக்கப் பெற்று
திமிர்ந்த கல்வி ஞானச் செருக்குடன்
நிமிர்ந்து வீறுநடை போட்டு,
கசப்பான இலக்கணத்தை கற்கண்டாய் சுவைக்கச் செய்து
கற்பனைக் கெட்டாத அற்புதக் கவி படைத்து
தித்திக்கும் தீந்தமிழை தீஞ்சுவையாய்ப் பருகச் செய்து
தமிழ்த்தாயின் தவப் புதல்வனாய்
தமிழன்னையைத் தன் அகராதியால் அலங்கரித்து
ஔவை நெறியை அமிழ்தமெனக் கொண்டு
வள்ளுவன் வகுத்த வழி நின்றொழுகி
ஆன்மீகத்தில் ஆழமாய்த் தடம் பதித்து
ஆண்டவன் பாதம் அனுதினம் தொழுது
குடும்பம் எனும் கலைக்கோவிலில்
குடியிருக்கும் தெய்வமாய்
அடிசிற்கினியாளின் அன்புள்ளம் கொள்ளை கொண்டு
கண்மணி போன்ற செல்வங்களுடன்
கருத்தாளும் வாரிசுகளாம் - கலாநிதி அலெக்ஸ் குடும்பம்
அழகிய நறுமலர்கள் புடைசூழ - ஆத்ம திருப்தியுடன்
உற்றார் உறவினர் உவந்தே நல் வாழ்த்திசைக்க
உதயசூரியனாய் என்றென்றும் ஒளிவீசி
பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் இந்நன்னாளில்
பேரானந்தத்துடன் பேரோடும்,புகழோடும்
பெருந்தகையே! கவிச்சரமே! கலாநிதியே!
நீவிர் நீடூழி காலம் வாழ்க, வாழ்கவென
ஈசனடி தொழுது இதயத்தால் வாழ்த்துகின்றேன்!

மாணவி - கரோலின் கங்காதரன்
அவுஸ்திரேலியா

# ‘மகா’ மனிதர்

திரு. அலெக்சாந்தர் அவர்கள் முதன்முதலாக எம்முடன் அறிமுகமான பொழுது சரித்திரப் புகழ்பெற்ற மகா அலெக்சாந்தரின் ஞாபகம்தான் வந்தது. அன்று தொடக்கம் எனதுள்ளத்தில் மகா என்ற அடைமொழி நினைக்கும் தோறும் வரும்.

எதில் அவர் ‘மகா’! நூலை வாசித்து முடிய நீங்களே உணர்ந்து கொள்வீர்கள். ‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’ என்பது ஆன்றோர் வாக்கு. சிலருக்கு ஓய்வாக ஒரு நிமிடம் தானும் இருக்க மனம் வராது. உடலுக்கு அத்தியாவசிய தேவையான நித்திரை செய்தலைக்கூட, அவப்பொழுதாக்கி விட்டேனே எனச் சிந்திக்கும் நம்மைப்போல பலர் இங்கே இருக்கிறார்கள். அத்தகைய ஒருவர் தான் இந்த மகா!

விடைத்தாள் திருத்தல், பரீட்சை மேற்பார்வையாளர் கூட்டம், ஒரு சில திருவிழாக்கள் இவற்றில் கண்டு பரஸ்பரம் சிறுவார்த்தையாடலோடு முடிவடைகின்ற நம் சிநேகிதம் 1983ம் ஆண்டு ஆடிக் கலவரத்தின்போது அழுத்கமவிலிருந்து பலாலிக்கு தற்காலிக இடமாற்றமாகச் சென்றபோதுதான் கூடிய பழக்கம் ஏற்பட்டது.

பலாலி ஆசிரிய கலாசாலைக்குச் சென்றதும் ஆசிரியர் அறையே ஒரு விசித்திரமான சூழலாக இருப்பதை உணர்ந்தேன். காலனித்துவ ஆட்சிக் காலம்போல ஒரு இறுக்க நிலை. தமிழனுக்கு ஒரு சிறு பதவி வந்தாலே போதும் - முகத்தில் ஒரு இறுக்கம், நாடி கொஞ்சம் உயரும், பொல்லு விழுங்கிய நடை- அறிமுகப்படுத்தப்பட்டால் ஒரு சிறு தலையசைப்பு. அதன் பின் பத்திரிகைக்குள்ளோ புத்தகத்துள்ளோ முகப்புதைப்பு. ஏற்கனவே அறிமுகமான சிலர்கூட விரிவுரையாளினிகளுட்பட சொல் எண்ணிப் பேசிவிட்டு முகமூடி போட்டுக் கொள்வார்கள். ஏன் இவர்கள் இயல்பாக இல்லை. ஓ! சொல்ல மறந்து விட்டேன். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானப் பயிற்சிகள் மட்டும் அங்கே நடப்பன. பாடசாலைகளில் மாணவரிடையே இவ்வேறுபாடு காட்டப்படுவதுபோல ஏனைய கலைப்பாட பயிற்சிக் கல்லூரிகளும் மதிக்கப்படுகின்றனவோ? சிரிப்பும் கும்மாளமுமான ஆசிரியர் ஓய்வு அறைகளுக்குப் பழக்கப்பட்ட எமக்கு இந்த மௌனத்தை உடைக்க வேண்டுமென்ற ஆசை.

நான் ஒரு பெரிய பிரசவ வேதனையில் இருந்தேன். எப்படி அங்கிருந்து கஷ்டங்கள் அனுபவித்து கொழும்பு வந்து பின்னர் ‘நாங்கூரிக்’ கப்பலால் இங்கே வந்து சேர்ந்தேன் எனும் அனுபவத்தை - கண்காட்சிகளை அவிழ்த்து வாணம்விட வாய்ப்பில்லையே என்ற புழுக்கம். சும்மா சொல்லக்கூடாது நானும் ஒரு சிறு வேடம் புனைந்திருந்தேன். அதாவது கொவ்வா கெப்ளர் வேதிமர் தத்துவப் புத்தகம் என் கையில்!

வந்தார் மகா அலெக்சாந்தர்! பத்து யாருக்கு அங்காலே நின்று கண்டதும் பாய்ந்து வந்து வாயெல்லாம் பல்லாக “வெல்கம் வெல்கம்” என்றபடி இரு கைகளையும் பிடித்துக் குலுக்கினார். அட்டகாசமாகத் “தப்பி வந்திட்டியள் எப்படி எப்படி” என்று களம் அமைத்துக் கொடுத்தார். அதற்காகத்தானே காத்திருந்தேன்! “கேளடா மானிடா....” என்ற ரீதியில் காது இரண்டையும் தீட்டிக்கொண்டு புத்தகத்துள் புதைந்திருந்த முகங்களுக்கும் சேர்த்து கதை சொல்ல இடைக்கிடை குறுக்கிட்டு மேலும் சுவாரஸ்யமாக இருக்கும்படி கேள்விகள் கேட்டு பரீட்சை எழுதும் மாணவன்போல அதி ஆவலாய் கேட்டிருந்தார். இறுகிய முகங்களும் தளர்நிலையடைந்தன.

அலெக்ஸ் பேசும்போது எனது சிந்தனை ஓடும் - இவரென்ன அவ்வளவு அப்பாவியா? குழந்தைகள் போல எவ்வித கல்மிஷமுமின்றி கரட்டுச் சுருட்டுகளுமில்லாமல் வெளிவெளியாகவே பேசுகிறாரே என. சிறுசிறு நிகழ்வுகளைக்கூட அட்டகாசமாகச் சிரித்து கைகளைப் பரத்திச் சொல்லும்போது சில சமயம் தேவைக்கதிகமாகச் சிரிக்கிறாரோ எனவும் தோன்றும். ஏதும் கோட்டை விட்டுவிடுவாரோ என எண்ணினால் அடுத்த நிமிடமே உசாராகி விடுவார். கீழ்மிடறால் எச்சரிக்கை தந்து உடனே சாதாரணமாகப் பேசிக்கொண்டே போவார்.

கல்லூரியைச் சுட்டிக் காட்டித் தனது வகுப்பு மாணவரையும் அறிமுகம் செய்து அவர்களின் கோரிக்கைக்கிணங்கி தன் பாடத்தையே என்னை நடத்தும்படி தந்தார். அதனால் அந்த ஆசிரிய மாணவர்கள் மத்தியில் எனக்கொரு மதிப்பையும் கணிப்பையும் பெற்றுத் தந்தார்.

எங்கள் காலத்தில் பொதுக்கல்வி என்ற நிலை வந்தாலும், ஆசிரியரிடையே ஒரு எழுதாத பாகுபாடு இருந்தது. சுயமொழி ஆசிரியர், ஆங்கில ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் எனப் பல பிரிவுகள். ஆங்கில ஆசிரியரும் பட்டதாரி ஆசிரியரும் இடைக்கிடை சேர்ந்தாலும் சுயமொழி ஆசிரியர் ஒரு தாழ்த்தப்பட்ட நிலையிலிருப்பார். இத்தனைக்கும் சிறுவகுப்புகளில் புத்தி ஈவு விவேகம் அதிபுத்திசாலித்தனம் எனப் பெயர் பெற்றோர் வளர்ந்ததும் தமது குடும்பநிலை, பணம் என்பதன் காரணமாக அல்லது பின்தங்கிய கிராமம், பெண்கள், உயர்கல்வி பெறச் செல்லுதல் மிக அருமை. இவர்கள் மிஞ்சி மிஞ்சிப் போனால் தமிழாசிரியராக வரமுடியும். பாலபண்டிதம், பண்டிதம், சைவப்புலவர் எனும் பிரத்தியேக அமைப்புகள் நடத்தும் வகுப்புகளில் சித்தியடையலாம்.

1957ம் ஆண்டு கல்விச் சீர்திருத்தங்களுடனும் பல்கலைக் கழகம்வரை சுயமொழிக் கல்வி புகுத்தப்பட்டதுடனும் புதிய பல சலுகைகள் வழங்கப்பட்டமை காரணமாகவும் தமது தொழிலில் இருந்து கொண்டே வெளிவாரி மாணவராக உயர்கல்வி பெறும் வாய்ப்பு கிடைத்தது. அத்துடன் இந்தியாவில் சில பல்கலைக் கழகங்களில் பிரத்தியேகமாணவரும் சேர்ந்து ஆங்கிலத்தில் பட்டதாரிப் பரீட்சை எழுதக் கூடியதாகவும் அமைந்திருந்தது. பலவிதத்தாலும் வஞ்சிக்கப்பட்ட சுயமொழி ஆசிரியர் பலர் மிகக் குறுகிய காலத்திலேயே பட்டதாரிகளாகித் தமது தகுதியை நிரூபித்தனர். மற்றைய பட்டதாரிகளை விடத் தமது அனுபவத்தால் உயர் பதவிகளையும் பெற்றனர். இது நல்லதொரு வரப்பிரசாதமாகும். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்ட நூற்றுக் கணக்கான பண்டிதர், தமிழ் ஆசிரியர்களுள் திரு. அலெக்ஸ் மாத்திரமல்ல பெண் எனும் காரணத்தால் தடை செய்யப்பட்டிருந்தும் கரை காணாத கல்வித் தாகம் செயற்பட்டு எம்மையும் உயர்நிலைக்கு அழைத்துச் சென்றது.

மூளையிற் சுரக்கும் முயற்சியு முடையார்க்கு
நாளை யென்பது நறுஞ் சோலையன்றோ.

உள்நின்று உந்தும் சக்தி மாத்திரமல்ல வெளியின் அனுசரணைகளும் சேர்ந்தால் அலெக்ஸ் போல பற்பல வெற்றிகளைக் குவிக்க முடியும்.

ஒரு நண்பன் என்ற முறையில் அலெக்ஸ் மேலும் பல பணிகளில் முயன்று சேவை பல புரிந்து நீடுகாலம் நோய் நொடியின்றி 'மகா' ஆக வாழ, இறைவனை வேண்டுவதோடு எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,
குறமகள்.

---

## நல்லாசிரியர் இலக்கணம்

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியலறிவோடு உயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே."

பண்பாடு உள்ள குடும்பத்தில் தோன்றுதல், இரக்க குணம், கடவுள் வழிபாடு இவைகளால் ஏற்பட்ட மேன்மையும், பல நூல்களை கற்றுத் தெளிந்த அறிவும் நூற்பொருளை மாணவர் எளிதிற் புரிந்து உணரும்படி தொடுத்துச் சொல்லும் ஆற்றலும் நிலம்போல பொறுமை, முயற்சி, கலங்காத தன்மை உடையவராய், மலைபோலும் துலாக்கோல் போலும் பூவையும் ஒத்த குணங்களைக் கொண்டவராய் உலக நடையை அறியும் அனுபவ அறிவு உடையவராய் நற்குணங்கள் உடையவராய் இருப்பவரே நூல் கற்பிக்கும் ஆசிரியராய் இருக்கத் தகுந்தவர்.

- நன்னூல்

# அன்பின் உறைவிடம் அலெக்ஸ்

சண்முகம் சரவணமுத்து B.A. (Lond.) Dip in Education (O.U.SL)
முன்னாள் சிரேஷ்ட போதனாசிரியர்
யாழ் தொலைக்கல்வி நிலையம்

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன் ஒரு நாட் காலை புகையிரத நிலையத்திற்கருகில் உள்ள என் இனிய தோழர், மறைந்த ச. செல்வராசாவின் வீட்டில் நான் உரையாடிக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் ஒரு வெள்ளை வாலிபன் வெள்ளை நிற நீளக்காற்சட்டையும், சேட்டும் அணிந்தபடி துவிச்சக்கர வண்டியை விறாந்தையின் ஓரமாக நிறுத்தினார். என் இனிய தோழர் அவரை எனக்கு அறிமுகம்செய்தார். அவர் வேறு யாருமல்லர் அலெக்ஸ் மாஸ்டர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் திரு. எம். எஸ். அலெக்ஸ்சாந்தர் ஆவார். இவ்வாறு அறிமுகமான அலெக்ஸ் அவர்கள் அப்பொழுது பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விசேட ஆங்கில பயிற்சி மாணவராக இருந்தார். இவர் துவிச்சக்கர வண்டியில் தனது வீட்டில் இருந்து வந்து தோழர் செல்வராசாவின் வீட்டில் அதனை வைத்து விட்டு யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி செல்வது வழக்கம்.

1962-1965 ஆம் ஆண்டுகளில் நானும் மறைந்த அதிபர் த. இராமநாதனும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இலண்டன் பட்டப்படிப்பு மாணவர்களாக இருந்தோம். அப்போது அலெக்ஸ் அவர்கள் தனது க. பொ. த. உ. த. பரீட்சைக்கு (லண்டன்) ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது வடமொழியில் அவருக்கு ஏற்பட்ட சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு என்னிடம் அவர் அடிக்கடி வருவார். அந்த நிலையில் எனக்கும் அவருக்கும் இடையிலான உறவு இறுக்கமாகியது. பின்பு எனது திருமணத்தை தானே முன்னின்று பேசி செய்து வைத்தார். எனது மனைவியின் வீடு அயலில் உள்ளபடியால் அவர் ஒரு குடும்ப நண்பரானார்.

பின்னர் 1989களில் தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியராகக் கடமையாற்றினார். அந்தவேளையில் அவர் என்னைத் தனது உதவியாளராக யாழ் மாவட்ட தொலைக்கல்வி நிலையத்தில் நிரந்தர போதனாசிரியராக நியமனம் பெறுவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தார். அது மட்டுமல்லாது எனது சின்னத்தான், சின்னக்காவின் ஒரே மகளைத் தனது இரண்டாவது மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததன் மூலம் எனக்கு சொந்தக்காரனாகியும் விட்டார்.

நண்பனாக, சகமாணவனாக, குடும்பநண்பனாக, மேலதிகாரியாக, சொந்தக்காரனாக, பேரானாக பல கோணங்களில் நானும் அலெக்ஸ் அவர்களும் கடந்த நாற்பது ஆண்டுகளாக தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர் ஓய்வு பெற்றபொழுது வடமாகாண தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியராக இலங்கைக்கல்வி நிர்வாக சேவையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்ற நிலையில் ஓய்வு பெற்றார். கனடாவுக்குச் செல்வதற்கு அறுபது வயது பூர்த்தியாவதற்கு முன்னர் ஓய்வு பெற்றார். இல்லாவிட்டால் அவர் ஒரு கல்விப்பணிப்பாளராகி ஓய்வு பெற்றிருப்பார்.

அவர் சமூக சேவையில் மிகவும் ஈடுபட்டார். அவருடைய திறமையின் காரணமாக வடமாநில போக்குவரத்துச்சபை பணிப்பாளர் சபையிலும் பனம்பொருள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையிலும் அங்கத்தவராக இருந்து அளப்பரிய சேவையாற்றியுள்ளார். அவருடைய பன்முகப்பட்ட திறமைகள் முழுவதையும் என்னால் இச்சிறிய கட்டுரையில் எழுத முடியாது. இருப்பினும் நான் அவருடன் இணைந்து இலங்கைத் தேசிய கல்வி நிறுவனத்தனால் நடத்தப்பட்ட தொலைக்கல்வி நிலையத்துடன் வேலை செய்த அனுபவங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

அவர் வடமாநில தொலைக்கல்வி நிலையத்திற்குப் பொறுப்பாக கிட்டத்தட்ட எட்டு வருடங்களுக்கு மேலான சிரேஷ்ட போதனாசிரியராகக் கடமையாற்றினார். அது மட்டுமல்லாமல் தமிழ் மொழியில் பிரதம இணைப்பாள எழுத்தாளராகவும் கடமையாற்றினார். அவருடைய தலைமையில் எழுதப்பட்ட தொலைக்கல்வி இதழ்கள் இருபது பகுதி இன்றும் தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்களாலும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகயிலும் மிகவும் பயனுள்ளவையாக உபயோகிக்கப்படுகின்றன. அவர் அந்த இதழ்களை (Modules) எழுதும்போது பல்வேறு தமிழ் அறிஞர்களுடன் கலந்துரையாடவும் அவர்களுயைட அனுபவங்களைப் பெறவும் முடிந்தது.


அப்போது அவர் முன்னாள் கல்விப்பணிப் பாளராக இருந்த இரா.சுந்தரலிங்கம், ஜனப்மன்சூர், சுப்பிரமணியம் (மல்லைமணி) காலம் சென்ற விரிவுரையாளர் நயினை வித்துவான் சி. குமாரசாமி, காலம் சென்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தன், முன்னாள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் வை.கா.சிவப்பிரகாசம், ஆசிரியர் நடேசன், கலாநிதி துரைராஜா முதலிய எண்ணற்ற

கல்வியாளர்களுடனும் தமிழ் அறிஞர்களுடனும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது.

தொலைக்கல்வியில் அவர் கடமையாற்றியபோது வடமாநிலத்திலுள்ள பல பாடசாலைகளில் சைக்கிளிலும் பிற்காலத்தில் மோட்டார் சைக்கிளிலும் சென்று வந்தார். இவ்வாறு தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியராகக் கடமையாற்றிய இவர் தேசிய கல்வி நிறுவனத்தினதும் யாழ் மாவட்டக் கல்வி திணைக்களத்தினதும் ஆதரவையும் பயிற்சி ஆசிரியர் மாணவர்களின் அன்பையும் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றிருந்தார். ஆசிரிய மாணவர் மீது அன்பு காட்டியும் அவர்களின் கல்வி சார் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவராகவும் விளங்கினார்.

தன்னிடம் பயிற்சி பெறும் ஆசிரியர்களுடைய குக்கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று அவர்களைத் தரிசித்து அவர்களுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு நல்ல நல்ல ஆலோசனை வழங்கினார். அவர் பல ஆசிரிய மாணவர்களுடைய குடும்ப நண்பராகத் திகழ்ந்தார். அவர்களுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமல்லாமல் அவர்களுடைய சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற தந்தையாகவும் விளங்கினார். நானும் தற்போது உதவிக் கல்விப்ப ணிப்பாளராக விளங்கும் மாதவகுமாரும் அவரின் பிரியமுள்ள சிஷ்யர்களாக பல அனுபவங்களைப் பெற்றோம். ஆசிரிய மாணவர்களுக்கு பௌதீக வளங்களை மிகச் சிறப்பாக வழங்கிய சிரேஷ்ட போதனாசிரியராக அலெக்ஸ் அவர்கள் விளங்கினார் என்றால் மிகையாகாது.

தற்போது அவருக்கு தமிழ்க்கல்வியில் கலாநிதிப் பட்டம் கிடைத்திருப்பதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அவர் தற்போது கனடாவில் தனது பிரிய மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்கிறார். அவருக்கு நீண்ட ஆயுளையும் தேகசுகத்தையும் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



மிசிசாகா OAC
வகுப்புத் தமிழ்
மாணவர்களுடன்
ஆசிரியர்



பட்டிமன்றத்தில் வெற்றிபெற்ற வகுப்பு – விழா நாயகர் வழிகாட்டியதற்கான பரிசு – 1996

# எங்கள் அலெக்ஸ்

அன்புடை நண்ப,

உங்களது உன்னத இலட்சியம், இடையறா முயற்சி, இனிய நற்பண்பு, அப்பழுக்கற்ற சேவை ஆகியவற்றின் பலனாய் அமெரிக்க உலகப் பல்கலைக் கழகம் தமிழ் கல்விக்கான கலாச்சார கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளது. கல்விச்சிரகம் ஆகிய தங்களை புல்லறிவாளன் நான் பாராட்ட விழைந்தும், பாராட்டும் தகுதி தகைமை உள்ளேனோ என அஞ்சுகிறேன். கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்துப் பாராட்டப் புறப்பட்ட குசேலதயக்கம் எனக்கு.

உலகச் சரித்திரம் அசைபோட்டுக் காட்டும் மாவீரன்-கிரேக்க மன்னன் அலெக்ஸ்சாந்தர் டுமாஸ், கனடிய விஞ்ஞானி அலெக்ஸ்சாந்தர் கிரஹம் பெ(B)ல் இவர்கள் வரிசையில் தமிழீழ தாயகத் தமிழ் மகன் - எங்கள் நண்பன் கலாநிதி 'அலெக்ஸ்' எனும் மனுவற்பிள்ளை அலெக்ஸ்சாந்தர் அவர்களும் இந்த 21ம் நூற்றாண்டு சரித்திரப் பொன்னேட்டில் தடம் பதித்துள்ளார். பாராட்டுப் பெறுகிறார் என உள்ளுந்தோறும் ஊற்றெடுக்கும் புளகாங்கிதப் பெருக்கைச் சுவைக்கும் யான் பாராட்டாது இருக்க முடியுமா?

நண்பனே,

நீ நடந்து கடந்து வந்த வாழ்க்கைப் பாதையை சற்றுத் திரும்பிப் பார்க்கிறேன். காடு கரம்பை, மேடு பள்ளம், கல்லு முள்ளு, நாய் நரியொடு புலியும் பாம்பும் அன்ன கொடு விட ஜந்துக்கள் நிறைந்த கரடு முரடுப் பாதை அது. சாதித் திமிர், வர்க்கப் பாகுபாடு செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு இன்னோரன்ன கொடுமைகள் ஊடேயும் மறத்தமிழ் மகனீ, தன்னந்தனியனாய் எதையும் தாங்கும் இதயம் கொண்ட இனியனாய் தளர்விலாது முனைப்புடன் முயன்று படிநிலை முன்னேற்றம் எய்தி 'உயர்ந்தோன்' ஆனாய். பாராட்டுகிறது பேரறிஞர் உலகம். யாமும் கலந்து கொள்ள வேண்டாவோ?

உங்கள் பண்புக்கும் படிப்புக்கும் அடிநாதமாய் அமைந்தது, ஆதரவளித்தது நீ பிறந்து வளர்ந்த கிறீத்தவமும் அதன் வேதாகமமாம் விவிலியமுந்தான் என்பது எனது துணிபு. அவையே உங்கட்கு தயை, துணிவு, அறிவு, அடக்கம், ஆற்றல், போன்ற உதாரண குணாம்சங்களை ஈந்தன எனின் மிகையல.

இரண்டாவது உலக மகாயுத்தம், இந்திய இலங்கை சுதந்திரப் போர் இணைந்த காலத்தே பிறந்து வளர்ந்த எம் போன்றோர் வாசிப்பு வாசனை பெற்றனர். பரவலான அறிவில் தேர்ந்தனர். உணர்வு பூர்வமாகவே போர்க்குணம் கொண்டனர். சுதந்திர வேட்கை உற்றனர். இவர்கள் மத்தியில் நீ ஓர் புறநடை முத்துத் தெறிப்பாய், நன் நிலத்து வீழ்ந்த நெல் மணியாய் செழிப்புற்றாய்; வளம் பெற்றாய்; பல்கலையும் கற்று அறிஞரானாய்.

குலபேதம் ஒழித்து சமரசம் நிலைநிறுத்த உரிமைப்போர் தொடுக்க திடசங்கற்பம் பூண்டாய். உன் வழி புரட்சி அல்ல மறுமலர்ச்சியேதான் எனத் தேர்ந் தெடுத்தாய். அதற்கென உன்னைத் தயார்ப்படுத்தினாய்.

கஸ்த்தூரியார் வீதி தமிழ் அமெரிக்கன்மிஷன் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் தமிழைப் பயின்று பின் யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆங்கிலம் கற்றாய். வழமையான பாடங்களுடன் ஒழுக்க நெறி, பண்பாடு, ஒருசேர அங்கே ஊட்டப்பட்டு ஊட்டம் பெற்றாய். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைத் தாரக மந்திரமாய்க் கொண்ட நீ, பன்மொழி வித்தகராய், பண்தனாய், பாவலனாய், பட்டதாரியாய், பயிற்றப்பட்ட ஆசிரியராய் விரிவுரையாளராய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய் இன்று கலாநிதியாய் ஏற்றம் பெற்றாய். அரச கல்விச் சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னரும் சமூக சேவை உனை நிழலெனத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

உலகெலாம் தமிழ் பரப்பும் பணியாற்றப் புறப்பட்டாய். கனடாவில் குடியேறிய பின்னும் உபாத்தியாயர் சேவை உன்னை ஒற்றிக் கொண்டது. இந்திய மனோன்மணியம் சுந்தரனார் சர்வகலாசாலையில் தமிழில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் கனடிய மாணவகுழாத்துக்கு தமிழைக் கற்பித்து தயார் செய்யும் சேவையில் ஈடுபட்டு வருவதாய் அறிகிறேன். கனடாவில் அரசினர் மற்றும் தனியார் கல்விச் சபைகளிலும் இடம்பிடித்துள்ளமை பெருமைக் குரியதேயாம். இவ்வாற்றான் புகழேணியின் படியேறி உச்சிநிலை எய்தியும் ஏறி வந்த ஏணியை எட்டி உதைத்து வீழ்த்திவிடவில்லை. ஏனெனில், உனைச் சார்ந்தவர்களும் ஏனையரும் உமைத் தொடர வேண்டும் என்ற பெருவிருப்பு உமக்கு.

சாந்தம் பரிமளிக்கும் தூய சேவையாளன், அறநெறிச்செம்மல், செயல் வீரன், நல்லாசான், கன்னித்தமிழ் மறவன்-தலைமகன் எங்கள் 'அலெக்ஸ்' அன்னாரை கலாச்சார கலாநிதி ஆக்கிப் பார்புகழ்ந்து போற்றிப் பாராட்டுகிறது. யாமும் மகிழ்ந்து இணைந்து வெற்றிவாகை சூடி பரணிபாடிப் பாராட்டுவோம்.

வாழ்க பல்லாண்டு வளமுடன் நலமுடன்!
வளர்க நும் தூய தீந் தமிழ் தொண்டு!

இங்ஙனம்
அன்புள்ளம்
ஆ. நடராசா
(ஆடலரசன்)

மார்க்கம், ஒன்ராறியோ

# தமிழால் உயர்ந்தோர்

## சுப்பிரமணியம் இராசரத்தினம்

திரு. மா. சே. அலெக்ஸ்சாந்தர் ஆசிரியர் அவர்களது கல்விக்கான சேவையினைக் குறிப்பாக தமிழ் மொழிக்கான சேவையினையும் திறமையினையும் அறிவாற்றலையும் கணிப்பிட்டுக் 'கலாநிதி' பட்டத்தினை பல்கலைக்கழகம் வழங்கியுள்ளமையை அறிந்து நானும் எமது கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

உழைப்பின் அறுவடை மிகச் சிறந்ததாக, உயர்ந்ததாக இருப்பதோடுமட்டுமல்லாமல் அதற்குக் கிடைக்கும் சமூக அங்கீகாரமே உழைப்பின் மீது பற்றையும் கொடுக்கும். அதனால் முடிவான பலனை சமூகமே பெறும். மேம்பாடடையும். எனவே இத்தகை யோரைப் பாராட்டும் நிகழ்வுகளை சமூகமாக இணைந்து செயலாற்றல் கடமையே.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழினத்தின் தாரக மந்திரம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதும், எல்லா உயிரினங்களையும் இறைவனே படைத்தான் என்பதும் எல்லா உயிர்களிடமும் இறைவன் இருக்கிறான் என்பதும் தனக்குள் இருக்கும் இறைவனை வெளியே தேடாது உன் சிந்தனையை ஒருமுகப்படுத்தி நல்லதையே நினைத்து அறிவை நேர் கூராக்கி இறைவனாகவே வாழ் என்பதும் தமிழர் சமயமாகிய சைவசமயத்தின் உயர்நிலைக் கூற்று.

ஒன்றே குலம் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுாஞ் சித்தத்து
நின்றே நிலை பெற நீர் நினைந் துய்ம்மினே.

- திருமந்திரம்- 2104

இவ்வாறான உயரிய சமயக்கொள்கையை, விழுமியத்தை உடைய தமிழர் சமூகம் தன் சிந்தை தடுமாறி ஆரியத்தின் அடிமைகளாகித் தன் விழுமியத்தை இழந்து, சமயக்கொள்கையிலும், சமுதாயக் கொள்கையிலும் தடுமாறி நிற்கின்றது. பிறப்பால் மனித குலத்தில் உயர்வு, தாழ்வு பார்க்கத் தொடங்கியது. ஒன்றுபட்ட தமிழினம் சிறு சிறு கூட்டமாகப் பிரிவுபட்டது. தன் இனத்துள்ளே ஒரு பகுதியினரை தாழ்த்தி வைத்திருந்தது. பல சமூக உரிமைகளை மறுத்தது. இவ்வாறாக அடக்குமுறைக்கு உள்ளான ஓர் மக்கள் கூட்டத்தில் இருந்து வெளிவந்த ஒரு நட்சத்திரமாகவே நான் கலாநிதி அலெக்ஸ்சாந்தரைப் பார்க்கிறேன். அந்த அழுத்தத்தின் வடுக்கள் இன்றும் அவர் மனதில் இருப்பதைக் கண்டிருக்கிறேன்.

கல்வியினால் ஒரு மனிதன் பல்வேறு தடைகளையும் மீறி உயர்ச்சி பெறுவான். அக்கல்வி அறிவை அவன் சமூக மேம்பாட்டிற்குப் பயன்படுத்தும்போது அவன் சிறப்படைவான் என்பதற்கு உதாரணமாக விளங்கியவர் திரு.மா.செ. அலெக்ஸ்சாந்தர் என்றால் மிகையாகாது.

பனிப்பாலைவனமாம் கனடா நாட்டில் தமிழையும், தமிழர்தம் கலைகளையும் வளர்க்க பாடுபட்டு வரும் தமிழ்க்கலைத்-தொழில்நுட்பக் கல்லூரியின் ஓர் அங்கமாக தம்மை இணைத்துக் கொண்ட திரு. அலெக்ஸ்சாந்தர் கலாநிதி அலெக்ஸ்சாந்தராக சிறப்பிக்கப்பட்டமை எமது கல்லூரிக்கு கிடைத்த பெருமையாக நாம் கருதுகிறோம். ஆசிரியர் அவர்கள் தமிழ் மொழியை இளங்கலை மாணவர்கள் வரை கற்பித்ததோடு அல்லாமல் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை உள்ளிட்ட கல்லூரியின் தமிழ்த்துறையின் பல நடவடிக்கையிலும் ஈடுபட்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார். அத்துடன் என் வேண்டுகோளுக்கிணங்க எமது கல்லூரி கீதத்தையும் இயற்றியவர் இவரே.

கனடியத்தமிழர் மத்தியில் நுண்ணிய தமிழ் அறிவினைக் கொண்டவர்கள் மிகச்சிலரே. அவர்களுள் ஒருவரான எமது ஆசிரியர் உடல் நலத்தோடு மேன்மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து-தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் சேவையாற்ற வாழ்த்துவதோடு, அவரின் வாழ்வின் ஒருபகுதியினை பதிவாக்கிக் கொள்ளும் இம்மலர் குழுவினருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்.

and by participating in other popular Tamil movements and publications.

## Message & Blessing

The Tamil Catholic Community of Toronto is pleased to learn about the honour conferred by the wider Tamil Community in the city, on Mr. M. Selvaraj Alexander - a dedicated teacher and scholar who has contributed significantly in imparting Tamil culture and values to both young and old.

Already in Sri Lanka we are familiar with the many contributions he made, specially in composing text books both for the children and for teachers in training. Though his field of work was mostly in catholic institutions, he worked also on projects for the Government Department of Education and for the UNESCO.

Even before the current trend of openness and interfaith collaboration, he was willing to teach in Hindu, Sinhala - Buddhist and Muslim schools in the North.

And here in Canada, in spite of the many burdens of taking care of a big immigrant family with seven children, he has continued his work of helping the local Tamil community with new text books for the young, and by participating in other popular Tamil movements and publications.

A good part of the credit for his success as an educator and social worker is also due to his faithful wife Mary Matilda who has kept the homefires burning, and took care of everything at home.

Let me conclude with Avvaiyar's wise words:

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை, கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

When a king and a truly leanned scholar are compared, the truly learned scholar is par excellence of the two. The king will enjoy honour and command respect only in his own domain; but the truly learned men will be honoured wherever they go.

God bless Mr. Alexander and his family, and all those gathered together to celebrate his many achievements as the father of a big family and as a teacher.

Fr. Christie Joachim Pillai O.M.I.



தமிழ்க்கலைக் கல்லூரி – தமிழ்ப்பகுதி பொறுப்பாசிரியராய் இருந்த போது , மற்றைய ஆசிரியர்களோடு

# குணநலம் மிக்க பெருந்தகை பண்டிதர் அலெக்சாந்தர்

வித்துவான் க. செபரத்தினம்

தமிழ்க்கலை, தொழில் நுட்பக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றச் சென்றவேளையில், அங்கு தமிழ்மொழி, பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். பண்டிதர் அவர்கள் நீண்டகாலம் பழகிய கெழுதகைமையாளர் போன்று என்னுடன் பழகியமை, அவர் குணநலம் மிக்க சான்றோர் என்பதைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்க, 'குணநலம் சான்றோர் நலனே' என்னும் குறளடியின் பொருள் நலம் என்னுள் விரிந்து நின்றது. நாங்கள் நண்பாகளானோம்.

பண்டிதர் அவர்கள் கற்றலையும் கற்பித்தலையும் தவமாக வரிந்து கொண்டிருப்பதை, அவருடன் பழகிய சில நாள்களுள் என்னால் அறிந்திட முடிந்தது.

'இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து'

எனவும்

- நெஞ்சத்து
'நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு'

எனவும் நாலடியார் நவிலும் கருத்துக்களில் பண்டிதர் கொண்டிருந்த அசையாத நம்பிக்கை என்னை வியக்கவைத்தது.

'வாழ்நாள் முழுவதும் நீடித்த கல்வி', (Life Long Learning) என்பதை எழுத்துக்கு எழுத்து பின் பற்றிவரும் பண்டிதர் அவர்கள்

'யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு'

என்னும் வள்ளுவரின் கருத்தினையும் ஏற்றுக்கொண்டிருப்பதனை, அவரது வாழ்வின் வளத்தை 1955ஆம் ஆண்டிலிருந்து அவதானித்து வருபவர்களால் அறிந்து கொள்ள முடியும்.

ஆரம்ப நாள்களில் கல்வியைத் தொடர முடியாதபடி தடைகள் பல ஏற்பட்ட போதிலும், தடைகளைத் தாண்டி இன்றைய உயர் நிலையை அடைந்திட அவரது சொந்த முயற்சியே துணையாயிருந்ததென்பதை அறியும் போது,

தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன......

என்னும் கணியான் பூங்குன்றனாரின் கூற்றும்

'நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையிலும்
மேன்மேல் உயாந்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்'

என்னும் நாலடியார் கூற்றும், பண்டிதர் அவர்களின் வாழ்வில் விளக்கம் பெறுவதைக் காண்கிறோமல்லவா?

பட்டங்களும் பதவிகளும் பெருமைகளைச் சேர்க்கச் சேர்க்க, பண்டிதர் அவர்களின் இயல்புக் குணங்களாம் பணிவும், பண்புடைமையும் அவரிடம் பிரகாசிக்கத் தொடங்கின. 'பணியுமாம் என்றும் பெருமை' என வள்ளுவனாரால் சுட்டப்படும் பண்பானது, நடிப்பின்பாற்பட்டதோ, அஃதன்றி போலித்தனமானதோ அல்ல. அஃது அவரின் இரத்தத்துடன் இணைந்தது; நிறைகுடம் ததும்பாதல்லவா?

ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றுத் திகழும் பண்டிதர் அவர்கள், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பதோடு, கல்வி உளவியல், கல்வித் தத்துவம், சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளிலும் ஆற்றல் பெற்று பல் துறை விற்பன்னராககத் திகழ்வதனை அவரை அறிந்தோர் அறிவர்.

பண்டிதர் அவர்களின் ஈடும் எடுப்புமற்ற தமிழ்ப் புலமையையும், அலாதியான கற்பித்தல் திறமையையும் நான் நேரில் அறிந்துள்ளேன். பண்டிதரிடம் பாடங்கேட்பதை மாணவர்கள் பெரும் பேறாகக் கருதினர். மாணாக்கரின் நிலை அறிந்து கற்பிப்பதில் அவருக்கு அவரே நிகர். அவரிடம் கருவிலே அமையப் பெற்றிருந்த, மரபு ரீதியாகச் செய்யுள் இயற்றும் கலையை, மாணாக்கருக்குக் கற்றுக் கொடுப்பதில் அவர் காட்டிய தீவிர ஆர்வத்தைக் கண்டு பல வேளைகளில் நான் ஆச்சரியப் பட்டதுண்டு.

பண்டிதர் அவர்களிடம் இயல்பாகவே அமைந்துள்ள மலர்ந்தமுகமும் கள்ளங்கபடமற்ற பேச்சும், தோழமையை அவாவி நிற்கும் மனித நேயமும், உயர்ந்து நிற்கும் அடக்கசுபாவமும், பிறர் ஆக்கங்கண்டு அகமகிழும் இனிய பண்பும் என்னால் வியந்து நோக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பல உள. பிசிராந்தையாரால் சுட்டப்படும், ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக, வள்ளுவனாரால் சுட்டப்படும் மக்கட் பண்பு நிறைந்த அரம்போலும்

கூர்மையினராக, பண்டிதர் அவர்கள் திகழ்வதனால் அவர் எல்லோராலும் விரும்பப்படுபவராக இருப்பதில் ஆச்சரியமில்லையல்லவா?

பண்டிதர் அவர்களின் பொன்றாப் புகழுக்குரிய காரணங்களாகச் சுட்டப்பட்ட பண்புகளைவிட உயர்ந்த பண்பாக - உயிர்ப்பண்பாகத் திகழும் பண்பு அவருடைய தெய்வநம்பிக்கையாகும். செய்யும் தொழிலிலும் பழகும் மக்களிலும் பார்க்கும் பொருள்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வத்தையே அவர் தரிசிக்கிறார். தரிசிக்கும் தெய்வத்தையே வழிபடுகிறார். அவர் சேவிக்கும் தெய்வம் அவரின் தேவைகளைப் பார்த்துக் கொள்ளுகிறது.

தன் வாழ்நாள் முழுவதையும் கற்றலுக்காகவும், கற்பித்தலுக்காகவும் அர்ப்பணித்து, வாழ்வாங்கு வாழ்ந்துவரும் பண்டிதர் அவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள உலகப் பல்கலைக்கழகமானது, தமிழ்க் கல்விக்கான கலாநிதிப் பட்டத்தை வழங்கி, பெருமைக்கு பெருமை சேர்த்துள்ளமை கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் மகிழ்வும் நிறைவும் கொள்ளச் செய்யும் நிகழ்வாகும். பண்டிதரை மனம் நிறைந்து பாராட்டுவோம்.

உள்ளக் கமலத்தில் வீற்றிருக்கும் உத்தமனாராம் இறைவனை, நாட்டவிழி நெய்தல்களால் தரிசித்து, கூப்பியகைக் காந்தள்களால் வழிபட்டு மேலும் பல நலன்களை, பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களுக்கு நல்கிடுமாறு இறைஞ்சி நிற்போமாக!

# உள்ளத்தால் உயர்ந்தவர்!

இ. அந்தோனிமுத்து
ஓய்வு பெற்ற அதிபர், ஸ்காபரோ

அன்பு, ஆற்றல், ஆளுமை, இனிமை யாவும் நிறைந்த மனிதர். சுகதுக்கம் எது வந்தாலும் எப்போதும் மலர்ந்த முகம். தான் பெற்ற கல்வியை மற்றவர்களுக்கு கவர்ச்சியாகக் கற்பிக்கும் திறமை, தம்முடன் பழகும் யாவரையும் கவர்ந்திழுக்கும் வசீகரம் - இவை யாவும் ஒன்றிணைந்த சான்றோன் - இவர் தான் மதிப்புக்குரிய ஆசான் ம.செ. அலெக்சாந்தர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பழம்பெரும் கலாசாலையான சம்பத்தரிசியார் கல்லூரியில் ஏழு ஆண்டு காலம் கல்வி கற்றவர். ஆங்கிலக் கல்வி மட்டுமன்றித் தமிழ்ப்பண்டிதர் என்ற பாண்டித்தியமும் பெற்றவர். நல்லாசானாகப் பல வருடம் பணியாற்றியவர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் - தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கும் பேராசிரியராகி சிறந்த பயிற்சியளித்துப் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கியவர். அரசியலுக்குள்ளும் தலையிட்டு அதன் நெளிவு சுழிவுகளை அறிந்தவர். கல்வித் தொண்டு சமயத்தொண்டு-சமூகத்தொண்டு இவ்வாறு இவரின் சேவைகள் பலப்பல.

ஷேக்ஸ்பியரைப் படிப்பிக்கும் அதேநேரத்தில் கம்பரையும் இளங்கோவையும் மாணவர்களின் கண்முன்னே நிறுத்துவார். அவரின் நாவிலிருந்து புறநானூற்றுச் செய்யுள்கள் அருவிபோலப் புறப்படும். இவரின் கவிதைகளில் பழைய இலக்கிய மரபும்-புதிய பாணியும் ஒன்றோடொன்று முரண்படாமல் இணைந்து செல்லும். தமிழை அறியாதவர்களும் அதன் சுவையை அறியும் பொருட்டாக அகநானூறு-திருக்குறட் பாக்களுக்கு ஆங்கில விளக்கவுரைகளை எழுதி-கத்தோலிக்க கல்விச்சபையின் தமிழ் மொழித்தலைவர் - மற்றும் திரு. ஜிம் கரிஜியானிஸ் ஆகியோரின் பாராட்டுதல்களையும் பெற்றவர். இப்படியான ஒரு செயல்வீரனுக்கு அரிசோனா உலகப் பல்கலைக் கழகத்தால் தமிழ்க் கல்விக்கென வழங்கப்பட்ட கலாநிதிப் பட்டம் இவரின் கல்விப் பணிக்கான மேலும் ஒரு அணிகலனாகும்.

பல வருடங்களின் முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர்க்கான பயிற்சிப் பட்டறையில் "ஒன்றிணைப்பும் புதிய கல்விப் போக்குகளும்" என்ற தலைப்பில் இவர் நடத்திய விளக்கப் பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் இவரின் திறமையைப் புகழ்ந்ததை இன்றும் எண்ணிப் பார்க்கிறேன்.

இப்பெரியார் மேலும் பல்லாண்டு வாழ்ந்து கனடா நாட்டிலும் தமது பணிகளைத் தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

# கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

பி. எஸ். சூசைதாசன் B.A. (Lond), P.C.A. (Eng & Wales)
முன்னாள் பா.உ (மன்னார்), இலங்கை

அறிவு என்பது ஆண்டவனால் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட அரிய கொடை. மிருகங்கள் பறவைகளுக்குக் கொடுக்கப்படாமல் மனிதனுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட அற்புதமான கொடைக்குத்தான் அறிவு என்று பெயர். அந்த அறிவுள்ளவருக்கு எத்தனை அடைமொழிகளை, சிறப்புக்களைக் கொடுத்தாலும் அவையெல்லாம் மிகப் பொருத்தமானதே. அந்த அறிவை நிறையப் பெற்றவர் ஆசிரியர் அலெக்ஸ்சாந்தர் என்றால் அது மிகையாகாது. அன்னாருக்கு அரிசோனா உலகப் பல்கலைக் கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் இவ்வேளையிலே அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். எல்லாம் வல்ல இறைவன் இன்னும் பல சிறப்புக்களைக் கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இவ்வேளையிலே ஐம்பது ஆண்டுகளின் முன் (1953-1955) அவரோடு சகமாணவனாக அமர்ந்திருந்து படித்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். அந்த நாள் ஞாபகம் இந்த நாள் வந்ததே என்று பாடினார் ஒரு கவிஞன். எத்தனை உண்மை. துள்ளித்திரியும் பள்ளிப் பருவம் அது. கவலையற்ற கல்லூரி வாழ்க்கை - பாடசாலை விளையாட்டு மைதானம் - விடுதி வாழ்க்கை - இதற்குள் அடங்கியது தானே மாணவ உலகம்.

அது ஒரு காலம். ஆங்கிலம் ஆட்சி மொழியாக, அரச கரும மொழியாக, போதனா மொழியாக இருந்த காலம். இந்துக்கள் கல்வி முறைபோல் அல்லாது சிறிது வேறுபட்ட பாடசாலை அமைப்பு (School System), சிறிது வேறுபட்ட கல்வி முறைகள். "பாலோடு தேன் கலந்தாற்போல்" கல்வியோடு நல்லொழுக்கமும் சேர்த்துக் கற்பிக்கப்பட்ட காலம். பெற்றோர், பெரியோர், ஆசிரியர்கள் குருக்கள் ஆகியோரை மிக மதிக்க வேண்டுமென்பது பரீட்சைக்கு இல்லாத கட்டாய பாடமாக இருந்த காலம் அது. இக்காலகட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில கல்லூரிகள் அரசினர் மத்திய கல்லூரிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டுச் செயல்பட்டன. அவற்றுள் யாழ் ஸ்ரான்லி மத்திய கல்லூரியும் (J/Stanley Central College) ஒன்று. இது யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருந்த காரணத்தால் வடகிழக்கு மாகாணங்களின் பொது மத்திய கல்லூரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா (முல்லைத்தீவு அடங்கிய) மாவட்டங்களிலிருந்தும் வேலணை, நெல்லியடி, வசாவிளான் மத்திய கல்லூரிகளிலிருந்தும் அரசாங்க புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் (Government Scholars) மேற்படிப்புக்காக இக்கல்லூரிக்கு அனுப்பப்படுவார்கள். ஏறத்தாழ 1300 மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். 36 ஆசிரியர்களும் பணியாற்றினார்கள்.

இவ்வாறாக London G.C.E. (Advanced Level) படிப்பதற்காக மன்னாரிலிருந்து 1953ல் ஆண்டு ஸ்ரான்லி மத்திய கல்லூரிக்கு வந்தவன் யான். மேற்படிப்புக்காக யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் (St. Patricks College) இருந்து வந்தவர் திரு. அலெக்ஸாந்தர். ஆண், பெண், ஆகிய இருபாலாரையும் கொண்ட சுமார் 20 பேரைக்கொண்ட வகுப்பு அது. அங்கு அவரை 'அலெக்ஸ்' என்று தான் அழைப்போம். அவரோடு ஒரே வகுப்பில் படித்தவர்களுள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமரர் ஆலாலசுந்தரம், அமரர் தங்கத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ், சமஸ்கிருதம், பூகோள சாஸ்திரம், பிரித்தானிய அரசியல் அமைப்புமுறை (British Constitution) ஆகிய பாடங்களைக் கற்றோம். அமரர் D.O அருளானந்தம் அவர்களும் அவரைத் தொடர்ந்து அமரர் J.M.C சாமுவேல் அவர்களும் கல்லூரி அதிபர்களாகக் கடமையாற்றினார்கள். கல்லூரியும் கல்வி, இசை, கிறிகட், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கிய காலம்.

திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் ஓர் சிறந்த மாணவனாக, ஆசிரியர்களும் அதிபரும் விரும்பத்தக்க மாணவனாக, மிக அமைதியான மாணவனாக விளங்கினார். விஷேசமாக தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிக ஆர்வங்காட்டி வந்தார். கிறிக்கட், உதைபந்தாட்டம் மற்றும் ஓட்டம் பாய்ச்சல் போன்றவற்றிலும் அவர் சார்ந்திருந்த 'அருளம்பலம்' இல்லப் போட்டிகளில் அவர் பங்கேற்றது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. யான் கனகரத்தினம் இல்லத்தைச் சார்ந்தவன். எங்களுக்குள் பெரிய போட்டிதான். தமிழின் மேற்கொண்ட பற்றினாலோ

என்னவோ 1955ம் ஆண்டு கால முதல்பகுதியில் கல்லூரியைவிட்டு விலகி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றார். 1955ம் ஆண்டு இறுதியில் பரீட்சை முடிவடைந்ததும் யானும் மேற்படிப்புக்காக கொழும்பு சென்றேன்.

பின்னர் ஒருநாள் 1979ம் ஆண்டு என்று நினைக்கிறேன் கொழும்பு பாராளுமன்றத்தில் அவரைக்காண நேர்ந்தது. இலங்கை போக்குவரத்துச் சபை (C.T.B.) வடபிராந்திய இயக்குநராக பாராளுமன்ற பொதுக்கணக்குச் சபை (Public Account Committe) கூட்டத்திற்கு வந்திருந்தார். அப்போது யான் அந்தச் சபையில் தலைவராக இருந்தேன். கூட்டம் முடிந்ததும் அவர் என்னிடம் வந்து யான் அலெக்ஸ் Stanley College என்று கூறினார். எனக்கு மிக மகிழ்ச்சியாக இரந்தது. 25 ஆண்டுகளின் இடைவெளி தோற்றங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆயினும் அதே சாந்தமான அலெக்ஸ்தான். மாணவர்கள் பற்றிப் பேசினோம். பிரிந்தவர்கள் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பார்கள். இவர் பனம் பொருள் அபிவிரித்திச் சபை இயக்குனராகவும் இருந்தபடியால் கணக்குக் குழுக் கூட்டங்களுக்கு வரும் பொழுதெல்லாம் சந்தித்துப் பேசுவோம்.

பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் ஒரு சிறந்த கல்விமான். கல்விச் சேவையிலும் கல்வித்துறையிலும் பல பதவிகள் வகித்துப் பணியாற்றியவர். கல்வியோடு சமூகத்தொண்டும் சிந்தையில் கொண்டு செயற்பட்டவர். உழைத்தவர். சிறந்த ஆசிரியராக நல்ல மாணவர்களை, ஆசிரியர்களை உருவாக்கியவர்கள். விடாமுயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தவர். தொடர்கல்விக்கு ஒரு முன்மாதிரி. இவருக்கு கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவிப்பது மிகப் பொருத்தமானதே. இவர் சமூகத் தொண்டோடு மாத்திரம் அமையாது சமயத்தொண்டும் ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. ரொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சபையின் இயக்குநராகவும் அதன் வெயியீடான 'அன்பு மக்களே' என்ற இதழின் ஆசிரியராகவும் பல ஆண்டுகள் தொண்டாற்றி வருகிறார்.

சாந்த குணமும் சீரிய சிந்தனையும், சிறந்த கல்வியும், போற்றற்குரிய பண்புகளும் கொண்ட கலாநிதி அலொக்ஸாந்தர் அவர்கள் எல்லாச் சிறப்புகளும் பெற்றுவாழ இறையைப் போற்றுகிறேன்.



2000ம் ஆண்டு - தமிழ்க்கலைக் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் குழுவுடன்

# மாணவர்களின் வழிகாட்டி

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் முதல் நாள் அமைதியாக வகுப்பறையில் இருந்தேன். தொலைநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் வகுப்பறையில் நுழைந்தார். ஒவ்வொரு மாணவர்களையும் பார்வையிட்டார். அதன் அர்த்தம் ஒவ்வொருவரையும் அவர் மதிப்பிடுகிறார் என்பதே. அமைதியாக இருந்த நான் இவர் என்னை மதிப்பிடுவாரா அல்லது பாராமுகமாக இருப்பாரா என எண்ணியபடியே இருந்தேன். ஒரு வாரத்திலேயே எனக்குள் அடங்கியிருந்த ஆற்றலை அறிந்த அவர் என்னாற்றலை வெளிக் கொணர்வதில் முழு அக்கறை கொண்டு என்னை வழிப்படுத்திப் பெரும் ஊக்கம் அளித்தார். அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் எல்லோருமே அவர் வழிகாட்டும் பாங்கினை அறிந்திருப்பர். அவரிடம் காணப்படும் சிறப்பம்சங்களில் முதன்மையானது மாணவர்களின் திறமைகளை கண்டுகொள்வது, அவற்றை வெளிப் படுத்துவது, அவர்களுக்கு ஊக்கமளிப்பது. அடிக்கடி அவர் தம் மாணவர்களுக்கு 'உம்மால் முடியும் பிள்ளை, நீர் செய்யும்' எனச் சொல்லி ஊக்கப்படுத்துவார். அடுத்த தாகச் சொல்வார் எனக்காகச் செய்யும் பிள்ளை என்பார். இவ்வாறாகச் சோர்வின்றி வற்புறுத்தி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதில் எனது ஆசானை மிஞ்சுவோர் இல்லை எனலாம்.

அது மட்டுமன்றி அவர் மாணவர்களின் குடும்பச் சூழ்நிலையையும் அறிந்து மாணவர்களுடன் அன்பாகப் பழகுவதோடு மட்டுமன்றி அவர்களது குடும்பத்தினருடனும் அன்புடன் பழகுவார். இதனால் பெற்றோர்களுடன் சேர்ந்து அவரிடம் கல்வி கற்கும் மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றுவார். அவரை நான் எனது தந்தையாகவே எண்ணுகிறேன். இவ்வாறே மற்றைய மாணவர்களும் எண்ணுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் பயிற்சிக் காலங்களில் ஒவ்வொரு ஆசிரிய மாணவரும் பயிற்சி ஆரம்பம் முதல் இறுதிவரையில் அவர்களுக்குத் தேவையான சிறிய விடயம் தொடங்கி பெரிய விடயங்கள் வரையில் மிகுந்த அக்கறையுடன் நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். இதற்காகப் பலரை அவர் பகைத்துக்கொண்டதும் உண்டு

ஆசிரிய மாணவர்களுக்குரிய மொடியூல்களை செம்மையுற எழுதியது மட்டுமன்றி மாணவர் விரும்பும் முறையில் கற்பிப்பதில் வல்லவராகவும் இருந்தார். ஆசிரிய மாணவர்கள் திறம்பெற பயிற்சி பெறவேண்டும் என்ற நோக்குடன் வித்துவான் குமாரசுவாமி போன்ற திறமை வாய்ந்த விரிவுரையாளர்களை ஏற்பாடு செய்தார். இதனால் பல சிறந்த ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும்.

தொடர்ந்து கனடா வந்த போதும் தமது மாணவர்களை அவர் வழிப்படுத்தத் தவறவில்லை. தம்மிடம் கற்ற ஆசிரியர்களை கனடாவிலும் ஆசிரியயர்களாக்குவதில் பெரும் பங்கு வகித்தார். கத்தோலிக்க சபையினரின் அனுசரணையுடன் தமிழ்ப் பாடநூல்களை எழுதினார். திறமைச் சித்திக்கான தமிழ் வகுப்புக்களில் புலம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஏற்ப கற்பித்த அவரது திறமையை வியக்காமல் இருக்கமுடியவில்லை.

அவரது சேவை அத்துடன் முடியவில்லை. யாவருக்கும் அரிதாக இருந்த யாப்பிலக்கணத்தை இளங்கலைமாணிப் பட்டப்படிப்பிற்கான மாணவர்களுக்கு அவர் கற்றுத்தந்தது அங்கு கற்ற மாணவர்களுக்குப் பெரும் பாக்கியமே.

அவரிடம் கல்வி கற்க கிடைத்த சந்தர்ப்பம் என் வாழ்க்கையில் பெரும் பாக்கியமே.

சோபனா லோறன்ஸ்
தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியை
B.A. தமிழியல் மாணவி

# புலம்பெயர்ந்த மண்ணிலும் நம்தமிழ் வளர்க்கும் பாவலர் கலாநிதி அலெக்சாந்தர்

ஐ. சண்முகநாதன்
தமிழியல் இளங்கலை இறுதி ஆண்டு மாணவன்
தமிழ்நாடு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
உதவி ஆசிரியர் ஈழமுரசு பத்திரிகை

"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு" என்றான் பாரதிதாசன். இளமையிலே இந்த மொழி கேட்ட அலெக்சாந்தர் அவர்கள் இனிய தமிழின் மேல் தீராத பற்றுக் கொண்டவர். இளம் வயதிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றார். தன் முயற்சியால் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் பின்னர் பண்டிதராகவும் பின்னர் பல்கலைக்கழக பட்டதாரியாகவும், பின்னர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் உயர்ந்தவர்.

பல அரிய தமிழ் நூல்களையும், இலக்கண வினாவிடைகளையும் எழுதியவர். ஏழை, எளிய மாணவர்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர். தாயகத்தில் நல்ல தமிழ் அறிஞர்களிடம் முறையாகக் கல்வி பயின்று பல புலமைப் பரிசில்களையும் பாராட்டுக்களையும் வென்றவர்.
இலங்கை கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பாடவிதான சபைக்கு பல ஆலோசனைகளையும், பல ஆசிரிய ஆலோசனை கூட்டங்களிலும் முன்னின்று உழைத்தவர்.

தாயகத்தில் ஏற்பட்ட பல இன்னல்களுக்கு மத்தியிலும் தமது பணியை திறம்பட நிறைவேற்றி எம் மொழிக்காக உழைத்தவர்.

தன்மானம் மிக்க தமிழனாக யாழ் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், யாழ் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பல ஆண்டுகள் கல்வி, உளவியல் போன்ற பாடங்களில் திறமை மிகுந்த விரிவுரையாளராகக் கடமை புரிந்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது அவரது உயிர் மூச்சாக இருக்கின்றன. எத்தனையோ ஆயிரக்கணக்கான நல்லாசிரியர்களையும், நல்மாணாக்கர்களையும் தன் அன்பினால் கவர்ந்து புகழ்படைக்க வைத்த உத்தம நல்லாசான்.

புலம் பெயர்ந்து கனடாவிற்கு வந்த மறு ஆண்டே ரொறன்ரோ கல்விச் சபையில் மேல்வகுப்புத் தமிழ் மாணவர்களுக்கு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார். புதிய சூழலில் இவரின் கற்பித்தல் இங்குள்ள இளம் தலைமுறையினரைப் பெரிதும் கவர்ந்தது. மிக எளிய முறைகளில் கற்பிப்பதும், பல நவீன உத்திகளைக் கையாள்வதும் கற்பித்தலை மிக நேர்த்தியாகவும், உறுதியாகவும் மேற்கொள்வது இவை எல்லாம் இவரிடம் கல்வி கற்ற மாணவர்களின் கணக்கெடுப்பாகும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆயத்தம் செய்யாது கற்பிப்பது என்பது இவருடைய அகராதியிலேயே கிடையாத விடயமாகும். அப்படி இவரின் பல திறமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றை எல்லாம் நன்கு அவதானித்த ரொறன்ரோ கல்விச்சபை இங்கு வாழும் எமது தமிழ் மாணவர்களுக்கான தமிழ்மொழி நூல்களை எழுதுமாறு கேட்டுக் கொண்டது. அதற்கு அமைவாகவே ரொறன்ரோ கல்விச் சபைக்கு தமிழ்நூலை எழுதி புலம் பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்கு அருந்தொண்டாற்றினார்.

இவரின் திறமையும், நேர்மையும் இங்கு வாழும் பல கல்விமான்களைப் பெரிதும் கவர்ந்தன. சுமார் பத்திற்கும் அதிகமான வளாகங்களை உள்ளடக்கி இயங்கும் ரொறன்ரோ பெரும்பாகத்தின் தமிழ் கல்விக்கூடமான தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி பொறுப்பாளர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் தமது கல்லூரியின் தமிழ் துறைக்குப் பொறுப்பாளராக நியமித்தார். தம்கடமைகளைச் செவ்வனவே நிறைவேற்ற இரவு பகல் பாராது பாடுபட்டு உழைத்தவர். எந்தக் குளிரிலும் பேருந்து பிரயாணம் அவரை வாட்டி வதைத்தது.

இப்பணிகளை அவதானித்து மேலும் ரொறன்ரோ கத்தோலிக்க கல்விச்சபை இவரை ஆசிரியராக நியமித்தது. கற்பித்தலின் உயர்வு, சிறந்த குண இயல்புகள் எல்லாம் இவரை மேலும் பல்கலைக்கழக தமிழியல் மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கும் ஆசானாகவும் தமிழ்நாடு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நியமித்தது. அப்பொழுது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ப. அறவாணன் அவர்கள் இவரை பல தடவைகள் பாராட்டியதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழ்கலை தொழில்நுட்பக் கல்லூரியிலே தமிழ்நாடு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய முதலாவது தொகுதி மாணவர்கள் இவரின் கற்பித்தலை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். அதனை நான் அறிந்து உண்மையிலேயே மனமகிழ்ந்தேன்.

ஆசிரியர்களுக்கே ஆசிரியராக விளங்கும் இப்பேராசான் தாயகத்தில் இரண்டு முக்கியமான பணிகளில் ஈடுபட்டவர். தமிழ்ப்பணி, சமூகப்பணி எனப்பார்க்கலாம். இவை இரண்டுமே தமது இரு கண்கள்


என்பார். "ஆண்டவரே, அனைவரோடும் இரக்கமாய் இரும்" என்பது அவரது தேவவாக்காகத் தினம்பல தடவைகள் கூறுவார். ஆனால் சைவசமய தேவார, புராண இதிகாச கதைகளிலும் வல்லவர். பல எடுத்துக்காட்டுக்களை நம் சைவ சமயத்தில் இருந்து காட்டி எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவர். பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் மேல் மிகுந்த பக்தி கொண்டவர். அவரின் துணைவியார் மிகுந்த அன்பும், அடக்கமும், பண்பும் நிறைந்த சிறந்த இல்லாள். தன்னுடைய முன்னேற்றத்தின் ஒவ்வொரு படிக்கட்டும் என்மனைவியே என கூறுகின்றபோது உண்மையிலேயே வள்ளுவனும் வாசுகியும் என நான் பல தடவைகள் எண்ணியதுண்டு.

அவரிடம் கல்வி கற்கின்றபோது ஒரு குழந்தையோடு நாம் எப்படிப் பழகுகின்றோமோ அதுபோன்ற உணர்வலைகளை நான் பகிர்ந்ததுண்டு. தமிழ் இலக்கணத்தை தெளிந்த நீரோடை போன்று கற்பிப்பார். என் இனிய தமிழுக்கு இவ்வளவு அழகும், இளமையும், இருக்கின்றதா என நான் பல தடவைகள் மெய்மறந்த துண்டு. பல்கலைக்கழக விரிவுரையின்பொழுதும் சாதாரணமாக உரையாடும்பொழுதும் குழந்தை உள்ளம் போன்றும் பேச்சில் கனிவு, அடக்கம், அன்பு, பொருளாய்வுதன்மை, மற்றவர் மனங்கோணாது பேசுதல், கற்றவர்களை மதிப்பது என்பது இவரோடு பிறந்த நற்குண இயல்புகளாகும். எப்படிப்பட்ட மாணவர்களுக்கும் ஏற்றாற்போல் கற்பிப்பது, நூல்கள் கொடுத்து உதவுவது, நேரகாலம் பாராது கற்பிப்பது, அறிவுரைகள் வழங்குவது, உதவி புரிவது என அவரது சேவைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இயந்திரமயமாக வாழுகின்ற இந்த நாட்டில் இப்படிப்பட்ட நிறைகுடம் தளம்பாத இனிய தமிழ் உள்ளம்.

தன்னுடைய நோயைக்கூட பாராது உழைத்தவர். தன்னுடைய தமிழ்தாயின் இனிய புதல்வனாக நிமிர்ந்து நிற்கும் இந்த ஆசானக்கு புகழ் சேர்க்கும் வகையில் அமெரிக்க பல்கலைக்கழகம் இன்று வாழ்த்தி வரவேற்று சேவைகளைப் பாராட்டி கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. நம்புலம் பெயர்ந்த உறவுகளும் இவரை வாழ்த்தி வரவேற்று பேருவகை அடைகின்றன.

பாவாலே மழைபொழியும் நம்தமிழ் பாவலனின் கண்ணால் கண்டவற்றையும், செவிவழியாகக் கேட்டவற்றையும் எந்த பாவகையாலும் பாடும் திறமை பெற்றவர். இயற்கையையும் இளமையையும் சிலருக்கு நன்கு பிடிக்கும். 'ஈழத்து பாரதி' என்னும் அளவிற்கு உயர்ந்த பாவலனே! தமிழ் மொழியின் நாவலனே! நீவாழ வேண்டும்! உன்புகழ் ஓங்க வேண்டும்!

இந்த அலெக்சாந்தர் என்ற உயர்ந்த உள்ளத்திற்கான பாராட்டு விழா ஒன்றை இங்குள்ள கல்விமான்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் எடுக்கவிருப்பது பெருமகிழ்ச்சியே. தமிழ் ஆர்வலர்கள் எல்லோரும் நிச்சயமாக இந்த விழாவில் கலந்து அந்த நல்ல உயர்ந்த உள்ளத்தை வாழ்த்துவோமாக!



பிரதம கல்வியதிகாரி திரு. அ. நல்லையா குடும்பத்துடன்

# இன்னுமொரு சித்தர்

எனக்கு முன்னெ சித்தர்கள் பலர்
இருந்தாரப்பா
யானுமொரு சித்தர் வந்தேனப்பா
இந்நாட்டில்...

என்று பிரகடனம் செய்தார் பாரதியார். உண்மையிலேயே தனக்குள்ளே மகிழ்ந்தும், தனக்குள்ளே நெகிழ்ந்தும், மனித சமுதாயத்தை ஒன்றெனக் கொண்டு வாழும் ஒவ்வொரு மனிதரும் சித்தராகிவிடுகின்றார்கள். அதிலும் குறிப்பாக ஒரு மழலையின் குதூகலமும், மகானின் தரிசனமும், ஒரு சேர இணைந்து கொள்கின்ற அறிஞர்களை வித்தகச் சித்தர் என்றே பெரியோர்கள் கூறுவார்கள். என் சிற்றறிவுக்குத் தெரிந்தவரை அலெக்சாந்தர் மாஸ்ரை ஒரு சித்தரைப்போலவே பார்க்கின்றேன்.

மனித வாழ்வில் 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப்புரட்டும்' வல்லமை மிக்க பேரறிஞர்களில் மாஸ்டரும் ஒருவர் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகள் அல்ல.

இவருடைய சிறப்புக்களில் ஒன்று பார்வைக் கூர்மை! அரும்பும் பயிரை பார்த்த உடனேயே அறுவடையின் விளைவைப்பற்றிச் சொல்லும் உழவனைப்போல ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவருடைய வருங்காலத்தைப்பற்றி ஆருடம் சொல்லும் இவரது பார்வைக்கூர்மை, படிப்பில் ஞான சூனியமாக இருந்தாலும் சரி மேதையாக இருந்தாலும் சரி பழகும்போது அனைவருடனும் ஒரே மாதிரியாகப் பழகும் பண்பு இவையெல்லாம் சித்தர்களுக்கே உரியவை.

காலம் எங்கெல்லாமோ ஒரு மனிதனைத் தூக்கி எறிந்தாலும் 'வெளிச்சத்தைப் புதைக்க முடியாது' என்கின்ற விபரத்தைப் பிரகடனப் படுத்துவதுபோல இன்று ஒரு விடியலாக இலக்கிய வசந்தங்களை உருவாக்குகின்ற தோட்டக்காரனாக, அறிவாளிகளை உருவாக்கும் அறிவாளியாக, விளங்கும் எங்கள் சித்தருக்கு இன்று கிடைத்திருக்கும் இந்த கலாநிதி விருது ஒரு இரவில் திடீரென்று தோன்றிய இமயமல்ல? ஒரு பள்ளத்தாக்கு பரிணாம வளர்ச்சியெடுத்து இன்று மற்றய இமயங்களையெல்லாம் திகைக் வைத்திருக்கின்றது என்பதுதான் நிதர்சனம். கலாநிதி என்ற இப்பெருமைக்குரிய விருது இவர் ஒரு ஜீவநதி போன்ற சிந்தனையாளர் என்பதற்காகவே கிடைத்திருக்கின்து. இந்த விருது இவரை அடைவதற்கு இராமர் இலங்கைக்குப் போவதற்கு பாலம் கட்டிய அனுமார் கூட்டத்தோடு இணைந்த அணிலைப்போல நானும் இருந்திருக்கின்றேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சியே.

அலெக்சாந்தர் மாஸ்டரின் முகத்தில் தவழும் சிரிப்பலைகள் இருக்கின்றதே! எப்படி....? இவருக்கு இது எப்படிச் சாத்தியமாகின்றது? நித்தமும் இந்தச் சிரிப்பு இவர் முகத்தில் குடிகொண்டிருக்கின்றதே இது எப்படி? அது சித்தர்களிடம் மட்டுமே குடிகொண்டிருக்கும் மாறாத புன்சிரிப்பு. இவர் எமக்கு இன்னுமொரு சித்தர்.

தமிழால் தனக்கும், தன்னால் தமிழுக்கும் புகழும் பெருமையும் சேர்த்த இந்த தமிழ் மகனுக்கு, ஈழத்து மைந்தனுக்கு புலம்பெயர்ந்து வாழ்கின்ற கனடாவில் கலாநிதி விருது கிடைத்திருக்கின்றது என்றால் இது தமிழுக்குக் கிடைத்திருக்கின்ற விருதல்லவா! சிம்மாசனத்திற்கே தகுதியான இவருக்கு இந்த விருது தலைக்கனத்தை ஏற்படுத்தி விடப்போவதில்லை. மாறாக அந்த விருதிற்கு தலைக்கனம் ஏற்பட்டால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆசிரிய வேங்கையாய் கற்பிப்பதில் வேளமாய், இலக்கியத்தில் கட்டுரைகளையே கவிதையாய் குழைத்தெழுதும் எழுத்தாளராய் இவரைப் பார்த்தும் பழகியும் வியந்திருக்கின்றேன்! இவருக்கு கலாநிதி விருது கிடைத்ததை நான் பணியாற்றும் பிரான்ஸ் A.B.C. தமிழ் ஒலி வானொலியில் சொல்லி பெருமைப் படுத்தியபோது எங்கள் வானொலியும் பெருமைப் பட்டுக்கொண்டது.

ஒரு படைப்பாளி சிந்தனையாளனாக ஆக்கப்படுகின்றான். அனால் ஒரு சிந்தனையாளன் பல படைப்புகளை ஆக்கும் திறமையை அடைகின்றான் என்பதற்கு இவர் இலக்கிய நயத்துடன் படைத்திருக்கும் பல கட்டுரைகள் கட்டியம் கட்டிக்கொண்டு நிற்கின்றன. சில சிந்தனைவாதிகளின் படைப்புக்கள் எட்டாத உலகத்தைப்பற்றியே அமைந்து எளிய மனிதர்களை எட்டாமலேயே போய்விடுகின்றது. ஆனால் அலெக்சாந்தர் மாஸ்டரின் கட்டுரைகளில் சில வாய்க்கிய வாளிப்புக்களைப் பார்க்கும்போது அடடா ஏறக்குறைய இவர் ஒரு கவிஞராக இருக்கின்றாரே என்று நான் பெருமையோடு பொறாமைப்படுவதும் உண்டு.

மாஸ்டரின் பேரறிவும், பேராற்றலும், சமூக விழிப்பிற்கும் இலக்கிய மலர்ச்சிக்கும் என்றும் வழிகோலாகவே இருக்கும் என்பதில் எனக்கு நகர்த்த முடியாத நம்பிக்கை இருக்கின்றது. தான் வளரும்போது பத்துப்பேரை வளர்த்துவிடும் இவரது ஆற்றல் இருக்கின்றதே அதுவே இவரை வளர்த்துவிடும்.

இந்தச் சித்தர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இன்னும் பல விருதுகளைப் பெறவெண்டும் என வாழ்த்துகின்றென்.

"சேய்போல இருப்பவர்கள் கண்டீர்பு ஞானம் தெளிந்தவரே" என்ற உண்மைக்கு இலக்காக எங்கள் மத்தியில் அறிவுச்சித்தராக விளங்குகின்றார் அலக்சாந்தர் மாஸ்டர்.

உங்களது வயது, அறிவு, ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது உங்களை வாழ்த்துவதற்கு எங்களுக்கு வயது, அறிவு, போதாது ஆதலால் வணங்குகிறேம்.

ஒரு தீவகத்தில் சென்று கொளுத்திய பஞ்சும்
தேசு குறைய எரியுமோ?

அன்புடன்
வண்ணை தெய்வம்

# கலாநிதி பற்றி அறிந்ததும் அறியாததும்

வித்துவான்
ஆர்.எஸ். செல்வத்துரை B.A. Hons., T. T.
(முன்னாள் ஸ்ரான்லிக் கல்லூரி அதிபரும் புங்குடுதீவு கொத்தணி அதிபரும்)

"உண்மை, நேர்மை, பணிவு, சூதுவாதின்மை, உள்ளதை உள்ளவாறு ஆசிரியர்களிடம் கூறி உரையாடுவது. நல்ல விடயங்களை மிகமிக ஆவலுடன் சிரமேல் தாங்கி, அவைகளைப் பற்றிச் சிந்திப்பது. இவை, அலெக்ஸ்சாந்தர் மாஸ்டர் ஸ்ரான்லிக் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில், அவரிடம் நான் அவதானித்தவை" - இது ஸ்ரான்லிக் கல்லூரியில் நெடிது நாள் பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகை ஆர். கிருஷ்ணபிள்ளை அவர்கள் கூறியது,

திருவாளர் எம்.எஸ். அலெக்சாந்தர் அவர்கள், மட்டக்களப்பு அரசின் ஆசிரியர் கல்லூரி கொழும்புத்துறை றோ. க. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக, பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக ஆற்றிய பணி உலகறிந்தவொன்று. மாணவர்களாக இவரது உருவாக்கலுக்கு உட்பட்டவர்களே. இவரது நற்பணிக்கு அருமையான சான்று. ஆனால் இவரது பணிகளோ அளப்பில; அதிகம் தெரியவராதவை. காரணம், பூமாலைகளைப் போற்றி வாழத் தெரியாதவர் அலெக்சாந்தர். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் வாக்கே இவரது இலட்சியம்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியத் தமிழ் மொழி ஊழியர்களுக்கு, 1980ம் ஆண்டுவரை அரசகருமமொழிச் சட்டம், நிரந்தர நியமனம் பெறுவதற்கும், பதவி உயர்வுபெறுவதற்கும் ஒரு தடையாக இருந்தது. இ.போ.சபையின் வடபிராந்தியப் பணிப்பாளராக இவர் சேவையாற்றியபோது உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு சபைத் தலைவர் பணிப்பாளர் டட்லி குணசேகரா, பணிப்பாளர் செல்லத்தம்பி மகேந்திரன் அவர்களுடன் சேர்ந்து ஏற்க வைத்ததன் பலனாகக் குறித்த சட்டம், 1980 ஆண்டில் இருந்து வடபிராந்திய ஊழியர்களுக்கு மீளப் பெறப்பட்டு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

இ.போ.ச. பணிப்பாளராக இருந்த நாட்களில், ஒரு சமயம், யாழ்.மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளங்கள், மயானங்கள் என்பனவற்றைப் புனர்நிர்மாணம் செய்வதற்கும், மற்றும் தேவைகளுக்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. ஆயினும், உரிய அதிகாரிகள் அந்நிதியினைப் பயன்படுத்தும் முயற்சிகள் எதுவுமின்றி அசிரத்தையுடன் வாளாவிருந்தனர். ஆனால், உரிய அதிகாரிகள் முறைப்படி செயற்பட்டுக் குறித்த நிதி மக்களுக்குப் பயன்படச் செய்த பெருமை திரு அலெக்சாந்தருக்கு உரியது. என்ன அலெக்சாந்தர் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரியோ, அல்லது மாநகரசபை அதிகாரியோ எனச் சிலர் வினவலாம். அவர்களுக்குத் திருவள்ளுவர் விடை கூறுகின்றார்:

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல."

ஒல்லும் வகையால் செல்லும் வாயெல்லாம் நல்லனவற்றைச் செய்யும்படி பணிக்கின்றார் வள்ளுவர்.

தமிழ் மொழி கற்றலும் கற்பித்தலும் எனும் பொருள் குறித்து, ஒன்றிணைந்த பாடத்திட்டம் ஒன்றினை வகுத்துத், தாமே முன்னின்று, யாழ். மாவட்டத்தின் பாடசாலைகள் அனைத்தும் பங்கு கொள்ளக்கூடிய வகையில், கல்வி வட்டாரங்கள் தோறும் பயிற்சி அரங்குகளை அமைத்துச் செயற்பட்டதன் மூலம் அலெக்சாந்தர் அவர்கள் தமது மொழிப்பற்றினையும், மாணவர்கள் சிறந்த முறையில் தமிழ்மொழி பயில வேண்டும் என்ற தமது ஆர்வத்தினையும் காட்டியுள்ளார்கள்.

எந்தவித வேறுபாடுகள், எத்துணையும் எவ்விடத்தும் இவரை அணுகியது கிடையா. மனித நேயக்கண்ணுடனேயே இவர் எவரையும் நோக்குவார். முறைவேண்டுவோர்க்கும் குறைவேண்டுவோர்க்கும் மனநிறைவுடன் வேண்டுவன செய்வதில் இவருக்கு ஒரு தனிமகிழ்வு. இ.போ.ச. பணிப்பாளராக இருந்தபொழுது, மேலதிகாரிகளின் கெடுபிடிகளாலோ அல்லது சிறு தவறுகளினாலோ தமது தொழில்களை இழந்த பல ஊழியர்கள் திரும்பவும் தமது தொழில்களைப் பெறுவதற்கு உதவியுள்ளார். இவ்வாறு தொழில் பெற்றவர்கள் ஒரு மதத்தினரோ அல்லது ஒரு வகுப்பினரோ அல்லர்.

"அலெக்சாந்தர் ஒரு பொது உடைமைவாதி. இறைநம்பிக்கை அற்றவர்" என்போரும் உள். நெருங்கிப் பழகியவர்கள் இதனை ஏற்பதற்கில்லை. இவர் ஓர் உண்மைக் கத்தோலிக்கர். தேவகுமாரனின் போதனைகளைப் பயபக்தியுடன் கடைப்பிடிப்பவர். ஆனால், அதேவேளை பிறமதங்களின் உண்மைகளையும்

விளங்கி அம்மதங்களையும் ஒப்ப மதிப்பவர். நோயாளர்களைச் சந்திக்குமிடத்துப் பிணிதீரப் பிரார்த்திப்பது, விபூதி வழங்குவது போன்றன பலரும் அறியாதவை.

"ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின வல்லவாம்." என்ற

அடிகளின் பொருளே இவரது விழுமியம்.

இது விடயத்தில், யாழ். மக்களிடையே, முன்னர் பெரிதும் இடம்பெற்ற சமுதாயப் பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், பெண்கள் மீது காட்டும் ஒடுக்குமுறைகள், சீதனக்கொடுமை போன்ற சமூகச் சீரழிவுகள், கால்மார்க்சின் தத்துவங்கள் மூலம் களையப்பட முடியும் என்ற அசையாதவொரு நம்பிக்கை அலெக்சாந்தர் அவர்களுக்கு இருந்தது. இதன் விளைவே, அவரது பொது உடைமைத் தோற்றம். இந்தத் தோற்றமும் அவருக்குச் சேவை புரியும் வாய்ப்பினை நல்கியது. மாணவர் பலர், இவர் மூலம் வடமாநிலப் பொது உடைமைக் கட்சித் தலைமைப்பீடத்தின் சிபார்சினைப் பெற்று, சோவியத் இரஷ்யாவில் புலமைப்பரிசிலுடன் மருத்துவம், பொறியியல் போன்ற கற்கை நெறிகளை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் பொது உடைமை வாதிகளின் பிள்ளைகள் அல்லர்.

ஆசிரியப் பெருந்தகை ஆர். கிருஷ்ணபிள்ளை அவர்கள் குறிப்பிட்டதுபோல் பணிவு இவரது அணிகலன். தம்மினும் மிக்காரிடத்துப் பணிதல் யார்க்கும்பொது; ஒத்தார் மாட்டுப்பணிதல் ஒரு சிலர்மாட்டேயுளது. அனால், மாணவர் போன்ற தம்மினும் குறைந்தோர் மாட்டும் பணிவுடைமை அலெக்சாந்தர் போன்ற மேன்மக்கள் மாட்டே காணமுடியும்.

இரத்தினக்கல் மதிப்புடையதே. சுத்தமான தங்கத்துடன் சேரும்போதே அது பிரகாசமடைகின்றது. பணிவு, பரோபகாரம், சேவையுள்ளம், தமிழ்ப்பற்று போன்றவற்றையே இயற்கை அணிகளாகக் கொண்டு திருவாளர் அலெக்சாந்தர் அவர்களுடன் சேரும்போதுதான் கலாநிதிப்பட்டமும் சிறப்படைகின்றது எனலாம்.

என்றும் இவர் வாழ்க.

## முத்துக் கிழவா! முருகா!

அகரத்தை முதலாய்க் கொண்ட
இலக்கணத் தூணே
இலக்கியப் பேழையே....

பவணந்தி சொன்ன
ஆசிரியத்தின் இலக்கணமே
இலக்கியத்தில் எமக்குப்
பொருள் சொன்ன பொழிலே

புலம் பெயர்ந்தாலும்
நிலம் பெயரா நிமிர்வே
புகலிடத்தும் தமிழ்பரப்பும் பொலிவே

தொல்காப்பியமாய்
வீரசோழியமாய்
நன்னூலாய்
நேமிநாதமாய்
எத்தனை நூல்கள் இலக்கணத்தில்
எழுந்தாலும் அத்தனையும்
கற்றுத் தெளிந்த முனைவா

செந்தமிழைச் செழுந் தமிழாய்
செப்புகின்ற செல்வா.....

பணம் பார்க்காத
குணம் கொண்ட குருவே.....
காசுக்குக்
கல்வியை விற்காத
மாசற்ற திருவே.....

கற்பித்தலில் கரைகண்ட கடலே
கற்றவர் எம்மைக்
காமுற வைத்த கலையே....

மதங்கள்
கடந்த மனிதா
முத்தமிழையும்
கரைத்துக்குடித்த முனிவா....

முத்துக் கிழவா! முருகா!
பத்துத் திசையும் புகழ
பரப்பும் பழந்தமிழ் வேலா......

வணங்குகின்றேன்!

சிவா தாட்சாயணி
B.A. தமிழியல்

## அன்புக் கடிதங்கள்

### நேசத்தால் நிறைந்தவர்

என் ஆசிரியர் அலெக்சாந்தர் போல் ஆசிரியர்களைப் பார்ப்பது மிக அருமையிலும் அருமை. நிறைந்த கல்விமான், எலுமிச்சைப்பழ நிறம், எப்போதும் சிரித்த முகம், சங்க இலக்கியங்களில் மிக்க ஆளுமை, 'தம்பி', 'டேய்' என்ற அன்பான அழைப்புச் சொற்கள் எவனையும் கட்டிப்போடும், நேசம் நிறைந்த நெஞ்சர். அவருக்கு இப்போது கிடைத்திருக்கும் 'முனைவர்' பட்டம் எப்போதோ கிடைத்திருக்க வேண்டும். 1989ல் IPKF இலங்கையில் நின்றபோது தன் மாணவர்கள் ஆசிரியப் பொதுப் பரீட்சை எழுதுவதற்காக தானே ஆசிரிய மாணவர்களின் வீடு வீடாகச்சென்று சொல்லி பரீட்சை எழுத வைத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த அந்த தெய்வத்தை யாராலும் மறக்க முடியாது. நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய் விளங்கும் எனது ஆசிரியர் அலெக்சாந்தர் அவர்களை வாயால் வாழ்த்த எனக்குத் தகுதி இல்லை. அதனால் மனதார மகிழ்ந்து நிற்கிறேன்.

தமிழருவி த. சிவகுமாரன் B.A. (Hons.)
அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர் வவுனியா தமிழ்த் தேசிய கல்லூரி

### மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

என் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய ஆசிரியர் அலெக்சாந்தர் அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றதையும் அவருக்கு அவரது நண்பர்கள், அன்பர்கள் கூடி விழா எடுப்பதையும் அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்.பலாலி ஆசிரிய கலாசாலையில் அவர் விரிவுரையாளராக இருந்த காலத்தில் அங்கு வெளியிடப் பெற்ற எனது 'இலக்கியத் தேறல்' நூல் வெளியீட்டு விழாவைத் தலைமை தாங்கி நடத்திய காட்சி என் நினைவுக்கு வருகிறது. தமிழ் இலக்கியம் இலக்கணம் என்பவற்றில் நுட்பமான அறிவைக் கொண்ட அவரோடு உரையாடியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. அவர் எனது ஆசிரியர் என்பதையும் கூறிக் கொண்டு, அவர் பல சிறப்புகளையும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்தி மகிழ்கின்றேன்.

தமிழ்மணி அகனங்கன்

### நல்ல நண்பர்

எனது இனிய நண்பர், நீண்ட நாள் தோழன் அலெக்சுக்குப் பாராட்டு விழா எனத் தமிழருவி சொன்னபோது மிகமிக மகிழ்ந்தேன். தமிழருவி அவர்களுடன் அலெக்சாந்தரின் பலப்பல சிறப்புக்களை உரையாடி மகிழ்ந்தேன். அலெக்சாந்தரின் விரிவுரையாளருக்கான கால ஆளுமைப் பண்புகளையும் பக்கத்தில் இருந்து பார்த்து மகிழ்ந்தவன் நான். அவர் தனக்கு வந்த அரசியல் வாய்ப்புக்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு மாணவ ஆசிரியர்களை வாழ்வில் முழுமையான ஆசிரியர்களாக்குவதே தன் கடமையாக, தொண்டாக உணர்ந்து உழைத்த அரிய விரிவுரையாளர். அதனால் இன்று உயர்ந்து நிற்கிறார். அவரை மனதார வாழ்த்தி மகிழ்கிறேன்.

P. சதாசிவமூர்த்தி
அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

# வாழ்க்கை வரலாற்றில் பண்டிதர்–கலாநிதி அலெக்ஸ் மாஸ்ரர்

அலெக்ஸ் மாஸ்ரர் என்றும் பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் என்றும் எம்மவரால் அழைக்கப்படும் மனுவல்பிள்ளை செல்வராசா அலெக்ஸ்சாந்தர், வாழ்வு கூறும் விழுமியங்களை அவர்பெற்ற பல்வேறு உயர்ச்சிகளின் மத்தியிலே எழுத முனைந்தேன். அதனை எழுத பல்வேறு தகவல்களைச் சேர்க்க முனைந்தபோது நவரசம் எனப்படும் பல்வேறு நிலைகளுக்கு ஆளானேன்.

என்றும் புன்முறுவல் பூக்கும் அவரது போக்கு, என்னைமட்டுமல்ல எம்நண்பர்கள் அனைவரையும் ரொறொன்ரோ வாழ் கத்தோலிக்க சமூகத்தினரையே கவர்ந்தது. ரொறொன்ரோ வாழ் கத்தோலிக்க சமூகத்தின் அநுசரணையோடு, நடத்தப்படும் கத்தோலிக்க தமிழ்ப் பத்திரிகையான 'அன்புமக்களே'யின் நிர்வாக ஆசிரியர் நான். அப்பத்திரிகைக்கு ஓர் பிரதம ஆசிரியர் தேவைப்பட்டது. அவரிடம் கல்வி கற்ற பலாலி ஆசிரியர் கலாசாலைப் பயிற்றப்பட்ட ஆசிரியையான திருமதி மேரி ஞானப்பிரகாசம், அவரை அறிமுகப்படுத்தினார். காட்சிக்கு எளிமையானவர், கருத்திலே ஆணித்தரமானவர், பல்வேறு சமயங்களுடன் ஒப்பிட்டு, சுவிே" வாக்கியங்களுக்கு விளக்கம் அளிக்கும் மாண்பையும் அறிந்தேன். தத்துவ கலாநிதி அருட்திரு அடிகளார் கிறிஸ்றி யோக்கிம்பிள்ளை (விவிலியப்பேராசிரியர் ரொறொன்ரோ கத்தோலிக்க பல்கலைக்கழகம்) அவருடைய ஆலோசனைகளையும் கேட்டு, அரிய கிறீஸ்த்தவ தத்துவங்களை எழுதியமையை யான் என்றும் மறவேன். நல்லதமிழ் எழுதும் செம்மல், எமது பத்திரிகையில் வெளியாகும் ஆசிரிய தலையங்கங்கள், தத்துவ விளக்கம், கவிதைகள், குறுக்கெழுத்துக் கிறீஸ்த்தவ அறிவுப் போட்டி அனைத்தும் அவரின் கைவண்ணமே. 'அன்புமக்களே' பத்திரிகையின் பிழைதிருத்தம், வேண்டிய வழிகாட்டல் ஆகிய அவதானித்த யான் அவருக்குத் 'தமிழ்க்கல்வியில்' கலாநிதிப்பட்டம் கிடைத்ததை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன். அவர் தனது பணிக்கு ஒவ்வொருமாதமும் பல நாட்கள் வந்து பத்திரிகை அலுவல்கள் பலமணி நேரம் செலவிடுவார். எந்தவித ஊதியமும், கடந்த ஏழாண்டுகளாக அவர் ஆற்றிய பணிக்கு, அவர் பெற்றதில்லை. தனது செலவில் பயணம் செய்து 'அன்புமக்களே' பதிரிகை நற்றொண்டைச் செய்த ஆசிரியருக்கு, ரொறொன்ரோ வாழ்தமிழ்ச்சமூகம் மலர் வெளியிட்டு வாழ்க்கை வரலாற்றை எழுதித்தருமாறு பணித்தது. அலெக்ஸ் என்ற நல்லவரை, தமிழில் வல்லவரை எழுதக் கேட்ட தமிழ்ச்சமூகக்காரியக் குழுவுக்கும், எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றி கூறி எழுத விழைகிறேன்.

*இறைபணி சகோ தோமஸ் டேவிட்*
*நிர்வாக ஆசிரியர் 'அன்புமக்களே'*
*ரொறொன்ரோ.*

## இளம் வயதில் அலெக்ஸ் மாஸ்ரர்

இவரது தந்தையார் சண்முகம் மனுவல்பிள்ளை, கஸ்த்தூரியார் வீதியைச்சார்ந்தவர், இவரது தாயார் அலெசு ரோசம்மா நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியைச் சார்ந்தவர். கஸ்த்தூரியார் வீதியிலிருக்கும் ஆரோக்கிய மாதா கோயில், இவருடைய பேரனார் மாரியாச்சி வல்லிபுரமும், அவர் தம்குடும்பத்தினரும், தங்களுக்கேற்பட்ட இடரை, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தீர்த்து வைத்ததால், தாம்வாக்களித்தபடி, கத்தோலிக்க வேதத்தில் சேர்ந்தனர். இவருடைய தாயார் அலெசுறோசம்மாவின் தலைமுறையினர் கத்தோலிக்கராவர். 1934ம் ஆண்டு ஐப்பசி 19ம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்த அலெக்ஸ்சாந்தரின் ஞானஸ்நானப் பெயர் செல்வராசா அலெக்ஸ்சாந்தர் ஆகும். இவருடைய தந்தை வழியில் ஆண்குழந்தைகள் அக்காலத்தில் இல்லாததால், தந்தையாரின் மாமியாரான நல்லார் பார்வதி, அலெக்ஸ் சிறுவனை வளர்த்தார். செட்டித்தெரு மெதடிஸ்த்த மி'ன் பாடசாலையிலே இவர் சேர்ந்து படித்தார். பேத்தியாரில் ஒருவரான 'புட்டாச்சி-நல்லார் பார்வதியின் அன்பான வளர்ப்பை இவர் கூறும்போது அவரில் கண்ணீர் துளிர்த்ததை நான் கண்டேன் எல்லா இடமும் இவர் பின்னே செல்வார் தனக்குத்தொிந்தகதையை மீண்டும் மீண்டும் கூறுவாராம்

ஆரோக்கிய மாதா கோவிலுக்கு முன்னுள்ள வெளியிலே, கிறிக்கற் உதைபந்து, போன்ற விளையாட்டுக்களில் இவருக்கு ஆர்வம் அதிகம். கோவில் திருவிழா 'நோவினைகள்' பின்னேரத்தில் மேளம் அடித்து, அதன்பின் குருவின் வழிகாட்டலில் நோவினைகள் கொண்டாடப்படும். கோவிலிலே திரைஇழுக்கும்போது பாடும் திரைவிருத்தம் இன்றும் அலெக்ஸின் ஞாபகத்தி லிருக்கிறது. அதை அவர் கூறும்போது, பழைய நிலையே சுகந்தம் என்பார். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பாடங்கள், வீட்டில் படிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இவரது அக்கம்மா செல்லக்கண்ணு யோசேப்பு இவருடைய சின்ன வகுப்புக்கணக்குகளைச் சொல்லிக்கொடுத்து, உனக்குச் கணக்கு ஓடாது என்று சிலேட்டை அடித்து

உடைக்கும் காட்சி அன்று அவருக்கு அழுகையும் சிரிப்பையும் ஏற்படுத்திற்றாம். அதே அக்கம்மா, பின்பு சிலேற்றும் வாங்கிக்கொடுப்பராம்.

இவருடைய சொந்தக்காரி சின்ராசக்கா, சிறு பிள்ளைகளைக் கூப்பிட்டுத் தனது சமையல் சிறுவேலைகளைச் செய்துதரும்படி கேட்பார். மிளகாய் வெட்டிக்கொடுத்தல், வெண்காயம் உரித்துக்கொடுத்தல், தேங்காய் துருவிக்கொடுத்தல் இவற்றைச் செய்து கொடுத்தால் கதைகள் கூறுவார். இவர் கூறிய சின்னன் சிறுகதைகள் கேட்ட சிறுவர்களுக்கு, முகபாவனையோடு தாமும் கதை கூறத் தொடங்கி விடுவார்களாம் என்று சிரித்துக் கொண்டு கூறுவார். இதனாலே அன்று 'பாப்பாமலர், கற்கண்டு, எறும்பு, விக்கிரமாதித்தன் கதைகள், மதனகாமராசன் கதைகள் ஐந்தாம் வகுப்புக்குள் வாசிக்கத்தொடங்கிவிட்டோம்' என்றார். இவருடைய அம்மா றோசம்மா, பட்டினத்தைச்சார்ந்த இடத்தில் விட்டால் மகன் படிக்காது விட்டுவிடுவான் என்று கூறி ஆசீர்வாதப்பர் வீதிக்கண்மையில் உள்ள அன்றைய அமரிக்கன் மி்ன் பாடசாலையில் சேர்த்து விட்டார். ஐந்தாம் வகுப்பு, ஆசிரியர் சங்கம். நடத்தும் பரீட்சையில் சிறப்பான சித்திபெற்றார் அன்று பரீட்சையில் சித்தி பெற்றாலும் ஆங்கிலம் மிகக்குறைவே. ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்த பின் அவரதுபோத்தியார் ஹீதேவி, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் சென்று 'என்ரை பேரன் படிப்பான் சுவாமி, இவனைப் பத்திரிசியார் கல்லூாயில் சேர்க்கத் துண்டு தாருங்கோ' என்று கேட்டார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அன்றைய சிறுவன் செல்வராசா அலெக்ஸ் சாந்தருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார், அன்றைய சம்பத்திரிசியார் ஆரம்ப பாடசாலை அதிபர் அகஸ்த்தீன் சுவாமி, இவரைச் சோதித்துப் பார்த்தபோது, தமிழறிவு மிகச்சிறந்தும், ஆங்கில அறிவு மிகக்குறைந்தும் காணப்பட்டது. அதனால் அவர் மீண்டும் 4ம் வகுப்பு'D'பிரிவில் சேர்க்கப்பட்டார். ஆங்கிலம் தவிர்ந்த எல்லாப்பாடங்களும் மிகத்திறமாகச் செய்வார். அவ்வகுப்பிற்குரிய வகுப்பாசிரியராகவிருந்தவர் திரு அன்ரனி அவர்கள் இவர் பின்னள் பிரபல சட்டத்தரணி ஆவார். அவ்வாண்டிற்கான வகுப்புப் பரிசும், போட்டிப் பரிசும் மனுவல்பிள்ளை செல்வராசா அலெக்ஸ்சாந்தருக்குக் கிடைத்தன. ஆரம்ப பாடசாலைக்கல்வி பத்திரிசியார் கல்லூாயில் ஐந்தாம் வகுப்பு வரை இருந்தது. திரு. பேரின்பநாயகம் ஆசிரியர்- சக்தி முற்றப் புலவர் நாடகம் பழக்கி, அதில் அலெக்ஸ்சாண்டர், சக்திமுற்றப்புலவராய் நடித்ததை இன்றும் மறந்திலர். ஆசிரியப்பா பின் நாளில் யாப்பிலக்கணம் கற்பிக்கும்போது உதாரணமாக 'நாராய் நாராய் செங்கால் நாராய்' என்ற ஈரசை ஆசிரியப்பாடலைக் பாடி, சிறுவனாயிருந்த காலத்து அடைந்த இன்பத்தை எய்துவதாகக கூறுவார். ஐந்தாம் வகுப்பிலே கற்பித்த பி.ஜே அமிர்தநாயகம் ஆசிரியர் ஒழுக்கமும் சமயத்தில் வாழவேண்டடிய கருத்துக்களை, கதைகள் மூலம் படிப்பித்ததை இன்றும் மறந்திலர்.

## இடைநிலைப்பாடசாலை வாழ்வு

சம்பத்திரிசியார் கல்லூாயில் இடைநிலைப் பாடசாலையில் கற்பித்த திரு சந்தியாப்பிள்ளை ஆசிரியர், திரு பி.ஜெகந்நாதன், திரு அந்தோனிப்பிள்ளை, அருணாசலம் ஆசிரியர், கணித விற்பன்னர் எஸ்-பி-இன்னாசி முத்து ஆசிரியர் என்றம் மறக்க முடியாதவர்கள். இவர்கள் ஒழுக்க சீலர்களாய் வாழ்ந்து காட்டித் கற்பித்ததை அவரால் மறக்கமுடியாது. தமிழ் அன்று கற்பித்த டானியல் ஆசிரியர், ஞானசவுந்தரி கதை எழுதி வரக்கூறினார். எழுதி வரவில்லை எனத்தண்டிக்க முயல, அக்கதையைத் தன்னால் கூறமுடியும் என அலெக்ஸ்சாந்தர் கூற அதைக்கூறவிட்டார். மேடையிலிருந்து முகபாவனையுடன், நடித்துக் கூறி மிகக் கூடிய புள்ளிகள் பெற்றதையும் ஆசிரியர் மெச்சிப் பேசியதால், மேலும் தமிழை விரும்பிப் படிக்க உதவியதையும் அலெக்ஸ் கூறுவார். பிற்காலத்தில் ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும்போது உடனுக்குடனே பின்னூட்டல் (குநநனடியஉம) செய்வதின் விளைவை விளக்க இந்நிகழ்ச்சியைக் கூறுவார். ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை, திரு இன்னாசிமுத்து ஆசிரியர்களின் எண்கணிதம் கற்பித்தல் முறையும், கிழமைக்கொருமுறை மீளவலியுறுத்தும் வகையில் கொடுக்கும் பயிற்சிகளையும் திறம்படச் செய்து எண்கணிதத்தில் வல்லுநன் ஆனார். அவர் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும்போதே, அப்போதைய (எஸ்-எஸ்-சி) சிரே'ட தராதரப்பத்திர மாணவர்களுக்கு எண்கணிதம்படிப்பிக்கும் ஆற்றல் உடையவராய் இருந்த சிறப்பை, இன்னாசிமுத்து ஆசிரியர் கூறியதால், இவருக்கு மிக ஊக்கம் ஏற்பட்டது. பிற்காலத்தில் ஆசிரியிருந்தபோது இவரிடம் கற்ற, எம்.சி சுப்பிரமணியத்தின் மூத்த புதல்வன் சந்திரபோஸ் மாஸ்டர் றோக்யொ பனம்பொருள் முகாமையாளர் போன்ற பலர் மிகத்திறமைச் சித்திபெற்றனர் எண்கணிதத்தில் நூனசித்தி பெற்ற பலரும், இவரிடம் நாடி வந்து மூன்று மாதத்தில் எண்கணிதம் படித்து திறமைச் சித்தி பெறுவது, இவருக்கு அன்றைய நாளில் பெருமை அளித்தது. இவர் வீட்டிலே வந்து படிக்கும் ஏழை மாணவர்களிடம் பணம் வேண்டாதே கற்பித்தார். இதனால் இவர் மதிப்பு இவர் வாழ்ந்த சமூகத்தில் உயர்ந்தது. இவர் சிரே'ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பில் ஆங்கிலத்தைச்சுப்பிரமணிய ஐயரிடம், கு.ஊ சவிரிமுத்து ஆசிரியரிடமும் கற்றார். அவர்களின் வழிகாட்டல் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெறவும், பிற்காலத்தில் விசேட ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெறவும் வழிகோலியது. சம்பத்திரிசியார் கல்லூரியில் 1946முதல் 1953வரை கல்வி கற்று (எஸ்-எஸ-சி) பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் திறமைச்சித்தியும், எண்கணிதம், கிறீஸ்த்தவம் ஆகியபாடங்களில்

அதிதிறமைச்சித்தியும், பெற வழிகோலியது. சம்பத்திசிரியார் கல்லூரி இலக்கிய இல்லக்கூட்டங்கள் தமிழ்மொழியில் பேசும் ஆற்றலையும் உதைபந்தாட்டங்களில் பங்கேற்கவும், 'கிறிக்கற்' போட்டிகளில் திறம்படத் துடுப்பெடுத்தாடவும் வழிவகுத்தது. அதிபர் வு.ஆ.கு லோங்சுவாமியிடம் படித்த கிறீஸ்த்தவ பாடமும். செயலால் நேரந்தவறாமை பற்றி ஊட்டிய பாடமும் இன்னும் மறக்கமுடியாதவையாக இருக்கின்றன என்கிறார்.

## கல்லூரி வாழ்வு

'எஸ்-எஸ்-சி' ப்பரீட்சை 1953ல் தேறிய பின், வேலைகிடைக்கவில்லை மேலே தொடர்ந்து படிக்கவும் பொருள்வசதி குறைவு. லிகிதர் பரீட்சையும் 1953-54ல் நடைபெறவில்லை தலதாபன லிகிதர் பரீட்சையிலும் சித்திபெற்றார். மூன்று மாதம் யாழ் மாநகர சபையில் தற்காலிக லிகிதராக, அக்கால இவருடைய வட்டார அங்கத்தவரான குகதாசன் உதவியால் பெற்று வேலை செய்தார். காலை சென்று மாலைவரை பற்றுச்சீட்டெழுதுவது அப்போதைய வேலை ஒருவருடனும் பேச முடியாது, கடுதாசி எழுத்து என்றிருந்தது இவருக்குப் பிடிக்கவில்லை. இதனால் இவருக்கு என்றும் மாணவன்போல் படிக்கும், மாணவரோடு பழகும் ஆசிரியர் வேலையில் பற்றுண்டாகியது. வேலையற்றிருந்தபோது 1953-1954ல் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் புவியில், சமஸ்கிருதம்-தமிழ்-பிரித்தானிய யாப்பு ஆகிய பாடங்கள் கற்றார். அன்று படிப்பித்த திருநாவுக்கரசு ஆசிரியர், கை அல்வீனஸ் ஆசிரியர், செல்வி இரத்தினசபாபதி பொன்னம்பலம் ஆசிரியர் முதலானோர் கற்பித்தனர். வகுப்பிலே தமிழ்கற்பித்து, இன்று கனடாவில் வாழும் திருநாவுக்கரசு ஆசிரியர், திரு அலெகஸ்சாந்தர் பேசும் உண்மை அறிந்து 'எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையால் வேறாகும் மாந்தர் பலர்' (514) என்ற திருக்குறள் ஈரடிவெண்பா எழுதி, பணம், பட்டம், பதவி உண்மையையும் நேர்மையையும் மாற்றக்கூடும், உம்மிடமுள்ள நேர்மையைக் கடைப்பிடித்தல் சாலவும் உயர்வு தரும் என்ற எழுத்து, அவரை நேர்மையில் நிற்க, பொய்யிலாது வாழ வழிகாட்டியதை இன்றும் கூறி அலெக்ஸ் இன்பமெய்துவார். அக்காலத்தில் வேறு மாவட்டங்களில் கல்விப் புலமை பெற்று இவரோடு படித்த பலர். இலங்கையில உயர்பதவிகள் பெற்றுள்ளனர். இவரோடு கல்விகற்ற மன்னார் பா.உ P.S.சூசைதாசன், மூதூர் பா.உ தங்கத்துரை, நடராஜசர்மா ஐயர். கொழும்புத் துறைத்தியாகராஜா ஆசிரியர் நெடுந்தீவு சண்முகம், தனிநாயகம், ஞ.பாலசிங்கம் அதிபர் நாயன் மார்கட்டு போன்றோரில் பலர் நல்ல நண்பர்களாவர்.

ஆசிரியர் கல்லூரிகளும் அவர்பெற்ற பயிற்சிகளும்.

ஆசிரியர் கல்லூரிப்பிரவேசப்போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி நேர்முகப் பரீட்சையிலும் தெரியப்பட்டு 1955 தை 15ம் திகதி முதல் 1956ம் ஆண்டு மார்கழி மாதம் வரை யாழ்-கொழும்புத்துறை ஆசிரியர்கல்லூரியில் பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சையிலும் சித்திபெற்றார். அக்காலம் பொற்காலமாகக் கருதுகிறார் அலெக்ஸ். மூன்று அதிபர்களிடம் 1955-56ல் கற்கும் பேறு பெற்றார், எல்-ஏ-சிங்கராயர் அடிகளார், எம்ஜே-மரியாம்பிள்ளை அடிகளார், வி-தியோகுப்பிள்ளை அடிகளார்.(பின்னாள் யாழ்மேற்றிராணியார்) அலெக்ஸ் கல்வியியலையும், கல்வி உளவியலையும் மிகவும் விரும்பிக்கற்று, சமூகவியற் கூட்டங்களில் அவைபற்றிய சொற்பொழிவுகள் பலர் மெச்ச ஆற்றியுள்ளார். 1956ல் வெளியிட்ட கல்விச்சுடர் என்ற கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை வருடாந்த நூலில் 'பாரம்பரியமும் சூழலும்' என்ற கல்வி உளவியற் கட்டுரை எழுதி, அந்நாள் உளவியல் விரிவுரையாளரான, தியோகுப்பிள்ளை அடிகளாரின் நன்மதிப்பைப் பெற்றார். இக்கட்டுரையை, பின்வந்த ஆசிரியர் மாணவர், கற்கும்படி வேண்டப்பட்டதாகக் கூறினார். மேலும் ஆசிரிய மாணவர்களில் மிகத்திறமான புள்ளிகள் பெற்றதனாற்போலும் பின்பு சூசையப்பர் சாதனா பாடசாலைக்கு 1959ல் இடம்மாற்றம் தரப்பட்டதுபோலும் என்கிறார் அக்காலத்தில் சுயமொழியாசிரியர்களுக்கும், ஆங்கில விசேட பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களுக்கும் சம்பளமுரண்பாடு மிகவதிகம். 1966ல் ஆங்கில விசேட ஆசிரியர் பயிற்சிப் பிரவேசப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று, 1967-1968ல் ஆங்கில ஆசிரியர் வி'ே பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சையிலும் சித்தி பெற்றார். கொழும்புத்துறை பலாலி ஆகிய பயிற்சிக்கல்லூரிகளில்பெற்ற பயிற்சிகள், கற்பித்தலியல், பற்றிய நிறைவான ஆற்றலையும், அறிவையும், செயன்முறைப் பயிற்சியையும் அளித்தது. அங்கு கற்பித்த விசேட விரிவுரையாளர்களான அதிபர்கந்தசாமி, பாலா சபாபதிப்பிள்ளை, மகேசன், சேதுகாவலர், ஓறேற்றர் சுப்பிரமணியம், ஆசைப்பிள்ளை, சுப்பிரமணியம் முத்துக்குமாரு போன்றவர்களின், விசேட அறிவும், ஆற்றலும், அநுபவமும் அறிவுபெறவும், கற்பிப்பதற்கும் மிகத்துணை புரிந்தன என்று அவர் கூறும்போது அவர் பின்பு அகில இலங்கைரீதியில் நடாத்திய கருத்தரங்குகளுக்கு, இவையும் பின்பு தொழில் சார் கல்வியில் பெற்ற பல் வேறு பட்டங்களும் மிகத்துணையாக இருந்தன என்று கூறுகிறார்.

## மேலதிக கல்வித்தொழில் சார் பயிற்சிகள்

கல்வி கற்பித்தலுக்கு அவசியமான பாடங்களைக் கற்று, நிறைவான ஆசிரியராக வேண்டும் என்பது இவரது பேரவா ஆகும். ஓர் ஆசிரியன் என்றும் படிக்க வேண்டும்

என்பதில் ஆர்வமுடையவர் இவர். ஆசிரிய ஆலோசகர் பரீட்சை முதலாந்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மட்டுமே எடுக்கலாம் என்றிருந்த காலமது. அப்போது அலெக்ஸ் ஆசிரியர் குளமங்கால் றோ.க.வித்தியாலயத்தில் தமிழாசிரியராகக் கற்பித்துகொண்டிருந்தார். அதிபர் பரஞ்சோதி, யாழ்ப்பாணத்திலே வாரந்த விடுமுறைகளில் நடக்கும் ஆசிரிய ஆலோசகர் பயிற்சி வகுப்புக்கு அலெக்ஸ் மாஸ்ரர் பெயரைச் சிபார்சு செய்கிறார். 1961-1962வட யாழ்மத்திய கல்லூரியிலே தெய்வாநந்தம்பிள்ளை உதவி அதிபர் அவர்களால் நடத்தப்பட்ட வகுப்பிலே பங்குபற்றி 1962ம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் 1) தொழில் வழிகாட்டுகையின் தத்துவங்களும், நுட்பங்களும், 2) கல்விதொழில் வழிகாட்டு உளநூல், 3)தொழிற்றகவல் 4) நேர்முகப்பரீட்சையில் செய்கைமுறைப்பரீட்சை ஆகியவற்றில் இலங்கை முழுவதிலும் சித்தியடைந்த பதின்மூன்று பேரில் அலெக்ஸ் ஒருவராவர்.

கல்வியில் இவருக்கு ஏற்பட்டதாகம், இவர் பரீட்சைகள் எல்லாம் வெளிவாரி மாணவராயே படித்துச் சித்தியடைந்தவர். இவர் தமிழில் ஏற்பட்ட பற்றினால், தமிழ்ப்பால பண்டிதர் பரீட்சைக்கு 1962-1963ல் சனி ஞாயிறு வகுப்புகள், யாழ்வைத்தீஸ்வராக் கல்லூரியில் பண்டிதர் ச-துரைசிங்கம் அவர்களால் நடத்தப்பட்ட வகுப்புக்களுக்குச் சென்று தமிழ்ப் பாலபண்டித பரீட்சையில் இலக்கண, இலக்கியங்கள் முறைப்படி பண்தர் துரைசிங்கம், பண்டிதர் இராசையா, வித்துவான் வேந்தனார் போன்றோரிடம் கற்றுத் தேறியவர். பண்டிதர் துரைசிங்கம் கற்பித்த இலக்கண வகுப்புகளும், அவரின் கற்பித்தல் முறையும் இவருக்கு நன்கு பிடிக்கும், உண்மையிலேயே, அவரிலே தமிழ்ப்பற்றும், நன்கு இலக்கணத்தை இரசித்துக் கற்பித்ததும், இவரைக் கவர்ந்ததால் இவர் அதே முறைகளைக் கையாண்டு இலக்கணத்தின் பல பகுதிகளையும், யாப்பிலக்கணத்தையும் மிகச் சுலபமாகக் கற்பிக்கும் ஆற்றல் உண்டு என்பதைக் கற்பித்தலிலும், மரபுக்கவிதை எழுதுவதிலும் காட்டி வருகிறார்.

கல்வியில் மேலும் படிக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்திய உடுவில் நாகரத்தினம் மாஸ்டர் பி.ஜே. அமிர்தநாயகம் ஆசிரியர், கரம்பனைச்சார்ந்த வண. சூசைப்பிள்ளை அடிகளார் அவர்கள் அளித்த ஊக்கத்தை அலெக்ஸ் மாஸ்ரர் என்றும் மறக்கமுடியாது எனக் கூறும்போது அவரது கண்கள் ஆநந்தக்கண்ணீர் சொரிந்தன. விடேமாகச் சூசைப்பிள்ளைச் சுவாமியார், முதல் ஆசிரியர் பயிற்சி செய்த காலத்தில் செய்த பல்வேறு உதவிகளையும் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த சாவே அடிகள் காலத்தாற் செய்த நன்றிகள் இவர்களை என்றும் நினைக்க வைக்கிறது என்கிறார். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றவர்களுக்கு எவ்விதபடாடோபமுமின்றி உதவி வாழ்ந்த உத்தம அடிகளார் இருவரினதும் இலட்சியப்போக்குகளை இவர் இன்றும் புகழ்கிறார்.

உடுவில் நாகரத்தினம் ஆசிரியர் தான்சயிக்கிளில் வாதரவத்தைக்குப் பாடசாலைக்குப் போகும்போது, படித்து அக்காலத்தில் வேலையற்று இருந்தபோது, அலெக்ஸ் மாஸ்ரரும், பின்னாள் அதிபர் பாலசிங்கமும் அவரோடு கூடச் சென்று படித்த சமஸ்கிருதபாளி மொழிகளின் வேற்றுமைப் பாகுபாடு இன்றும் மறக்கவில்லை என்கிறார். திரு நாகரத்தினம் ஆசிரியர் வீட்டுக்குச் சென்று பாளிமொழி படித்ததும், அவர் எவ்வித பணமும் வேண்டாது சொல்லித்தந்ததும் அவர் நெஞ்சை வீட்டு நீங்காது. நாகரத்தினம் மாஸ்டர் தான் ஏணியாயிருந்து மற்றவர்களை ஏற்றிவிட்ட பெருந்தகை. அவரிடம் கற்றுப்பெரிய பதவி வகிப்போர் பலராவர். கலாநிதி காரைசுந்தரம் பிள்ளை அவரின் மாண்பைக் கூறியதைக் கேட்ட அலெக்ஸ் மாஸ்ரர் தன்னை ஊகக்கப்படுத்தி, நூல்கள் அளித்துக் கற்கத்தூண்டிய பெருமகன் என்று நன்றி கூறி, அவருக்காக ஆநந்தக்கண்ணீர் வடிப்பதைக் கண்டுள்ளேன். 1960முதல் 1963வரை கற்று பாளி, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் திறமைச்சித்திகள் பெற்று இலண்டன் பரீட்சையில் சித்தியடைந்ததை இவர் கூறுவார்.

இலங்கையிலே இலண்டன் பரீட்சைகள் இரத்துச் செய்த காலமாயிருந்ததால், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்திற்கு தமிழ், சரித்திரம், பொருளியல் ஆகிய பாடங்களுக்குச் சென்றபோது, அங்குசந்தித்த வித்துவான் குமாரசாமி வேலணைப் பண்டிதர் இராசையா போன்றோர் நட்பு தமிழை மேலும் அறிய வழிவகுத்தது. அக்காலத்தே ஆங்கில அசிரியர் பரீட்சையில் சித்தி பெற்று, பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெற்றதால் தொடர்ந்து கலை மாணிப்பட்டத்திற்குப் படிக்கவில்லை. 1969முதல் அநுராதபுரத்தில் மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியராகச் சேவை செய்து, மலேரியாக்காய்ச்சல் பீடித்ததால், பரீட்சை எடுப்பதும் படிப்பதும் பின்தள்ளப்பட்டது. அக்காலத்தில் பாராளுமன்ற அங்கத்தவரான எம்.சி.சுப்பிரமணியத்தின் உதவியால், யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்றார். கல்வியை விடாது, பற்பலரிடம் விரிவுரைகளுக்கு ஒழுங்கு படுத்தி, அப்போது கல்வி அதிகாரியான நல்லையா 'சேர்' வீட்டில் கலந்துரையாடிக் கற்றனராம். இவ்வகுப்புக்காகக் கற்றபோது, அவர் படிப்பித்த சந்திரபோஸ் மாஸ்டரிடமும் மூன்று பொருளாதாரச் சொற்பொழிவுகள் கேட்டு சர்வகலாசாலை எதிர்பார்ப்பு அறிய முடிந்ததாகக் கூறுவார்.டீ.யு.பரீட்சைக்குக் கலந்துரையாடிப் படித்ததால் பல்வேறு கற்ற பண்பாளர்களை நண்பர்களாகப் பெற்றார் எனக் கூறுகிறார். 1971ம் ஆண்டு டீ.யு பரீட்சையில் சித்தியடைந்தார்.

1976ல் ஆரிய திராவிட பா'ா விருத்திச் சங்கத்தால் நடத்தப்பெற்ற பண்டித பரீட்சையில் சித்திபெற்றார். 1973 முதல் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளராக விருந்ததால், தொழில்சார் கல்வியில் ஆண்டுக்கு இருமுறையேனும், அதுசம்பந்தமான கருத்தரங்குகள் அகில இலங்கை ரீதியில் நடைபெறும். யூனெஸ்கோ, பாடவிதான அபிவிருத்தி (ஸ்ரீலங்கா) நிலையத்துடன் இணைந்து நடத்திய ஒன்றிணைப்புத் தொடர்பான கருத்தரங்குகள் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் ஒவ்வொரு கிழமை என்ற அளவில் மூன்று கிழமைகள் நடைபெற்றன. அவற்றிலே பங்கு பற்றிச் சான்றிதழ்களும்கிடைத்தன. மேலும் செயற்றிட்டங்கள், சனத்தொகைக்கல்வி, கல்வியின் புதிய போக்குகள் போன்ற பல்வேறு கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியதால் கல்வி உளவியல், ஆரம்பக்கல்வியும் ஒன்றிணைப்பும், பாலர் முன்கல்வி, செயல்மூலம் கற்றல் போன்றவற்றில் பெற்ற நிறைந்த அறிவு பெற்ற, செயறபாடுகளில் அகில இலங்கைரீதியில், ஆசிரியர்களுக்கு வழிகாட்டவும், கருத்தரங்குகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தவும் அவருக்கு உதவின.

1978ல் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுக்கு ஸ்ரீலங்காதிறந்த பல்கலைக்கழகத்தில் பதிந்து 1980ல் நடந்த இறுதிப்பரீட்சையில் பல பாடங்களில் அதிதிறமைச்சித்திகள் பெற்று திறமைச்சித்தியெய்தினார். 'M.A' முதுமாணிக்கல்வி 1981ல் பதிந்து 1982ல் நடந்த பரீட்சையில் முதலாம் பகுதி தமிழ்மொழி கலைத்திட்டம் கல்வித்தத்துவங்கள் போன்ற பாடங்களில் சித்திபெற்றார். பகுதி இரண்டுக்கான ஆய்வுக்கட்டுரை வடபிரதேச சிறு பான்மைத் தமிழர் கல்வி விருத்தியும் அவர்தம் சபைகளின் பங்கும் என்ற தலையங்கத்தில் எழுத விழைந்து, பல்வேறு காரணங்களால் நிறைவுறவில்லை.

பாடசாலைச் சேவையில் 1957 முதல் 1972 வரை ஈடுபட்டுள்ளார் அலெக்ஸ் மாஸ்ரர் தமது ஆசிரியர் சேவையில் தமிழ், முஸ்லிம் சிங்கள இன மாணவர்கள் எல்லோருக்கும் கற்பித்திருக்கிறார். 1957ல் டெகியோவிற்ற றோ.க.பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்து அங்கு கல்விப் பொதுத் தராதரவகுப்பு நடாத்துவதற்கான பலமுயற்சிகள், அப்பாடசாலை அதிபர் அ செபமாலையுடன் சேர்ந்து எடுத்துள்ளார். அப்பாடசாலையை முன்னேற்ற கல்விப்பொதுத் தராதரப்பத்திர வகுப்பில் பல பாடங்களும் படிப்பித்து, மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஆயத்தப்படுத்திப் பல சான்றிதழ்கள் பெற ஊக்கியுள்ளார். பின்பு கொழும்புத்துறை சாதனா பாடசாலையில் கற்பிற்கும்போது, வடமாகாணப் பாடசாலைகளின் மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டியில், முதலிடம் பெற ஏற்ற பயிற்சியளித்து புனித சூசையப்பர் பாடசாலையை, முதலிடம் பெற வழியாணார். இவர் படிப்பித்தலால் போட்டிப் பரீட்சைகளிலும், ஐந்தாம் வகுப்பு- க.பொ.த வகுப்புகளிலும் அநேக மாணவர்கள் திறமைசித்தி பெற்றுள்ளனர். 1967-1968ல் ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெற்றபின், நாச்சியாதுவ முஸ்லிம் மாணவர்களை விளையாட்டுப்போட்டிக்குப் பயிற்சி அளித்து, தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையில் நடந்த விளையாட்டுப் போட்டியில், இரண்டாம் இடத்தை அநுராதபுரமாவட்டத்தில் பெறச் செய்து பெருமை பெற்றார். அநுராதபுரமாவட்டத்தில் மதவாச்சி சிங்களமகாவித்தியாலயத்தில் ஆங்கிலம்படிப்பித்து, அவர்கள் தம் அன்பையும் பெற்றுள்ளார். மதவாச்சி சிங்கள மகாவித்தியாலயத்தில் பல தமிழ் மாணவர் சிங்களம் கற்பதால், ஆங்கிலத்திலே விளக்கமளிக்கும்போது, சிங்களத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சொற்கள், கலாசார அம்சங்கள் மாணவரிடம் கலந்துரையாட வழிவகுத்தார். யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் கிடைத்தபோது அவருக்கு ஏற்ற கல்லூரி தரத்தயங்கி ஈற்றில் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு ஆங்கில ஆசிரிராக்கினர். அங்கு நடந்த சம்பவங்களால் அலெக்ஸின் மனம் பல்வேறு மனவெழுச்சிகளைப்பெற்றன என்கிறார். திரு தேவபாலசிங்கம் என்ற ஆசிரியர் நாடகம் பழககத் தொடங்கி மாற்றம் பெற்றுச் செல்ல, அலெக்ஸ் 'Oliver Twist' ஒலிவர் ருவிஸ்ற் என்ற ஆங்கில நாடகத்தைப் பழக்கி யாழ்மாவட்டத்தில் முதலிடம் பெற வழி நடத்தினார் 'Good Citizen' நல்ல பிரஜை என்ற பாடத்தைப் படிப்பிக்கும்போது, அதிலே பல கேள்விகளை சிங்கள மாணவர் கேட்டு இலங்னையின் பொருளாதாரச் சீரழிவு காட்டிப் பேசிய பல நல்ல மாணவர்கள், இருவாரங்களின் பின் நடந்த சேகுவராக் கலவரத்தில் பிடிபட்டு அடைக்கப்பட்டனர். இது இளைஞர்களுக்கு ஏற்பட்ட மிகக் கடுமையான தாக்கம், என இன்றும் இரங்கி ஆசிரியர் அலெக்ஸ் கூறுகிறார். 'குவேனி' என்ற பாடத்தை அங்கிலத்தில் படிப்பிக்கும்போது, மகாவம்சத்தின்படி குவேனியின் பிள்ளைகளே மலையரட்டைக்கு ஓடி, சிங்கள இனமானது என்ற செய்தியைக் கொண்டு, கலந்துரையாடும்போது 'சிங்களவர்' தமிழர்-ஆரியர் சேர்ந்த இனம் என்று கூறவேண்டி ஏற்பட்டது. குவேனி நாகத்தை வணங்கியவள். நாகத்தை வணங்குபவர்கள் திராவிடர்கள். வியன் ஆரிய அரசகுமாரன். ஆரியனான விஜயனுக்கும்,திராவிடப் பெண்ணான குவேனிக்கும் பிறந்த பிள்ளைகளே, மலையரட்டைக்கு ஓடிச்சிங்கள இனமேற்பட்டது என மகாவம்சம் கூறுகிறது அதனை விட விஜயனும் அவனுடைய தோழர்களும் பின்பு சேர சோழ, பாண்டிய கன்னிகைகளை இந்தியாவிலிருந்து வரவழைத்து மணம் செய்தனர் என்றும் கூறுவதால், இரண்டினமும் சேர்ந்ததே சிங்கள இனம் எனக் கலந்துரையாடப் பட்டது. ஆனால் அடுத்த கிழமையே அலெக்ஸ் மாஸ்ரர் துரையப்பா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டார்.

1973,மாசி15ல் அலெக்ஸ் மாஸ்டர் விரிவுரையாளராக

மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரிக்கு நேர்முகப்பரீட்சைமூலம் தெரியப்பட்டார். மூன்றாந்தர அதிபர் பதவிக்கும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரியப்பட்டார். கற்பித்தலில் நாட்டம் அதிகமானதால் விரிவுரையாளர் பதவியை ஏற்றார். குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் இருக்க, மட்டக்களப்பில் விரிவுரையாளர் பதவியானதால் ஒவ்வொரு கிழமையும் வந்து செல்வார். ஆரம்பத்தில் மட்டக்களப்பார்-யாழ்ப்பாணத்தார் என எதிர்ப்பு வார்த்தைகள் வந்தாலும், பின்பு மட்டக்களப்பின் விருந்தோம்பும் பண்பும் விரிவுரையாளர் பழகியபண்பும் நன்கு பிடித்துக்கொண்டது. ஒவ்வொரு நாளும் அலெக்ஸ் மாஸ்ரர் தனது பாடங்களை இரவு பன்னிரெண்டு மணிவரை ஆயத்தம் செய்வது வழக்கம். மூன்று மாதங்களின் பின், அங்கு பல ஆசிரியர் கருத்தரங்குகளுக்கும், பாடவிதான அபிவிருத்திச் சபையில் இருந்து வரும் திரு கெற்றிஏவா போன்ற மொழிவல்லுநர்களுக்கும் மொழிபெயர்ப்பும் அலெக்ஸ் மாஸ்ரர் செய்வார். இதனால் அலெக்ஸ் மாஸரர் நவீன மொழி உத்திகளையும், நல்ல தமிழ் மொழியறிவாலும் பெயர் பெற்றார். மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை அப்போதைய அதிபர் கருணாந்தன் சிபார்சினாலே, பாடவிதான அபிவிருத்தி நிலையததில் பல்வேறு விரிவுரையாளர் கருத்தரங்களில்பங்கு பற்றவும், அதன் அரம்பகல்விப் பணிப்பாளர் செல்வி கமலாப்பீரிசின் சிபார்சுகள் பெறவும், இலங்கை முழுவதும் சென்று ஒன்றிணைப்புப்பற்றிய கருத்தரங்குகள் செய்யவும் வாய்ப்பானது. பின்பு யாழ் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலைக்கு மாற்றம் பெற்று வந்தபோது, அவர் தமிழ்மொழி ஆசிரியராய்ப் பயிற்சி பெற்ற அதே ஆசிரியர் கல்லூரி என்பதில் அளவில்லா அகமகிழ்வெய்தினார் என்று அலெக்ஸ் கூறும்போது அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு 1980ல் மாற்றம் பெற்றுச் சென்றபோதும், அதே மகிழ்ச்சியில் திளைத்தாராம். அங்கு ஆங்கில ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கு ஆங்கிலத்தில் கல்வியியலும், கல்வி உளவியலும் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பண்டிதர் சச்சிதானந்தன் ஓய்வு பெற்றபின் தமிழ்மொழியை அனைவருக்கும் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது அதிபராயிருந்தவர் செயற்றிட்டம் பற்றி முழு மாணவர்களுக்கும், விரிவுரையாளர் அனைவருக்கும் முன்பாக அலெக்ஸ்விரிவுரையாளரை தியேட்டராயிருந்த மண்டபத்தில் விளக்கம் அளிக்கும்படி கேட்டார். அவர் எதிர்பார்த்தது, தமிழ்மொழி ஆசிரியர் கலாசாலையில் இருந்து வந்தவொருவர் திணறுவார் அதனால் பரிகசிக்கலாம் என எண்ணினார்போலும். செயற்றிட்டம் இலங்கைரீதியில் பலவேறு விரிவுரையாளர் கருத்தரங்குகளில் பங்கு பற்றிய அலெக்ஸ் தனது சொற்பொழிவால் மாற்ற விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றார். அதிபர் இவர் மட்டும்தான் இப்படி விரிவுரையாற்றுவார் என்ற எண்ணக் கூடாது, எனத்தனது முடிவுரையில் கூறினார். இச்சொல் எத்தகைய சிந்தனையை மற்றவர் மட்டில் ஏற்படுத்தி இருக்கும் என்பதை வாசிப்பவர்கள் உய்த்து உணர விட்டு விடுகிறேன் என்று கூறுகிறார்.

எல்லா வகுப்புகளுக்கும் தமிழ்மொழி படிப்பித்த அலெக்ஸ் ஆகிய நிரந்தர விரிவுரையாளருக்குத் தமிழ்ச்சங்கப் பொறுப்புக் கொடுக்காது, சமயம் படிப்பித்த தற்காலிக விரிவுரையாளருக்கு அப்பொறுப்பைப் பலாலி அப்போது அதிபர் கொடுத்தார். இது ஏனோ? என்பது விளங்கவில்லை. அதன் பின் அதிபராக வந்தவர்கள் உரிய தமிழ்ச்சங்கப்பொறுப்பைக்கொடுக்க, அதைத்திறம்பட நடத்திப்பெருமை பெற்றார். இவையெல்லாம் அண்மைக்காலத்தில், ஈழத்துப்பூராடனார் அலெக்ஸ்க்குத் தமிழ்க்கல்விக்கு கலாநிதி கிடைத்ததையிட்டு வாழ்த்தும்போது தாயகப் பல்கலைக் கழகம் என்றால் உமக்குத்தராது. எனக்கே பல பாடுபட்ட பின்பே, தவிர்க்க முடியாத நிலையால் நல்லோர் சிலர் உணர்ந்து மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் தந்தது. தமிழ்க்றோர்க்கு, அவ்வளவு மதிப்பு! யாப்பிலக்கணத்திலே வெண்பா எழுதல் கடினம் அதை உடனேயே எழுதும் ஆற்றலும் நீவிர் தமிழ்மொழிக்கு மட்டக்களப்பு ஆசிரியர்கலாசாலையில் இருந்தபோது செய்த சேவையின் மாண்பினாலேயே கலாநிதிப் பட்டம் கிடைத்தது மிக மிகத் தகும் என்று கூறி வாழ்த்தி, வழங்கிய பல்கலைக் கழகத்திற்கும் நன்றிக் கடிதம் அவர் எழுதியது, அலெக்சின் மனத்திலே 'சான்றோன் சான்றோனே!' என்ற எண்ணத்தையும் நன்றியுணர்வையும் ஈழத்துப்பூராடனார் மட்டில் ஏற்படுத்தியதாகக் கூறியுள்ளார்.

## தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சிச் சேவை (1985-1993)

1984ல் தொலைக்கல்வி ஆரம்ப கூட்டங்களுக்கு 1984ல் அழைக்கப்பட்ட தமிழ் விரிவுரையாளர்களில் அலெக்ஸ் அவர்களும் ஒருவர் தொலைக்கல்விக்கான 'மொடுயூல்கள்' எனப்படும் சுயகற்கை நூல்கள் எழுதுவதற்கு தமிழ்மொழி ஆசிரியர் பாடநெறிக்கு திரு அலெக்ஸ்சாந்தர் பொறுப்பில் விடப்பட்டது. அப்போது அதற்குப் பொறுப்பாக இருந்த ஏச்-ஜி-ஏ-ரி ஜெயசேகரா, அலெக்ஸ் அவர்களின் தலைமையில் எழுத்தாளர் குழுத்தெரிந்து மொடுயூல்கள் தயாரிக்க விட்டார். தமிழிலே சிறந்த கல்விமான்களான வே-சுப்பிரமணியம்(முல்லைமணி) க-சொக்கலிங்கம் (சொக்கன்) கே-நடேசன், எஸ் சோதிப்பெருமான், முருகுஇரத்தினம் போன்றோர் அலெக்சுடன்சேர்ந்து ஆரம்ப மொடுயூல்கள் இணுவில்-அப்போதைய கல்விப்பணிப்பாளர் இரா-சுந்தரலிங்கம் அநுசரணையுடன் எழுதத் தொடங்கினார்கள் பின்பு சில எழுத்தாளர்கள் தத்தம் ஊர்களுக்கு மாற்றம் பெற்றும்,

பதவியுயர்வு பெற்றும் செல்ல, பண்டிதர் வித்துவான் நயினைக் குமாரசாமி, வை.கா.சிவப்பிரகாசம், அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கலாநிதி துரைராஜா, பின்நாள் கல்வி பணிப்பாளர் சி-புலேந்திரன், திரு-ச-சரவணமுத்து பின்நாள் யாழ். தொலைக்கல்விப் பொறுப்பாளர் போன்றோர் சேர்ந்துகொண்டனர். இவர்களின் தத்தம் பிரிவுச்சிறப்பும் அலெக்ஸ்மாஸ்டரின் கல்வி உளவியல், தமிழ்மொழி அறிவும் சேர எழுதப்பட்ட தமிழ்மொழி மொடியூல்கள் இன்றும் தேசியக்கல்வி நிறுவகத்திலும், கல்வியியல் கற்கும் மாணவர் மத்தியிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும், சர்வகலாசலைகளிலும் பயன்படுவதை, தொலைக்கல்வி ஆசிரியர் கல்விப்பொறுப்பாளராயிருந்த சரவணமுத்து கூறியது மிகவும் மகிழ்ச்சி தரும் காரியமென அலெக்ஸ்சாந்தர் கூறுகிறார். இருபது மொடியூல்கள் தமிழ்மொழியின் சிறப்பம்சங்கள், கற்பித்தல் முறைகள் மீள் பயிற்சிகளுடன் எழுதியதால் அலெக்ஸ் பெருமைப் படுகிறார்.

1985 முதல் 1993வரை, வடபகுதி தொலைக்கல்விக் கற்பித்தலுக்கும் எல்லா நிலையங்களின் கற்பித்தற் செயன் முறைகளுக்கும், விடைத்தாள்களின் மேற்பார்வைக்கும் பொறுப்பாகத் திரு. அலெக்ஸ்சாந்தர் நியமிக்கப்பட்டார். அத்துடன் அப்போது பிரதிக்கல்விப்பணிப்பளராக இருந்ததால், பாடசாலைகள் தரிசித்தல், தனது தொலைக்கல்வி நிலையத்தில் கற்கும் ஆசிரியர்களுக்கு ஏற்ற பாடசாலைகளில் கருமமாற்ற வழிசெய்தல், கல்வி உளவியல் கற்பித்தல் போன்ற பல்வேறு கருமங்கள் ஆற்றினார். பல்வேறு யாழ்பிரதேச இடங்களுக்கும் சென்று கல்வி உளவியல் சம்பந்தமான விரிவுரைகள், கலந்துரையாடல்கள் நடாத்தி ஆசிரிய பயிலுநருக்கு வழிகாட்டினார். இவருக்குத் துணையாயிருந்த திருவாளர்கள் சரவணமுத்து உதவிப்பணிப்பாளர் மாதவகுமார் விஞ்ஞானப்போதனாசிரியர் ஜெகந்நாதன், விஞ்ஞானக் கல்வி அதிகாரி நடராஜா, தமிழாசிரிய சங்கக் காரியதரிசி மகாசிவம், வித்துவான் பணடிதர் நயினைக் குமாரசாமி போன்றோர் தத்தம் பாடங்களில், ஆசிரியர்களுக்கு வழிகாட்ட வழி செய்து திறமான ஆசிரியர்களாகப் பயிற்சி பெற உதவினார். அப்போது யாழ்ப்பாணத்திலே பிரபல்யமான விசேட பாட ஆசிரியர்கள் மூலம், விரிவுரைகளும் கருத்தரங்களும் ஏற்படுத்தினார். யாழ் இந்துக்கல்லூரியில் இவர்தம் காரியாலயம் இருந்தது. அப்போதைய அதிபர் பஞ்சலிங்கத்தின் உதவியும் சேவையும், ஆசிரியர் செயன்முறைகள் மதிப்பிட்டதையும், நன்றியுணர்வுடன் கூறுகிறார். மேலும் பிரச்சினைகளால் பரீட்சை வினாப்பொதிகள் நேரத்துக்கு வராது பிந்தி வந்தாலும் யாழ்:- இந்துக்கல்லூரி அதிபர் பஞ்சலிங்கமும், அவருடன் பணியாற்றிய அசிரியர் பலரும் உதவிப் பரீட்சையைத்திறம்பட நடத்த உதவிய சால்பு தமிழ் ஆசிரியருக்குச் செய்தபணி என இன்றும் கூறுகிறார். தொலைக்கல்வி தமிழ்மொழி ஆசிரியர் இறுதிப்பரீட்சையின் கட்டுப்பாட்டுபிரதம பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார். தொலைக்கல்வி ஆசிரியர் கலாசாலை, அநுபவம் உதவியதை பெருமையோடு கூறுகிறார். தோலைக்கல்வி ஆசிரியர் கற்கைநெறிகள் பல இவரின் கீழ் இயங்கும்வேளை, ஆசிரியர்கள் இக்கற்கை நெறிகளில் சேர, இவரோடு யாழின் பல இடங்களுக்கும் வந்து இவரோடு விளக்க மளித்த பிரதிக்கல்விப்பணிப்பாளர் மட்டுவில் சிவாநந்தனின் சேவையைப் புகழ்கிறார். இத்தகைய வாய்ப்புக்கள் வழங்கிய இறைக்கும் நன்றி கூறி, இவரின் கீழ் பயின்ற ஆசிரிய மாணவர்ளின் அன்பும் நன்றியும், கடிதங்களாகக் கனடாவுக்கு வருகின்றன எனறு கூறி அவற்றில் சிலவற்றைக் காட்டி இறும்பூதெய்துகிறார்.

### ஆசிரியர் அதிபர் கருத்தரங்குகள்

அதிபர்கள் இவரின் வழிகாட்டலில் மூன்று மாதம் இலங்கையில் புதுக்கல்வியின் போக்குகள் பற்றிய 'டிப்ளோமா' கற்கை நெறி மேற்கொண்டனர் செயல் மூலம் கற்றல், செயற்றிட்டங்கள், அதிபர்கள் முகாமைத்துவம், புதுமுறைக் கல்வியில் சூழற்பாடம் போன்றவற்றில் வழிகாட்டி, செய்யவிட்டு, கல்விக்காட்சியும் மதிப்பீடும் செய்ததை, அதிலே பங்கபற்றிய அதிபர் கலைஞர் முருகையா, திருமதி முருகையா கனடாவில் இன்றும் கூறுகிறார்கள். ஆசிரியர்களுக்கு அகில இலங்கைரீதியில் ஆற்றிய விரிவுரைகளால், செயற்பாடுகளால், மற்றவர் பாராட்டுக்களையும் கல்வி அமைச்சின் சிறப்புப் பாராட்டையும் திரு அலெக்ஸ்சாந்தர் பெற்றுள்ளார். இதற்கு அப்போது கல்வி அமைச்சில் இருந்த திரு மாணிக்க வாசகரும், பாடவிதான அபிவிருத்தி நிலையத்திருந்த ஆரம்பக்கல்விப் பணிப்பாளரான கமலாப்பீரிசும் வாழ்த்திச் சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர். சேவையின் இறுதிக்காலத்தில் கொழும்பில் இருந்து மலையகப் பகுதிகளுக்கும், புத்தளம் சிலாபப் பகுதிகளிலும் தமிழ்மொழிக்கல்வி சம்பந்தமான கருத்தரங்குகளில் பங்குபற்றி ஆசிரியர்கள் தமிழ்மொழிகற்க, கற்பிக்கத்தூண்டியுள்ளார். இவரது சேவையை கல்வி அமைச்சு தமிழ்ப்பிரிவுப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் தங்கராஜா விதந்துரைத்துள்ளார்.

### பணிப்பாளர் சேவை. வடபிராந்திய போக்கு வரத்துச்சபை

கல்விச் சேவை ஆற்றிய அலெக்ஸ்சாந்தருக்கு, பணிப்பாளர் சேவை வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் (1979-1981) இரண்டு வருடங்களும், பின்பு பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் ஒன்பது வருடங்களும் சேவை ஆற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. சகல துறைகளிலும் பின்தங்கி அல்லலுற்ற சிறுபான்மைத்

தமிழர்களுக்கு உதவ இப்பணிப்பளர் பதவி கிடைத்தாலும் எல்லாத் தமிழர்களுக்குமே அலெக்ஸ் ஈடிலாச்சேவை செய்துள்ளார். எவரும் இவரிடம் வந்து வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் தமக்கு ஏற்பட்ட இடர் பதவி ஏற்றம் பற்றிய குறை அல்லது வழங்குதல் பற்றிக்குறிப்பிடின் நேரே கூட்டிச் சென்று அவரது இடர்போக்குவது அவர் இயல்பு. பலர் பலகாலமாக பெற முடியாதிருந்த பதவியுயர்வுகள் பெற, அப்போதைய வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் டட்லி குணசேகரா, பணிப்பாளர் செல்லத்தம்பு மகேந்திரன் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டார். சிங்களச் சட்டத்தால் சிக்குண்ட மற்றவர்களுக்குப் பணம் கொடுத்து ஏமாந்து பல நடாத்துநர்களையும் விசாரித்து, அவர்கள் பதவி பெற வசதி செய்தார். சிங்களச்சட்டம் ஒரு நாள் தளர்த்தப்பட்ட, அந்நாளில் தலைவர் டட்லி குணசேகரா உதவியுடன் பணிப்பாளர் சபைக்கூட்டம் கூடி, சிங்களச் சட்டத்தால் சம்பளப் பாதிப்புற்ற ஊழியர்கள் பதவியுயர்வுமறுக்கப்பட்ட அனைவருக்கும் சம்பள உயர்வு கொடுத்தது மட்டுமன்றி, சிங்களத்தடையையும் வடபிராந்தியபோக்குவரத்துச் சபையில் நீக்க உதவியதை இன்றும் நினைந்து மகிழ்கிறார். யூனெஸ்கோ உதவியில் போக்கு வரத்துச்சபைக்கு 80 வசு வண்டிகள் கொண்டு வந்தது போன்ற பல நற்சேவைகள் பணிப்பாளர் சபையில் நிறைவேற்றி தமது உள்ளம் நிறைந்த சேவை செய்ததை மீள்நோக்கி மகிழ்கிறார். முதல் முறை சாதி முறையில் அடிமட்டத்திருந்த ஒருவரை 'டிப்போ' மேலதிகாரியாகப பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் டட்லி குணசேகராவுக்கு விளங்கவைத்து தகுதியான சேவை மூப்புள்ள தெல்லிப்பலையைச் சேர்ந்த ஒருவருக்குக் கொடுக்கப்பண்ணியது பற்றிக்கூறுகிறார் பணிப்பாளர் மூவரில் ஒருவாராய் இருந்தே, இத்தகைய தகுதியான பதவி உயர்வு சிறுபான்மையினரில் ஒருவர் பெறுவது எவ்வளவு க்'டமும் நெரிசலும் என்பதை அறிந்து அலெக்ஸ்சாந்தர் இன்றும் வருந்துகிறார். பதவியுயர்வுகள் மேல்தட்டில் உள்ளவர்களுக்குத்தானோ, எனச்சாரதிகள் நடத்துநர்கள், திருத்துநர்கள் கேட்டபோது, அதற்கு வழிசெய்யுமாறு தலைவர் டட்லி குணசேகராவைக் கேட்டராம். அதற்கு 90வீதம் ஆகிய வடபிராந்திய போக்குவரத்துச்சபை பணியாளருக்கு பதவியுயர்வு கொடுத்தல், முடியாது என்று கூற, தனது பணிப்பாளர் நியமனம் அவர்களுக்குதவுவது என்று விநயமாகக் கேட்டு, சாரதி, நடத்துநர், திருத்துநர்களின் திறமை, சேவைமூப்பு, குற்றமின்மை போல்வன, கோவைகளில் பார்த்து 'A'த்தரம் 'B'த்தரம் என்று பலருக்குச் சம்பள உயர்வும் பதவியுயர்வும் பெற்றுக் கொடுத்ததை எண்ணி மனமகிழ்வதாகக் கூறுகிறார்.

பனம்பொருள் அபிவிருத்திச்சபைப் பணிப்பாளர்:-1982-1992

இதிலே பங்குபற்றிப் பனங்கல்லாக்கார உற்பத்தி, குடிசைக்கைத்தொழில்கள் கிராமம் தோறும் ஏற்படத்தலைவர் நடராசாவினதும், மற்றைய பணிப்பாளாகளினதும் ஒத்துழைப்போடு நல்ல பணிகள் செய்யப்பட்டன. ஒரு காலத்தில் அளவுக்கு மிஞ்சி உற்பத்தியாகும் பனங்கள்ளிலிருந்து பனஞ்சீனி, பனஞ்சாராயம் திக்கம் வடி சாலையில் செய்யப்பட்டன. பல்வேறு க்'டமுடையோருக்குப் பணி வழங்க, பணியாளர்களின் க்'டங்கள் கேட்டு உதவத் தெண்டித்துப் பலவேளைகளில் நிவர்த்தியும், சிலவேளைகளில் தீர்க்கமுடியாமையும் ஏற்பட்டுள்ளன என்று அலெக்ஸ் கூறுகிறார். பனையோடு சம்பந்தமான பொருட்களின் உற்பத்தி, கண்காட்சி, ஆய்வு போல்வன ஏற்படுத்த பனை அபிவிருத்திச்சபைத்தலைவரோடு சேர்ந்து செயலாற்றியுள்ளார். அங்கு பணிப்பாளர்களில் ஒருவரான 'மில்க்வைற் அதிபர் கனகராஜா திரு ஆ-மாணிக்கம் போன்றோரின் போக்குகளில், நல்லன நாடல், அலெக்சுக்கு நன்கு பிடிக்கும். பல தமிழ் இளைஞர்கள் மேல் நிலைப்பதவிகளில் திறம்படப்பணியாற்ற உதவியுள்ளார்:- தமிழ் இளைஞர்கள் தம் குறைகள் கூறுமிடத்து சபைத்தலைவரிடமும், அமைச்சிலும் சென்று அவர் களுக்காக நிவாரணம் தேடிக்கொடுத்துள்ளார். கனடாவில் வாழும் அன்ரன் சவிரிமுத்து பிரதம லிகிதராகச் சந்தைப்படுத்தும் பிரிவில் பதவி வகித்தவர். தனக்கு ஏற்பட்ட இடரைக் குறிப்பிட்டபோது தலைவரிடம் பேசி, ஆவன செய்துள்ளது இவரது சலியாத நேர்மைச் செயல் எனச் சவிரிமுத்து கனடாவிலிருந்தே கூறுவது, அலெக்ஸ்சாந்தருக்குச் சாலப்பொருந்துவதை யாமறிவோம். இ.மாசிலாமணி என்ற பதவிநிலை உத்தியோகத்தரை, பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் கணக்கை மேற்பார்வை செய்யவும், நல்ல கணக்காளரான அருள்ராஜைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கு எடுக்கச் செய்து, இன்று யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தரான டாக்டர் மோகனதாசின் சேவையைத் தலைவர் நடராசா பெற உறுதுணையாகவும் இருந்தார். மேலும் பல இளைஞர்கள் பனம்பொருளில் ஆய்வு மேற்கொள்ள, சர்வதேச மகாநாடு பனம்பொருளில் நடத்த பல்வேறு கிராமங்களில் பனை உற்பத்தித்தொழிலை மேற்கொள்ள, சபையினரோடு சேர்ந்து செயற்பட்டதில் பெருமை கொள்கிறார்.

## சமூக சேவை

'ஆசிரியர் முன்பயிற்சிகளில் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்' என்று அலெக்ஸ்மாஸ்ரர் அடிக்கடி கூறுவார் என்று அவரிடம் பயிற்சி பெற்றோர் கூறுவர். யாழ்ப்பாணச் சமூகத்திலே, சிறுபான்மைத் தமிழர்கள் என்று கருதப்படும் தமிழ்மக்கள், நிலமின்றி, நல்லகல்வியின்றி, வாழ்க்கை வசதியின்றி சமூக

அந்தஸ்த்தின்றி அல்லலுறும் நிலைகண்டு, தனிமரம்தோப்பாகாது என்ற நிலையுணர்ந்து, தமிழாசிரியரான பின் சிறுபான்மைத்தமிழர் மகாசபையில் சேர்ந்தார். அவர்களிடம் சாதிக்குள் சாதிபார்க்கும் நிலையின்றி, சிறுபான்மைத் தமிழர் என்று எல்லோரையும் தொகுத்தழைப்பது இவருக்குப் பிடித்தது. அப்போது அதன் தலைவரான M.C.சுப்பரமணியம், அதன்காரிய தரிசிகளாக இ.வே. செல்வரத்தினம் ஆசிரியர், பசுபதி ஆசிரியர் தனாதிகாரியாக C.E.குணரத்தினம் நிர்வாக சபை உறுப்பினர்களாக கே.டானியல், டோமினிக் ஜீவா போன்று வடபிரதேசத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒவ்வொரு அங்கத்தவர் இருந்து நற்சேவை ஆற்றினார்கள். அங்கு, பின்பு கட்சிப் பூசல் ஏற்பட அச்சுவேலி நடராஜா, தெல்லிப்பளை ஆறுமுகம், இ.வே செல்வரத்தினம், அலெக்ஸ்சாந்தர் போன்றோர், இச்சபை சமூக முன்னேற்றத்திற்காக மட்டுமே உழைக்கவேண்டும் என வேண்டியும் கட்சிபேதத்தால் பிளவு ஏற்பட்டது. பின்பு திருவாளர்கள் அலெக்சாந்தர், ஆ-குலேந்திரன் (சமாதான நீதிவான்) க.செல்லத்துரை தெல்லிப்பளை ஆறுமுகம் 'கொந்தராத்துக்காரர்' பொன்றோர் ஒரு குழுவாகச் சேர்ந்து, மகாசபையை விட்டு நீங்கிய தமிழரசுக்கட்சியில் இயங்கிய செனேற்றர் ஜீநல்லையா ஆ.ம. செல்த்துரை போன்றோரை ஒன்று சேர்க்க முயன்றனர். பின்பு பலரும் பல இடங்களுக்குச் சென்றதால், மகாசபையும்-வெகுஜன இயக்கமும் மக்கள் முன்னேற்ற மன்றமும் செயற்பட்டு வந்தன. திரு அலெக்ஸ்சாந்தர் நீர்வேலிச் சிறுபான்மைத்தமிழர் குடில்கள் எரியூட்டியபோது, மாவைக்கந்தன் ஆலயப் பிரவேசச் செயற்பாடுகளிலும் சேர்த்துபாடுபட்டார்.

சிறுபான்மைத்தமிழர் காலங்காலமாக மற்றவர்களால் கீழ்ப்படுத்துவது கண்கூடு என அலெக்ஸ்சாந்தரும் அவரோடு சேர்ந்த மகாலிங்கம், சரவணமுத்து, நாவந்துறைக் குணம் போன்றோர் கூறிக்கட்சிசார்பற்று, சிறுபான்மைத் தமிழர் செயற்படவேண்டும் என்று கருதிக்கூடிப் பேசினர். கணபதிநாதன் ஜே-பி ஆசிரியரும் தமது ஆலோசனை களைக் கூறினார்கள். தமிழர் தம் பெரும்பான்மைக் கட்சிகளும், தமிழர் வளவாழ்வுக்கு வட்டுக்கோட்டை மாநாடு, புத்தூர் மாநாடு பொன்றவற்றில் தீர்மானம் நிறை வேற்றினாலும் எதுவும் தீண்டாமை நீக்க அவர்கள் செயற்பட பெரும்பான்மைத்தமிழர் இடையே வாக்குப் பெறுதல் தடையாயிருந்ததால் செய்ய முடியவில்லை

இதனாலே உருவானதே சிறுபான்மைத்தமிழர் விடுதலை முன்னணி. இதை உருவாக்குவதற்கு அல்லும் பகலும் திரு அலெக்ஸ்சாந்தர் பாடுபட்டார். பெரியகட்சிகள் பெரும்பான்மையானவர்களுக்கு, கோட்டாக்கள், வேலைவாய்ப்புக்கள் ஆளுங்கட்சியில் பெற்றுக்கொடுக்க, அவர்களேன் நேரடியாகப் பெறக்கூடாது என்று சிறுபான்மைத்தமிழர் விடுதலை முன்னியினர் செயற் பட்டனர். 'இந்தக் குறைந்த சாதி மக்களைக்காசுக்கு வாங்கி விடலாம்' எனப் பரவலாகப் பேசப்பட்டதால், நேர்மையான வழியில் சிறுபான்மைத் தமிழர் இயங்கி, அவர்களிடையே நிலவுகின்ற நிலமற்ற, கல்வியற்ற சமூக அந்தஸ்த்தற்ற நிலைபோக்க உருவான சிறுபானமைத் தமிழர் விடுதலை முன்னணி இதன் தலைவராக முன்நாள் செனேற்றர் ஜி-நல்லையாவும், உபதலைவர்களாக, எம்-சிவதாசன் ஆசிரியர் சி-பாலசிங்கம் ஆசிரியர் காரியதரிசிகளாக ம.செ.அலெக்ஸ்சாந்தர் க-செல்லத்துரை ஆசிரியர் தனாதிகாரியாக யேசுநாயகம் ஆசிரியர், பின்னர் சூசைப் பிள்ளை ஆசிரியர் போன்றோர் சேர்ந்துழைத்தனர். இதற்கு பல் வேறு கிராமங்களிலுமிருந்து ஆலோசர்கள் இதன் வழிநின்று சிறுபான்மைத் தமிழர் மத்திலே கல்வி அறிவு பெருக, இரவுப்பாடசாலைகள் அமைத்தல், சனசமூகநிலையங்கள் மூலம் கல்விக்கலந்துரையாடல்கள், வேலை வாய்ப்புகள் பெறுதல், அரசநிர்வாகங்கள் அமைச்சுகளில் ஒரளவு காலத்திற்காகவும், இவர்கள் உயர் கல்வி பெற முன்னுரிமை பெறக் கேட்டல் போன்ற இலக்குகளை ஈட்ட அலெக்ஸ் மாஸ்ரர் முன்னணி மூலம் உழைத்தார். கல்விக்கமி'ன், யாப்புச் சீர்திருத்தக்குழு போன்றவற்றிற்கு சாட்சியங்கள் அளிக்கப்பட்டன. தேர்தல் காலம் வந்தபோது பல கட்சிகளும், முன்னணி தத்தமது கட்சிகளுக்கே வேலை செய்ய வேண்டும் எனக்கேட்டன கடந்த கால அநுபவங்களில் இம்மக்கள் காலங்காலமாய் ஏமாற்றப்பட்டதும், பல முன்னணிக்கட்சிகளில் மத்திய செயற் குழுக்களில் கூட இவர்களுக்கு இடமில்லை என்பதும் காட்டப்பட்டது. இதன் அடிப்படையில் பல கட்சிகளில் சி-தமிழர்கள் மத்திய குழுக்களில் நியமிக் கப்பட்டனர். ஆளுங்கட்சி வடபிராந்திய அபிவிருத்திக்கு நியமித்த பதின்மூன்றுபேரில் முன்னாள் செனேற்றர் பு. நல்லையாவையும், அலெக்ஸ் மாஸ்ரரையும் நியமித்தது. இதனாலே காங்கேசன்துறைச் சீமேந்து ஆலை, ஆசுப்பத்திரிகள், புகையிரதப்பகுதி, தபால்ஊழியர் பகுதி, போக்குவரத்துச்சபை சாரதிகள், நடத்துநர்கள், பீடிக்கைத்தொழிலுக்கான கோட்டாக்கள், பல்கலைக்கழக சிற்றூழியர் பகுதி, லிகிதர்கள், கிராமசேவையாளர், தாதிகள்போன்ற பல்வேறு பகுதிகளுக்கு, எல்லா இடங்களையும் எல்லாச் சமூகமும் சேர்ந்த குழு, ஏற்படுத்தி, அவர்கள் சிபார்சுகளின் பேரில் அப்போதைய அரச பிரதிநிதி யோகேந்திரா துரைச்சாமி மூலமும், யாழ்ப்பாணப்பகுதி மாவட்ட அமைச்சர் U.V. விஜயக்கோன் மூலம் நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இவர்களில் அங்கவீனர்கள், குடும்பத்தில் தந்தையை இழந்தோர், முன்னாள் தொண்டர் பிள்ளைகள் என்பவர்களுக்கு அலெக்ஸ் மாஸ்ரர் முன்னுரிமை கொடுத்து வேலை பெற்றுக்கொடுத்தார். இவர் தொண்டு விசாரித்த பல்வேறு குழுவினரும், விசாரித்து இவரில் பிழைகண்டிலர். பேரிய வேலைகளுக்குச் சிபார்சு செய்தால், அத்தகைய

வேலைகள் சி.தமிழர் பெறுவது கஷ்டமாயிருந்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பலர் இம்மக்கள் பெறும் வேலை வாய்ப்புத்தடுக்கப்பட்டதும் உண்டு என்று அலெக்ஸ் மாஸ்டர் கூறுவார். செயற்படு நிலையில் இருப்போர், கோவை ஒளித்துவைத்து, பெறும் வேலை வாய்ப்புகள் தடுக்கப்பட்டதும் உண்டு. சிறுபான்மைத் தமிழர் மாற்று இயக்கங்கள் கூட, நல்ல சேவையை மதித்து அலெக்ஸ் மாஸ்ரரைக் கண்டிக்கவில்லை. அச்சுவேலியில் தமிழர் கட்சிப் பிரமுகர்கள் பாரளுமன்ற அங்கத்தினர் மத்தியில் பேசும்போது அலெக்ஸ் மாஸ்ரர் கூறிய கதை இங்கு எழுதுவது சாலவும் பொருந்தும். ஒரு ஏழைக் கணவனும் மனைவியும் கூலித் தொழிலாளர். தவழும் பிள்ளையை குடிசையில் விட்டுப் பிழைப்புக்குச் செல்வார்கள். தாய் மற்றவர்கள் வீட்டில் குற்றேவல் செய்து மூன்று மணித்தியாலத்துள் வீட்டுக்கு வந்து விடுவாள். அவர்கள் வீட்டு முற்றத்தில் ஓலை நனையப் போட்டுப் பின் கிடுகு பின்ன, ஒரு சிறிய பொக்குணை (நீருள்ள சிறிது வெட்டப்பட்ட கிடங்கு) உண்டு. தாய் தகப்பன் இல்லாத வேளையில், அப்பிள்ளை தவழ்ந்து சென்று அக்கிடங்குள் விழுந்து உயிருக்குக் கத்துகிறது. பலர் ஓடி வந்து, தமதுகைகளைக் கட்டிக்கொண்டு நின்று, 'இப்பிள்ளை வாழத்தான்வேண்டும். இது வளரத்தான் வேண்டும். இதற்கு உதவி தேவைதான்' என்று சொல்லிக்கோண்டே இருக்கிறார்கள். எவ்வளவு கூட்டங்கள், எவ்வளவு மாநாடுகள், எதுவும் சி-தமிழர்களுக்கு சொந்த நிலம், கல்வி மேம்பாடு, சமூகஅந்தஸத்து வழங்கிற்றா என வினா எழுப்பி இருந்துவிட்டார். பின்பு பேசிய தலைவர்கள், அப்போதைய ஆ:.க்கள் எல்லாம் சி.தமிழர்களின் விடுதலையே நாட்டு விடுதலைக்கு ஆதாரம் எனப்பேசினார்கள் அலெக்ஸ் மாஸரர் மனித சமத்துவமே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதில் அசையாத நம்பிக்கை உள்ளவர். அவரின் இலட்சியத் தலைவர்களாக, ஆபிரகாம்லிங்கன் மாட்டின் லூதர் கிங் போன்றோரும், சர்வோதயக்கொள்கையும் (நலிந்தவனுக்கு முதன்மை) நன்கு பிடிக்கும். இவர் சி.த.விடுதலை முன்னணியை ஏற்படுத்திய ஆரம்ப அங்கத்தவர்களில் முக்கியமான ஒருவர் என்பதிலும், அதனுடைய நேர்மையான சேவையை அக்கால தமிழர் கூட்டணி எம்-பி கதிரவேற்பிள்ளையும்- நேர்மையான இம்முன்னியை மெச்சியுள்ளார். இவரது அணியிலே நேர்மையும், பணவுதவியும் தேவையானபோது செய்த மாணிக்கராசா, மாசிலா மணி, பின்னாள் தலைவராயிருந்து காலம் சென்ற சி.இ.குணரத்தினம், தன்னார்வத்தொண்டாற்றிய பிரான்சிஸ் அண்ணை அரியாலைமேற்கு திலலையம்பலம் மு-செல்லத்தம்பி க. செல்லத்துரை, சி.பாலசிங்கம். மு-சிவதாசன் ச. சரவணமுத்து. யேசுநாயகம் போன்ற பலரின் நாணயமான சேவையை இன்றும் புகழ்கிறார். இத்தகைய நல்லோர் இருந்திரா விடில் சமூகத்திற்கு நன்மையே செய்திருக்க முடியாது. இன்னும் ஏராளமான நல்ல தொண்டர்கள் இன்று ஞாபகத்திற்கு வருவதில்லை யென்றும், அவர்களின் தன்னலமற்ற பணிக்கு இறை ஆசி என்றென்றும் உண்டு என்கிறார் .

## அவர்தம் குடும்பத்தில் அலெக்ஸ் மாஸ்ரர்

அலெக்ஸ் மாஸ்ரர் பெற்றோர் படிப்பறிவில் குறைந்தவர்கள். தந்தை சண்முகம் மனுவல்பிள்ளை பிற்காலத்தில் குடிபோதைக்கு அடிமை ஆனவர். அவர் தந்தையின் தந்தை வல்லிபுரம்பேதுறு கஸ்த்தூரியார் வீதியில் ஆரோக்கிய மாதா கோயில் ஏற்படக்காரணமானவர் ஆவார். இவரது தந்தையான சண்முகம் ஆரம்பத்தில் சைவசமயத்தைச் சாந்தவர். அலெக்ஸ் மாஸ்ரிடம் சைவ, கத்தோலிக்க சமய இடைத்தாக்கம், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை ஆரம்பமுதல் கருத வழிவகுத்தது. கல்வியிலே நாட்டம் கஸ்த்தூரியார் வீதியிலே வாழ்ந்தபோது, ஏற்பட்ட சூழலால் ஏற்பட்டது. அலெக்ஸ் கல்வியில் திறமையுள்ளவராய் இருந்ததால், அவரது ஆச்சி கத்தோலிக்க சுவாமிமாரின் உதவியை நாடினார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சம்பத்திரிசியார் கல்லூாயில் சேர்த்துவிட, இவரது அன்னை றோசம்மா படிப்பிக்க வேண்டும் என்ற முயற்சியால் எஸ்-எஸ் சி வரை தானே முயன்று உழைத்துப் படிப்பித்தார். முதல் தொழில்சார் கல்வி கற்க. மற்றவர் கைவிட்டபோதும், கரம்பனைச்சோந்த சூசைப்பிள்ளை அடிகளார், ஆசிரியர் கல்லூரிக் காசு, அவரது அண்ணரிடம் பணம் வாங்கிக்கட்டினார். இவருக்கு உதவிய குருக்களின் உதவியை இன்றும் மறந்திலர்

குடும்பத்தில் மூத்தபிள்ளையான இவருக்குப் பின் சிங்கராசா, தேவமலர், றெஜினா, நீற்றம்மா, செல்வதி மேரிறோஸ் என்ற சகோதர சகோதரிகள் இருந்தனர். இவர்களில் சிங்கராசா ஆனைக்கோட்டையைச் சார்ந்த பசுபதி பரமேஸ்வரியையும், தேவமலர் மானிப்பாயைச் சார்ந்த தம்புதுரைராஜாவையும் மணஞ் செய்தனர். அலெக்ஸ் மாஸ்ரர் திருமணம் சற்றுப் புரட்சிகரமானது அன்றைய சாதிப்பிரச்சனை, இவர் விரும்பிய பெண்ணான மேரி மெற்றில்டாவை, திருமணஞ் செய்ய விடாது தடுக்கப் பார்த்தது. சாதிமாறிக் கல்யாணம் செய்வது சமூகப்பிரச்சினையாகிவிடும். 1960 செப்டம்பர் 3ம் திகதி யன்று, திரு கே-நடராஜா ஆர்.பி குணரத்தினம் ஆகியோர் உதவியுடன் பதிவுத்திருமணம் செய்தார். அப்போது சி.இ.குனரத்தினம், துன்னாலைச் செல்லையா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் உதவியுடன், அத்துவக்காத்து ஜெயசிங்கம் பொலிசில் சரணடைவித்து மீட்டார். முறையான கோயிற்றிருமணம். அடுத்த கிழமை புனித ஆசீர்வாதப்பர் கோவிலில் நிறைவேறியது. நிறைவேற்றிய அல்பிரட் அடிகளார், இறுதி நேரத்திலும் மேரிமெற்றில்டாவின் பெற்றோர் எழுதிய கடிதத்தைக்

காட்டி விருப்பமில்லையெனக் கூறிப் பிரிக்க முனைந்தார். மேரிமெற்றில்டா உறுதியாக நிற்கவே கோவில் திருமணம் நிறைவேறியது. குடும்பத்தில் ஒற்றுமை நிலவினும், சகோதரங்களின் திருமணங்கள், மேரிமெற்றில்டா முன்னின்று செய்து வைத்ததால் அலெக்ஸ் மாஸ்ரர், தனது சகோதரங்களின் பிரச்சினைகளையும் தீர்த்தவர் ஆனார். படிப்பித்தல், சமூகசேவைகளுக்காகக் கிராமம், கிராமமாய்ச் சென்று, வீட்டுக்கு இரவு வேளை வரும்போது இவரது பிள்ளைகள் நித்திரை செய்தவிடுமாம். சாதிப்பிரச்சினையான திருமணமானதால், இவரது பெண்சாதியின் பெற்றோர், சகோதரர் உறவின்றியே இருந்தனாராம். இவரது பிள்ளைகளின் திருமணங் களின்போது பல உறவினர் வந்து பங்குபற்றினாலும், இவரது மனைவியின் பெற்றோரும், உடன் சகோதர சகோதரியும் வரவில்லையாம். இவருக்கு ஏழுபிள்ளைகள் உண்டு. மூத்தமகன் ராஜன், கனடியயோர்க் கல்கலைக்கழகப்பட்டதாரி. இவர் கனடிய அரசின் வரிப்பகுதியில், ஓர் அலுவலராகப் பணிபுரிகிறார். அவர் பெற்றோரையும் சகோத சகோதரிகளையும் 'ஸ்பொன்சர்' முறையில் கனடாவிற்கு அழைத்துள்ளார். இரண்டாவது மகண் அன்ரன் கீதராஜ் பொறியியலாளராகவும், முன்றாவது மகன் ஆசிஜெயராஜா கனடாவில் 'A'த்தர மோட்டர் திருத்தநராகவும் மதனா, ஈழத்தில் புள்ளியியலாளராகவும், இங்கு வோட்டலூப் பல்கலைக்கலக மாணவனாகவும், மரியராஜினி கணக்கியலில் டிப்ளோமா பெற்றுப்பகுதிநேர லிகிதராகவும், வார விடுமுறையில் தமிழ் மொழி ஆசிரியராகவும், யூட்சகீரன் பொறியியலாளராகவும் மேலும் முதுமணி கணினியில் கற்பவராகவும், கடைசி மகளான யாழினி யோர்க் பல்கலைக்கழகத்தில் டீ.ளுஉ.ஊயும் ஆசிரிய பயிற்சியும் படிப்பவர் ஆகவும் இருக்கிறார்கள். ஐந்து பிள்ளைகள் திருமணம் செய்துள்ளனர். இவருக்குப் பத்துப்பேரப்பிள்ளைகளும் உண்டு. பண்பும், பணிவும், இறைவிசுவாசமும், தெய்வபயமும், பக்தியும் இரக்கம் கொண்ட உள்ளமும் இக்குடும்பத்தினரில் நான்கண்ட அணி, என்று இக்கட்டுரை எழுதுபவன் என்ற முறையில் கூறமுடியும்

## அலெக்ஸ் மாஸ்ரர் ஈழத்திலும் கனடாவிலும் ஆற்றிய எழுத்துப்பணியும் பொதுப்பணியும்

கல்வி, உளவியல், தமிழ் மொழிகற்றல் கற்பித்தல் சம்பந்தமான கட்டுரைகள் பல. ஆசிரியர் கலாசாலைச் சஞ்சிகைகளில் பத்திரிகைகளில், தேசியகல்வி நிறுவக மொடு யூல்களில் (சுயகற்கை நெறிப்பாடநூல்) எழுதியதாலும், பல்வேறு கருத்தரங்குகள் ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் நடத்தியதாலும், கனடாவிற்கு 1993ல் புலம்பெயர்ந்த பின், கனடிய கல்வி கற்பிற்கும் சான்றிதழ், சிரே'ட வகுப்பிற்குக் கற்பிக்க கிடைத்தது. கனடிய அநுபவம் இல்லாததால் வேலை வாய்ப்புப் பெற, எமறிக்கல்லூாயீல் தொண்டர் ஆசிரியராகக் கற்பித்தார். அங்கு அவர்தம் கற்றல் நிலையத்திற்கு வரும், மாணவர்களுக்கு இரண்டாம் மொழி, கணிதம், சமூகஇயல்-வரலாறு போன்ற பாடங்களில் வழி நடத்தினார். பின்பு பல்வேறு தர மாணவர்களுக்குத் தமிழ்மொழி, முதலில் தொண்டராசியராகவும் பின்பு ஆசிரியராகவும், கத்தோலிக்க கல்விச் சபை றொறொன்ரோ, அரச கல்விச்சபை றொறொன்ரோ, பீல் கல்விச்சபை போன்ற மூன்று கல்விச்சபை நடத்திய வெளியீடுகளுக்கு பிரதம ஆசிரியாராகவும் ஆசீரியர்களுக்கான கருத்தரங்குகளில் பங்குபற்றி, மிகக்கூடிய புள்ளிகள் பெற்றாலும், இவரது முதிர்ந்த வயது நாளந்த பாடசாலைகளில் கற்பிக்கும் வாய்ப்பைக் குறைத்தது. ஈழத்தில் தமிழ் ஆசிரியர், ஆங்கில ஆசிரியர், பயிற்றப்பட்டபட்டதாரி ஆசிரியர், பண்டிதர், விரிவுரையாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர் போன்ற கல்விப் பணிகளையும், பொதுப்பணிகளில் பணிப்பாளராக இரண்டு சபைகளிலும் பெற்ற அறிவும் ஆற்றலும், இங்கு தமிழ்ப்பிள்ளைகள் பணிப்பாளராக இரண்டு சபைகளிலும் பெற்ற அறிவும் ஆற்றலும், இங்கு தமிழ்ப்பிள்ளைகள் மத்தியிலும் தமிழ்க்கலைக் கல்லூரிப்பொறுப்பாளர், திரு-எஸ் இராசரத்தினத்தின் மட்டிலும் நன்மதிப்பை ஏற்படுத்தியது. இதனால் இவர் தமிழ்க்கலைக்கல்லூரித்தமிழ் மொழிப்பகுதியின் பொறுப்பாளராக எட்டாண்டுகள் வரை கடமையாற்றியுள்ளார். அப்போது தமிழ்க்கலைக்கல்லூரியின் கீதம் இவர் இயற்றி அளித்தது, இன்றும் அழகுடன் பாடப்படுகிறது. இங்கு தமிழ்மொழிக்கலைத்திட்டம், தமிழ் ஆசிரியர் கருத்தரங்குகள் நடத்தி வழிகாட்டியுள்ளார். தமிழ் மொழிக்கண் காட்சி மாணவர் செயற்றிட்டங்கள், இலக்கிய, இலக்கணக்கட்புல செவிப்புல சாதனங்கள் இவற்றிலே இவரது வழிநடத்தல் மிகமாண்புடையது. அகத்திலக்கணத்தில் இவர் வழிகாட்டலில் மாணவர் செய்த செயற்பாடு மிகமதிப்பையும், பார்வையாளர் கருத்தையும் கவர்ந்ததை வெள்ளையரான அதிபர் மோலேயும், பா.உ ஜிம் கரியானியும் புகழ்ந்துள்ளார்கள்.

அலெக்ஸ் மாஸ்ரர் 2002 மாசி27ல் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அது வரையில் அவரின் தமிழ்மொழிச் செயற்பாடுகள், மாணவர் மத்தியிலே தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவையும், தமிழில் ஆக்க இலக்கிய செயற்பாடுகளையும் வளர்க்க உதவியது. தமிழ்க்கலைத்தொழினுட்பக்கல்லூரி அமரிக்காவில் தமிழ் ஆசிரியர்களுக்கு நடத்திய தமிழ்மொழி கற்றல்கற்பித்தல் செயலரங்குகளில், நீயூஜேசி, சிக்காக்கோ ஆகிய இடங்களில் புலம்பெயர்ந்த நாட்டில் தமிழ்கற்பிக்கும் முறைகளும், தமிழ்மொழிக்கலைத் திட்டமும் என்ற பொருளில் கருத்தரங்கு நடத்தி ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். மொன்றியலில் நடந்த ஆசிரியர் கருத்தரங்கில், புலம்பெயர்ந்த நாட்டின்

தமிழ்மொழிகற்பித்தலும், ஏற்படும் இடர்களும், சீராக்கும் என்ற கலந்துரையாடலால், ஆசிரியர்கள் தெளிந்த கற்பித்தல் அறிவும், உத்திகளும் அறிந்ததைத் தம் நன்றியுரையில் கூறினர்.

இவரது தமிழ்மொழி அறிவு, அநுபவம் இங்குள்ள தமிழ்ச் சான்றோர்களான ஈழத்துப் பூராடனார், பொன்கனகசபாபதி, இ.வே.செல்வரெத்தினம். வித்துவான் செல்லுத்துரை, வித்துவான் செபரத்தினம், வித்துவான் ஞானரத்தினம், போன்றோரைக்கவர்ந்தது. தமிழ்க்கலைக்கல்லூரி மனோன்மணியும் சுந்தரனார் பல்கலைக் கழகத்தோடு இணைந்து நடத்தும் டீ.யு.வகுப்பு, தொண்டர் ஆசிரியராக தமிழ் இலக்கணத்தில் யாப்பு, அணி இலக்கணப் பகுதிகள் கற்பித்து, பல கவிஞர்களை ஏற்படுத்தியதில் மிக இன்பமடைகிறார். ஒருசந்ததியினரின் ஆற்றலும், அறிவும் மற்றச் சந்ததியினருக்குக் கையளித்த நிறைவு தன்நெஞ்சுக்கு உண்டு என்று கூறி மகிழ்கிறார்.


அலெக்ஸ் மாஸ்ரர் நோத்யோர்க் கல்விச்சபை பொன் கனகசபாபதி தலைமையில் எழுதிய ஏழு தமிழ்மொழிப் பாடநூல்களின் ஆசிரியர்களில் ஒருவாராய் இருந்து எழுதியுள்ளார் திரு சு.சயானந்தராஜா ஆசிரியர் உத்தரவு பெற்று கத்தோலிகக்க கல்விச்சபை எழுதிய மூன்று தமிழ்ப்பாட நூல்களின் பிரதம ஆசிரியராய் பண்டிதர் அலெக்ஸ் இருந்து அக் குழுவில் மற்றைய ஆசிரியர்களான திரு சயானநதராஜா-குலசிங்கம்-பெனடிக்ற்-திருமதி சோபனி லோறன்ஸ்-திருமதி றொனிற்றா ஜெறாட் இவர்களுடன் சேர்ந்து எழுதிய நூல்கள் மிகப்பயன் உடையன எனக் கத்தோலிக்க கல்விச்சபை ஆரம்பக்கல்வி முகவர் அடலினோவும் தமிழ் ஆசிரியர்களும் கூறுகின்றனர். மதம் -சம்மதம் சஞ்சிகையில் 'வேற்றுமையில் ஒற்றுமை' 'இயேசுவின் திரு மொழிகளும் கல்விக் கருத்துகளும்' போன்ற பல்வேறு கடடுரைகள் எழுதி வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். இளைஞன் 'YOUTH'என்ற ஆங்கில மாத சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து கனடிய கலைத்திட்டத்தில் வேற்றுமையில் ஒற்றுமையேவேண்டும் புலம்பெயர்ந்த நாட்டில் கல்வியின்நோக்கம் கவிதைகள், கீதை கூறும் பொருள் போல்வன ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தகவல் சஞ்சிகையில் வெற்றிபெறு வதற்கான பல அறிவியற் கட்டுரைகள், உலகத்தமிழர் பண்பாட்டு மலரில், திருக்குறள் மலர் தமிழ்க்கலைக்கல்லூரி மலர் போன்றவற்றில் பல புலம் பெயர் நாட்டில் தமிழ்க்கல்வி பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதிப்பலரின் பாராட்டுதல்களைப்பெற்றுள்ளார். இவரது தன்னார்வத் தமிழ்ப்பணிக்கும், சமூகத்தொண்டுக்கும் ஜிம் கரியானிஸ் கனடிய பா.உ..மேரி அன்னா. உள்நாட்டமைச்சர் கனடா, தமிழ்க் கலைக் கல்லூரி றொறொன்ரோ சம்பத்திரிசியார் பழைய மாணவர் சங்கம் றொறொன்ரோ தமிழ்கத்தோலிக்க சமூக சங்கம் ஆகியன கேடயங்களும் சான்றிதழ்களும் அளித்துக் கௌரவித்தன. தமிழர் தகவல் ஆசிரியர் திருச்செல்வம் இவரின் தமிழ்ப்பணிக்குத் தங்கப் பதக்கமும் சான்றிதழகமும் பெரியோர்களால் 2000ம் ஆண்டு தகவல் சஞ்சிகை விழாவில் வழங்கி கௌரவித்தனர்.

கனடாவில்வதியும் இவரது முன்னாள் மாணவர்களான திரு எஸ் சந்திரபோஸ் ஆசிரியர், திரு மனுவேல் யேசுதாசன் (கனடிய சட்டத்தரணி) போன்றோர் நன்றி மறவாது இந்தியாவிலிருந்து கற்பித்தலுக்கு உதவும் நூல்கள் வாங்கி வந்து அளித்து தம் நன்றி தெரிவித்துள்ளனர். இவரிடம் கற்றோர் நல்நிலையில் இங்கும் இருக்கின்றனராம். றொறொன்ரோ மாநிலத்தில் தமிழர் தம் எல்லாச் சபைகளிலும் பங்குபற்றி பல்வேறு தமிழ்ச் சேவைகள் செய்துள்ளார். வானொலியில் தமிழ்நீதிமன்ற நடுவராய் இருந்து பட்டிமன்றம் நடததியுள்ளார். நோத்யோர்க் தமிழ்ச்சங்கம், றொறொன்ரோத் தமிழர் கத்தோலிக்க சபை, உலகத்தமிழர் பண்பாட்டுக்கழகம் போன்றவற்றில் செயலராகவும் மற்றவற்றில் செயற்படு அங்கத்தவராகவும் இருந்து தன்னார்வத் தொண்டு செய்துள்ளது அவர்தம் சிறப்பு. அவர் கேட்டாலும் உடனே மரபுக்கவிதை எழுதித்தருவது அவர்தம்திறன். 'அன்புமக்களே' என்ற கத்தோலிக்க தமிழ்ச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக ஏழாண்டுகள் இருந்து, தனது நேரத்தையும், தன்செலவில் வந்து பத்திரிகை எழுதுவதற்கும் தமது இயலாமைகாலத்திலும், வந்து பணியாற்றியதை என்னால் மறக்கமுடியாது. அவர் அன்பு மக்களேயில் எழுதிய பாடல்களும் அவை கூறும் தத்துவங்களும், என்றும் தமிழ்மக்கள் மத்தியில் நின்று நடம்புரியும்


1959முதல் இன்று வரை 2002 கற்பித்தலுக்கும், தமிழ் மொழிக்கும் பல்வேறு பதவிகளில் சேவையாற்றிக்கொண்டு செய்த அலெக்ஸ் மாஸ்டர் கலாநிதி-தமிழ்க் கல்வியில்-வழங்கப்பட்டது அவரது தன்னார்வத் தொண்டுக்கு வழங்கப்பட்ட பரிசு. இறை ஆசீர் அவருக்கு என்றும் ஆகுக என்று அலெக்ஸ் மாஸ்ரர் என்ற நல்லவரை, நல்லசமாரித்தன்போல் அங்கும் இங்கும் சேவையாற்றிவரை வாழ்த்துகிறேன்.

பலலாண்டு அவர் நோயற்ற வாழ்வு வாழ்ந்து
தமிழ்மொழித்தொண்டும், இறைத்தொண்டும்
செய்யவேண்டுமென
இறையில் சரணம் கூறி வாழ்த்துகிறேன்!

சகோதரன் **அன்பு மக்களே டேவிட்**
அன்பு மக்களே நிர்வாக ஆசிரியர்
இறைபணியாளன் றொறொன்ரோ



தமிழ்க்கலைக் கல்லூரி-
விழாநாயகரின்
வகுப்பு மாணவருக்கு
இலக்கணப்பரிசு-2000





1997-98ல் ஆசிரியரிடம்
கல்வி கற்ற OAC
மாணவர்கள் நடித்த "கண்ணகி
வழக்குரை காதை" நாடகப்
போட்டியில் முதற் பரிசு
பெற்றது.


நல்லதொரு குடுமபம்